தமிழகம் முழுவதும் பின்கோடு வாரியாக
நிருபர்கள் தேவை (Freelancer)
நமது ஆனந்த பாஸ்கர், பேப்பர்பாய் மற்றும் தமிழ்நாடுஇபேப்பர் நாளிதழ்களுக்கு பணியாற்ற தொண்டுள்ளம் கொண்ட தன்னார்வலர்கள் (freelancer) அடிப்படையில் நிருபர்களாக பணியாற்ற, மக்கள் தொடர்பு அதிகம் உள்ள பத்திரிக்கை துறையில் ஆர்வம் உள்ளவர்கள், தமிழகம் முழுவதும் பின்கோடு வாரியாக நிருபர்கள் தேவை.
NEWS
www.vaniks.com
No Monthly Commitments
9337501889, 7789941009


# தமிழ்நாடு இபேப்பர்.காம்

www. tamilnaduepaper.com


MLM SOFTWARE Company
- Binary MLM Plan
- Single Leg MLM Plan
- Autopool MLM Plan
- Unilevel MLM Plan
- Matrix MLM Plan
- Stairstep MLM Plan
- Party MLM Plan
- Board MLM Plan
- Generation MLM Plan

PRICE STARTING Rs.9999/-
+91 98537 19337

CHENNAI | Volume- 3 | Issue:229 | 05-03-2026 | வியாழக்கிழமை | Free E- Paper | ● சென்னை ● மதுரை ● கோவை ● திருச்சி

## இன்றைய பஞ்சாங்கம்

வியாழக்கிழமை
(5-03-2026)

சூரிய உதயம் 6.27

திதி:
துவிதியை இரவு 604 வரை பிறகு திருதியை.

நட்சத்திரம்:
உத்திரம் காலை 9.09 வரை பிறகு அஸ்தம்.

யோகம் :
மரண/சித்தயோகம்

நல்ல நேரம்
காலை 9-10 மணி
மாலை4-5 மணி

இராகு காலம்
நண்பகல் 1.30-3.00 மணி

எமகண்டம்
காலை 6,007,30 மணி

ஜோதிட நிபுணர்:
இராஜபாளையம்
இராமமூர்த்தி
செல்: 8189908040

**மத்திய கிழக்கு நாடுகளில் போர் பதற்றம்: ஏற்றுமதி தடைபட்டதால் ஏலக்காய் விலை குறைந்தது**

(செய்தி உள்ளே)

# காங்கிரசுக்கு 28 இடங்கள் ஒதுக்கீடு: திமுக கூட்டணியில் ஒப்பந்தம் கையெழுத்து!

## ஒரு ராஜ்யசபா சீட்டும் ஒதுக்கப்பட்டுள்ளது



**சென்னை, மார்ச்.5:**

சட்டப்பேரவைத் தேர்தல் மற்றும் மாநிலங்களவைத் தேர்தலுக்கான தொகுதிப் பங்கீடு ஒப்பந்தத்தில் திமுக மற்றும் காங்கிரஸ் கட்சியின் தலைவர்கள் கையெழுத்திட்டனர். இதன்படி காங்கிரஸ் கட்சிக்கு 28 சட்டப்பேரவைத்தொகுதிகளும், ஒரு ராஜ்யசபா சீட்டும் ஒதுக்கப்பட்டுள்ளது.

சென்னை அண்ணா அறிவாலயத்தில் திமுக தலைவரும் முதல்வருமான மு.க.ஸ்டாலின், திமுக எம்.பிக்கள் கனிமொழி, டி.ஆர்.பாலு, காங்கிரஸ் தலைவர் செல்வப்பெருந்தகை, தமிழக காங்கிரஸ் பொறுப்பாளர் கிரிஷ் சோடங்கர் ஆகியோர் இன்று சந்தித்து சட்டப்பேரவைத் தேர்தல் மற்றும் மாநிலங்களவைத் தேர்தலுக்கான தொகுதிப் பங்கீடு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டனர்.

நேற்று திமுக மற்றும் காங்கிரஸ் இடையே மேற்கொள்ளப்பட்ட உடன்படிக்கையின்படி சட்டப்பேரவைத் தேர்தலில் காங்கிரஸ் கட்சிக்கு 28 சட்டப்பேரவைத்தொகுதிகளும், ஒரு ராஜ்யசபா சீட்டும் ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த உடன்படிக்கையில் திமுக தலைவர் ஸ்டாலின் மற்றும் தமிழக காங்கிரஸ் தலைவர் செல்வப்பெருந்தகை ஆகியோர் கையெழுத்திட்டனர்.

திமுகவுடனான உடன்படிக்கையை தொடர்ந்து, மாநிலங்களவைத் தேர்தலுக்கான வேட்பாளரை நாளைக்குள் காங்கிரஸ் அறிவிக்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனையடுத்து நாளை மாநிலங்களவைத் தேர்தலுக்காக காங்கிரஸ் வேட்பாளர் மனுத்தாக்கல் செய்வார் என்றும் தகவல் வெளியாகியுள்ளது. தமிழகத்தில் காலியாகவுள்ள 6 இடங்களுக்கான மாநிலங்களவை இடங்களுக்கு வேட்புமனுத் தாக்கல் செய்ய நாளை கடைசி நாள் என்பது குறிப்பிடத்தக்கது.

## மாநிலங்களவை தேர்தல்: வேட்பாளர்களை அறிவித்தது திமுக!

தமிழ்நாடு, பீகார் உள்ளிட்ட 10 மாநிலங்களில் காலியாகும் 37 மாநிலங்களவை இடங்களுக்கான தேர்தல் மார்ச் 16-ஆம் தேதி நடைபெற உள்ளது. தமிழ்நாட்டில் இத்தேர்தலுக்கான வேட்புமனு தாக்கல் நாளையுடன் முடிவடைகிறது.

இந்நிலையில் திமுக தனது வேட்பாளர்களை அறிவித்துள்ளது. அதன்படி திமுக தரப்பில் இருந்து திருச்சி சிவா, பேராசிரியர் கான்ஸ்டன்டைன் ரவீந்திரன் வேட்பாளர்களாக அறிவிக்கப்பட்டுள்ளனர். இதுதொடர்பாக திமுக வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், "2026 மார்ச் 16 அன்று நடைபெறவிருக்கும் மாநிலங்களவை உறுப்பினர்களுக்கான தேர்தலில், திராவிட முன்னேற்றக் கழகத்திற்கான 4 இடங்களில், இந்திய தேசிய காங்கிரஸ் கட்சிக்கு ஒரு இடமும், தேசிய முற்போக்கு திராவிட கழகத்திற்கு ஒரு இடம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மீதமுள்ள 2 இடங்களில் திராவிட முன்னேற்றக் கழக வேட்பாளர்களாக திருச்சி சிவா, எம்.ஏ., பி.எல்., பேராசிரியர். ஜே.கான்ஸ்டன்டைன் ரவீந்திரன், எம்.இ.எம்.பி, எம்.சி.ஏ,எம்.எல், பி.எச்டி, ஆகியோர் போட்டியிடுவார்கள் என அறிவிக்கப்படுகிறது." என தெரிவிக்கப்பட்டுள்ளது.

தேமுதிக தரப்பில் சுதீஷ் போட்டியிடுவார் என எதிர்பார்க்கப்படுகிறது. காங்கிரஸ் தரப்பில் யார் போட்டியிடுவார் என்பது இன்றிரவு அல்லது நாளை காலைக்குள் தெரியவரும்.

## திருச்சி வரும் பிரதமர் மோடி! 11 ஆம் தேதி பொதுக்கூட்டம்!

**சென்னை, மார்ச்.5:**

தமிழக சட்டப்பேரவைத் தேர்தலில் பாரதிய ஜனதா, அதிமுகவுடன் கூட்டணி அமைத்து போட்டியிடுகிறது. இந்தக் கூட்டணியில் பாமக (அன்புமணி அணி) அமமுக, தமாகா, இந்திய ஜனநாயக கட்சி, புதிய நீதிக்கட்சி, பெருந்தலைவர் மக்கள் கட்சி உள்ளிட்டவை இடம் பெற்றுள்ளன.

இந்தக் கூட்டணியில், இன்னும் தொகுதிப் பங்கீடு குறித்த பேச்சுவார்த்தை தொடங்கப்படவில்லை என்றாலும், பாஜகவுக்கான தொகுதிகள் குறித்து தலைவர்கள் மட்டத்தில் பேச்சு வார்த்தை நடைபெற்று வருகின்றன.

நேற்று முன்தினம் தில்லி சென்ற அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி, இதுகுறித்து மத்திய உள்துறை அமைச்சர் அமித்ஷாவை சந்தித்து பேசினார்.

அதனை தொடர்ந்து மதுரையில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் பேசினார்.

இந்நிலையில் மூன்றாவது முறையாக மீண்டும் பிரதமர் நரேந்திர மோடி தமிழகம் வருகிறார். திருச்சியில் 11-ந் தேதி நடக்கும் பொதுக்கூட்டத்தில் கூட்டணி கட்சியினரை ஆதரித்து பிரதமர் உரையாற்றுகிறார்.

இந்த கூட்டத்தில், அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி உள்பட கூட்டணி கட்சி தலைவர்கள் பங்கேற்று பேச இருக்கின்றனர். அதற்கான ஏற்பாடுகளில் தமிழக பாஜக தலைவர் நயினார் நாகேந்திரன் மற்றும் நிர்வாகிகள் ஈடுபட்டு வருகின்றனர்.

# "திமுக ஆட்சியில் தண்ணீர் இல்லாமல் தமிழ்நாடே திவால் ஆகப்போகிறது"

## தஞ்சையில் விஜய் பேச்சு



**சென்னை, மார்ச் 5:**

"மணல் கொள்ளைக்குக் காரணமான மணல் மாஃபியா குழுக்களுக்கு ஆதரவு கொடுத்து, நிலத்தடி நீர் மீது அக்கறையே இல்லாத திமுக ஆட்சியில் தண்ணீர் இல்லாமல் தமிழ்நாடே திவால் ஆகப்போகிறது," என தவெக தலைவர் விஜய் தெரிவித்துள்ளார்.

மேலும், "இத்தேர்தலில் டெல்லி அணி, அந்த அணி, இந்த அணி என எல்லா அணியும் நொறுங்கும்.. தவெக அடித்து நொறுக்கும்" என்று விஜய் நம்பிக்கை தெரிவித்தார்.

தஞ்சாவூர் மாவட்டம் செங்கிப்பட்டி அருகே நடைபெற்ற தவெக நிர்வாகிகள் மற்றும் பிரசாரக் கூட்டத்தில் அக்கட்சியின் தலைவர் விஜய் பேசினார். அப்போது அவர் , "வேலூர் கூட்டத்தில் தமிழ்நாடுதான் விஜய், விஜய்தான் தமிழ்நாடு என்று நான் கூறினேன். தமிழக மக்களின் உண்மையான பிரதிநிதி நாம் என்பதற்குதான் அப்படி கூறியிருந்தேன்.

அதோடு, விஜய் vs ஸ்டாலின் சார் எனக் கூறியிருந்தேன். தமிழ்நாடு சட்டப்பேரவைத் தேர்தலுக்கு டெல்லியை பற்றி ஏன் பேச வேண்டும் என்று கேட்டிருந்தேன். உடனே விஜய், பாஜகவிற்காக பேசுவதாக நான் பேசியதை திரித்துப் பேசுகின்றனர். சிறுபான்மை சகோதரர்களை பயமுறுத்தி ஏமாற்று வேலை செய்தவர்கள், அதை இனிமேல் செய்ய முடியாது என தெரிந்துகொண்டு நான் பேசுவதை திரித்துப் பேசி தில்லுமுல்லு வேலை செய்கின்றனர்.

சென்னையில் 'டெல்லி, டெல்லி' எனக் கூவுகிறார்கள், அடிக்கிற கொள்ளைக்கு ரெய்டு வந்தால் டெல்லிக்கு வெள்ளைக் கொடி பிடிக்கிறார்கள். டெல்லி அணி, அந்த அணி, இந்த அணி என எல்லா அணியும் இந்த தேர்தலில் நொறுங்கும்.. தவெக அடித்து நொறுக்கும். கிரிக்கெட்டில் விசில் போடுறது நம்ம சிஎஸ்கே. வரவிருக்கும் தேர்தலில் விசில் போட போவது நம்ம தவெக.

'ஓம் சக்தி, பராசக்தி ,திமுக ஒரு தீய சக்தி..' என சின்ன குழந்தைகள் கூட சொல்ல ஆரம்பித்து விட்டார்கள்.

தமிழகம் தான் தவெக. தவெக தான் தமிழகம். இது தேர்தலுக்கான உறவு இல்லை. இது இயற்கையாக உருவான உறவு. அதை நான் உணர்ந்திருக்கிறேன். எனக்கும் என்னுடைய மக்களுக்கும் நடுவில் யாராலும் நுழைய முடியாது. அம்மா - பையன், அப்பா - பையன், அண்ணன் - தங்கை, அக்கா - தம்பி உறவு இது. இது ஆழமான உறவு என்பதை தமிழக மக்கள் உணர்ந்திருப்பார்கள். மற்றவர்களுக்கு இது தேர்தல், ஆனால் எனக்கும் என்னை நேசிக்கும் மக்களுக்கும் இது 'எமோஷன்'.

'தண்ணீர் இல்லாமல் தமிழ்நாடு திவால் ஆகப்போகிறது' என்று சமீபத்தில் ஒரு கட்டுரை படித்தேன். உண்மையில் மிகவும் வருத்தமாக இருக்கிறது. காரணம், நிலத்தடி நீரை பாதுகாக்காமல் இருப்பதுதான்.

மணல் கொள்ளைக்குக் காரணமான மணல் மாஃபியா குழுக்களுக்கு ஆதரவு கொடுப்பது உங்களுடைய திமுக அரசு. உங்களுடைய ஆட்சியில் தமிழ்நாடே திவால் ஆகப்போகிறது.

விவசாயிகள் உற்பத்தி செய்த நெல் மூட்டைகள் வீணாகிறது. இதற்கு என்ன நடவடிக்கைஎடுத்தீர்கள்?மாறாக, விவசாயிகளை குண்டர் சட்டத்தில் தான் போடத் தெரியும்.

தண்ணிக்குள்ளயே சென்று அணைகளை ஆராய்வது வரைக்கும் எனக்குத் தெரியும்.. அமைதியாக இருப்பதால் எனக்கு எதுவும் தெரியாது என்று நினைக்காதீர்கள். ஒருவர் அமைதியாக இருப்பதால் அவருக்கு ஒன்றும் தெரியாது என்றில்லை.

விஜய்க்கு ஒரு வாய்ப்பு கொடுப்பீர்கள் தானே; விஜய்யை நம்புகிறீர்கள் தானே. ஒவ்வொரு வீட்டிலும் விசில் சத்தம் கேட்கும் தானே. அந்த விசில் சத்தம் ஒவ்வொரு பூத்திலும் புயலாக ஒலிக்கும் தானே என்றார்.

## திருப்பதியில் விபத்து; ஒரே குடும்பத்திலுள்ள 5 பேர் பலி



**சித்தூர், மார்ச் 5:**

கர்நாடகாவின் பெங்களூரு நகரில் இருந்து திருப்பதி கோவிலுக்கு சாமி கும்பிட ஒரு குடும்பத்தினர் காரில் புறப்பட்டு சென்றனர். அவர்களுடைய கார், ஆந்திர பிரதேச மாநிலம் சித்தூர் மாவட்டத்தின் பாலமனேரு பகுதியருகே இன்று காலை வந்தபோது, நிறுத்தி வைக்கப்பட்டிருந்த லாரி மீது மோதியது.

இந்த விபத்தில் ஒரே குடும்பத்திலுள்ள 5 பேர் உயிரிழந்தனர். அவர்கள் மோகன்தாஸ், நாகராஜா ராவ், குஸ்மா, ஜெயந்தி, பூஜா என அடையாளம் காணப்பட்டு உள்ளனர். கார் விரைவாக சென்றுள்ளது என்றும் மற்றும் கார் ஓட்டுநர் தூக்க களைப்பில் இருந்திருக்க கூடும் என போலீசார் சந்தேகம் தெரிவித்துள்ளனர். இதுபற்றி வழக்கு பதிவு செய்து விசாரிக்கப்பட்டு வருகிறது.

ADVERTISING
FOR ALL TYPES OF NOTICE ADS
- Public Notice
- Legal Notice
- Tender Notice
- Society Notice
- Loss of Share
- Merger
- Acquisition
- AFR, UFR, etc.

for just Rs. 249/- only in Daily Print Paper
ஆனந்த பாஸ்கர்
9337501889, 7789941009
Email: anandabhaskarnews@gmail.com

Follow our WhatsApp Channel
PADMA DIGITAL BROADCAST
Tamilnadu Epaper
WhatsApp channel
Scan this QR code using the CAMERA to view or follow our Channel

## திருக்குறள் குறள்-549

**குடிபுறங் காத்தோம்பிக் குற்றங் கடிதல் வடுவன்று வேந்தன் தொழில்**



குடிகளைப் பிறர் வருந்தாமல் காத்து, தானும் வருந்தாமல் காப்பாற்றி, அவற்களுடைய குற்றங்களைத் தக்க தண்டனையால் ஒழித்தல், அரசனுடைய தொழில் பழி அன்று.

## சிந்திக்க ஒரு நொடி



பிடித்தவர்கள் செய்த
சின்ன தவறை மறந்துவிட
வேண்டும்...
அதற்காக
பிடித்தவர்களையே
மறந்து விடக்கூடாது
அதுவே உண்மையான
நட்பு.,,

**உஷா முத்துராமன்**

## திமுக தலைமையிலான கூட்டணியில் இணைய ஆம் ஆத்மி கட்சி விருப்பம்



தமிழகத்தில் விரைவில் நடைபெறவுள்ள சட்டப்பேரவைத் தேர்தலை முன்னிட்டு, அரசியல் களம் சூடுபிடித்துள்ள நிலையில், ஆளும் திமுக தலைமையிலான கூட்டணியில் இணைய ஆம் ஆத்மி கட்சி விருப்பம் தெரிவித்துள்ளது.

## பிளஸ் டூ பொதுத்தேர்வு



தமிழகத்தில் பிளஸ் டூ பொதுத்தேர்வு மார்ச் 02 அன்று தொடங்கி நடைபெற்று வருகிறது. அதனைத் தொடர்ந்து பத்தாம் வகுப்பு பொதுத்தேர்வும் மார்ச் மாத இறுதியில் தொடங்க உள்ளது. இந்த தேர்வு காலத்திலேயே, சட்டமன்றத் தேர்தல் மற்றும் அதிகரிக்கும் வெப்பம் காரணமாக பள்ளிகளுக்கு முன்கூட்டியே விடுமுறை வழங்கப்படுமா என மாணவர்கள் மற்றும் பெற்றோர்களிடையே எதிர்பார்ப்பு எழுந்து வந்தது.

## இந்தி எழுத்தை மைகொண்டு அழித்த திமுகவினர்




திருச்சியில் ரயில் நுழைவு வளைவு புதிதாக கட்டப்பட்டுள்ள கல்வெட்டில் இருந்த இந்தி எழுத்தை மைகொண்டு அழித்த திமுகவினர் மத்திய அரசைக் கண்டித்து கண்டன கோஷங்களை எழுப்பினர்.

## அடுத்த ஜென்மத்தில் விவசாய குடும்பத்தில் பிறக்க வேண்டும்



தஞ்சாவூர் செங்கிப்பட்டியில் தவெக தலைவர் விஜய் பங்கேற்ற நிர்வாகிகள் சந்திப்பில் 4900 நபர்களுக்கு மட்டுமே அனுமதி. விஜய், "அடுத்த ஜென்மத்தில் விவசாய குடும்பத்தில் பிறக்க வேண்டும்" என உரையாற்றினார்.

## புதிய பாரா விளையாட்டு அரங்கம் திறப்பு விழா

**திருவண்ணாமலை, மார்ச் 05:**

திருவண்ணாமலையில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் மு. க. ஸ்டாலின் அவர்கள் நேற்று காணொளி காட்சி வாயிலாக இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை சார்பில் திருவண்ணாமலை மாவட்ட விளையாட்டு வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ள புதிய பாரா விளையாட்டு அரங்கத்தை மாண்புமிகு துணை சபாநாயகர் கு.பிச்சாண்டி அவர்கள் விளையாட்டு அரங்கத்தை திறந்து வைத்தார்.

அதனை தொடர்ந்து திருவண்ணாமலை விளையாட்டு அரங்கத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் கலந்து கொண்டு அரங்கத்தை பயன்பாட்டிற்கு கொண்டு வந்தார்கள்.

உடன் துறையைச் சார்ந்த அலுவலர்கள் அனைவரும் கலந்து கொண்டார்கள். **தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை**



## குப்பநத்தம் அணையில் இருந்து விவசாய பாசனத்திற்கு தண்ணீர் திறப்பு

**திருவண்ணாமலை, மார்ச் 5:**

திருவண்ணாமலை மாவட்டம் செங்கம் வட்டம் குப்பநத்தம் கிராமத்தில் குப்பநத்தம் அணையில் இருந்து விவசாய பாசனத்திற்காக உயர்திரு மாவட்ட ஆட்சித் தலைவர் க. தர்ப்பகராஜ் இ.ஆ.ப. அவர்கள் குப்பநத்தம் அணையில் இருந்து தண்ணீர் திறந்து வைத்து மலர் தூவினார்

**தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை**



## "அன்னதானம்"

**சென்னை, மார்ச் 05:**

ராகவிசினி ஆர்ட்ஸ் சார்பிலும், நீலாவதி டிரஸ்ட் சார்பிலும் இயக்குனரும், நடிகரும், டப்பிங் ஆர்டிஸ்ட் சமூக சேவகருமான இப்ராஹிம் மற்றும் சமூக சேவகர் கருங்காலக்குடி சந்துரு குழந்தை நட்சத்திரம் பிரஹர்சிதா ஆகிய மூன்று பேருக்கும் பிறந்த நாளை முன்னிட்டு திரைப்பட இயக்குனரும், நடிகரும், தென்னிந்திய நடிகர் சங்க உறுப்பினரும், சமூக சேவகருமான சேவா ரத்னா டாக்டர் ஜெ.விக்டர் தலைமையிலும், நடிகர் மீசை மனோகரன், நடிகர் அப்பா பாலாஜி, எழுத்தாளர் விவேக் ராஜ் ஆகியோர் முன்னிலையிலும் மேக்கப் ஆர்ட்டிஸ்டும், நடிகையுமான அங்கிதா , குழந்தை நட்சத்திரம் லியானா இணைந்து 105 நபர்களுக்கு உணவு, வாட்டர் பாட்டில் வழங்கப்பட்டது. அனைவருக்கும் இனிப்புகள், தேநீர் வழங்கப்பட்டது.




## கட்சியின் பெயரை அறிவிக்க திட்டம்



வி.கே.சசிகலா புதிய அரசியல் கட்சியை தொடங்கியுள்ளார். பிப்ரவரி 24 அன்று கொடியை அறிமுகம் செய்தார். மார்ச் 5க்குள் கட்சியின் பெயரை அறிவிக்க திட்டமிட்டுள்ளார்.

## எருக்கூரில் சுதந்திர போராட்ட வீரர் நீலகண்ட பிரம்மசாரி 48-வது நினைவு நாள்




**சீர்காழி , மார்ச் , 05 :**

மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழி தாலுக்கா எருக்கூர் அக்ரஹாரத்தில் பிறந்து இந்திய சுதந்திரத்திற்காக பாடுபட்டு 17 ஆண்டுகள் சிறையில் இருந்தவர் ஸ்ரீநீலகண்ட பிரம்மச்சாரி அவர்களுடைய 48 -வது நினைவு நாள் அவர் வாழ்ந்த வீடான எருக்க கூர் அக்ரஹாரத்தில் புதன்கிழமை நடைப்பெற்றது.

## மாசி மாத பௌர்ணமியை முன்னிட்டு சிறப்பு வழிபாடு

**ஈரோடு மார்ச் 05:**

ஸ்ரீ வாசவி கன்யகா பரமேஸ்வரி அம்மன் ஆலயத்தில் மாசி மாதம் பௌர்ணமியை முன்னிட்டு சிறப்பு அபிஷேகங்கள், வண்ணமலர் மாலைகளால் அலங்காரங்கள், வேத மந்திரங்கள் ஒலிக்க,பாட்டுகள் பாடி, பிரசாதம், நெய்வேத்தியங்களுடன் மகாதீபாராதனையும் நடைபெற்றது. ஆர்ய வைஸ்ய ஆண்கள், பெண்கள் பூஜையில் கலந்து கொண்டு வாசவி அம்மனை வேண்டி அருள் பெற்றனர். அனைவருக்கும் பிரசாதங்களும் வழங்கப்பட்டது.

**தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை**



## 124-ம் ஆண்டு மாசி மகம் தீர்த்தவாரி விழா



புதுச்சேரி வைத்திகுப்பம் கடற்கரையில் 124-ம் ஆண்டு மாசி மகம் தீர்த்தவாரி விழா பக்தி மிகு சிறப்புடன் நடைபெற்று நிறைவடைந்தது. ஆண்டுதோறும் நடைபெறும் இத்திருவிழா, இந்தாண்டும் ஆன்மிக உற்சாகத்துடன் கோலாகலமாக நடைபெற்றது.

## சிமெண்ட் சாலை அமைக்கும் பணிக்கு பூமி பூஜை



**திருப்பத்தூர், மார்ச்05:**

திருப்பத்தூர் மாவட்டம் வாணியம்பாடி தொகுதி ஆலங்காயம் மேற்கு ஒன்றியம் தேவஸ்தானம் ஊராட்சி பழைய வாணியம்பாடி கிராமத்தில் ஊராட்சி ஒன்றிய நடுநிலை பள்ளி முதல் சாமுண்டீஸ்வரி கோவில் வரை ரூ.10 லட்சம் மதிப்பீட்டில் சிமெண்ட் சாலை அமைக்கும் பணிக்கு பூமி பூஜையை சட்டமன்ற உறுப்பினர் G.செந்தில் குமார் துவக்கி வைத்தார்.

## பசுமை பள்ளி திட்டத்தின் சார்பாக தீயணைப்புத் துறை மூலம் விழிப்புணர்வு

**திருவண்ணாமலை,மார்ச் 05:**

திருவண்ணாமலை மாவட்டம்கீழ்பென்னாத்தூர் அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் 6-ஆம் முதல் 8-ஆம் வகுப்பு வரை படிக்கக்கூடிய மாணவர்களுக்கு தீயணைப்பு மற்றும் மீட்பு பணித்துறை சார்பாக விழிப்புணர்வு கருத்தரங்கம் நடைபெற்றது. விழாவிற்கு முதுகலை தமிழாசிரியர் இராமமூர்த்தி அவர்கள் வரவேற்புரை ஆற்றினார்.

தலைமை ஆசிரியர் முனைவர் மு. பிரசன்னா அவர்கள் தீ உருவாகும் விதங்கள் குறித்து தலைமை உரையாற்றினார். கீழ்பென்னாத்தூர் தீயணைப்பு நிலைய அலுவலர் மதியழகன் அவர்கள் சிறப்புரையாற்றினார்.

தீயணைப்பு அலுவலர் பாலமுருகன் அவர்கள் மற்றும் குழுவினர் மாணவர்களுக்கான வினாடி வினா போட்டிகள் நடத்தி பரிசுகள் மற்றும் சான்றிதழ்கள் வழங்கினார்கள். இந்நிகழ்ச்சியினை பசுமை பள்ளி ஒருங்கிணைப்பாளர் ஜெயக்குமார் அவர்கள் ஒருங்கிணைத்து நடத்தினார். முடிவில் உதவி தலைமை ஆசிரியர் கேசவன் அவர்கள் நன்றி உரையாற்றினார். விழாவில் ஆசிரியர்கள் ரமேஷ், ராஜேந்திரன், புனிதவதி ஆகியோர் கலந்து கொண்டார்கள்.

**தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை**



## சென்னை புறநகர்ப் பகுதிகளில் பனிமூட்டம்

சென்னை மற்றும் புறநகர்ப் பகுதிகளில் வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும் என்றும், ஓரிரு இடங்களில் மிதமான பனிமூட்டம் காணப்படும் என்றும் வானிலை மையம் தெரிவித்துள்ளது.



# தேர்தல் கொண்டாட்டம் 2026



## இவர்கள் கூறுவதென்ன?

### “சிறப்பு நிதி எனும் திமுகவின் தேர்தல் சித்து விளையாட்டு எடுபடாது” - தினகரன்



சென்னை:‘சிறப்பு நிதி எனும் திமுகவின் தேர்தல் கால சித்து விளையாட்டுக்கள் பொதுமக்கள் மத்தியில் எடுபடாது. திடீர் பாதுகாவலர் வேஷம் போடும் திமுகவை வீட்டிற்கு அனுப்பும் முடிவிலிருந்து தமிழக மக்கள் பின்வாங்க மாட்டார்கள்’ என அமமுக பொதுச் செயலாளர் டிடிவி தினகரன் தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட எக்ஸ்பதிவில், ‘தமிழக அரசின் சமூகப் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் மாத ஓய்வூதியம் மற்றும் உதவித் தொகை பெற்று வரும் முதியோர், கைம்பெண்கள், திருநங்கையர் மற்றும் மாற்றுத்திறனாளிகள் ஆகியோருக்கு 2 ஆயிரம் ரூபாய் சிறப்பு நிதியாக வரவு வைக்கப்பட்டிருப்பதாக முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு வெளியிட்டுள்ளார்.

2021 சட்டமன்றத் தேர்தலுக்கு முன்பாக திமுக வழங்கிய தேர்தல் அறிக்கையில் 322வது வாக்குறுதியான முதியோர் உதவித் தொகை 1500 ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும் என்ற வாக்குறுதியை ஆட்சி நிறைவடையும் தறுவாயிலும் நிறைவேற்றாமல் ஏமாற்றிக் கொண்டிருக்கும் திமுக அரசு, தற்போது சிறப்பு நிதி எனும் பெயரில் 2000 ரூபாய் வழங்கியிருப்பது முழுக்க முழுக்க ஏமாற்று வேலையே ஆகும்.

அண்டை மாநிலங்களைப் போல மாதாந்திர உதவித் தொகையை உயர்த்தி வழங்க வேண்டும் என ஜனநாயக ரீதியில் போராடிய மாற்றுத்திறனாளிகளின் மீது காவல்துறையை ஏவி அடக்குமுறைக்கு உள்ளாக்கிய திமுக அரசு, தேர்தல் நெருங்கும் நேரத்தில் இதுபோன்ற அறிவிப்புகளை வெளியிடுவதன் மூலம், மக்கள் நலனுக்கான நிரந்தர தீர்வை எட்டுவதை விட்டுவிட்டு அவர்களை வெறும் தேர்தல் நேர வாக்குவங்கியாக மட்டுமே பார்ப்பதை வெளிச்சம் போட்டுக் காட்டுகிறது. எனவே, கடந்த ஐந்தாண்டுக் கால இருண்ட ஆட்சியில் அனைத்து தரப்பு மக்களையும் வாட்டி வதைத்துவிட்டு தற்போது திடீர் பாதுகாவலர் வேஷம் போடும் முதல்வர் மு.க.ஸ்டாலினின் இதுபோன்ற தேர்தல்கால சித்து விளையாட்டுக்களை நம்பி தமிழக மக்கள் ஏமாற மாட்டார்கள் என்பதோடு, வரும் தேர்தலில் திமுவை வீட்டிற்கு அனுப்பும் முடிவிலிருந்து துளியளவும் பின்வாங்க மாட்டார்கள் என்பதையும் இந்நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்’ எனத் தெரிவித்தார்.

### விரைவில் தொகுதி பங்கீடு பேச்சுவார்த்தை: அமித் ஷாவை சந்தித்த பின் இபிஎஸ் தகவல்



தமிழகத்தில் விரைவில் சட்டப்பேரவை தேர்தல் நடைபெறவுள்ளது. இதையொட்டி திமுக, அதிமுக, தவெக உள்ளிட்ட கட்சிகள் தேர்தலுக்கான வேலைகளை தீவிரமாக செய்து வருகின்றன. இதில் திமுக தனது கூட்டணி கட்சிகளுடன் தொகுதி பங்கீடு பேச்சுவார்த்தையை நடத்தி வருகிறது. அதிமுக எப்போது பேச்சுவார்த்தை தொடங்கும் என அதன் கூட்டணி கட்சிகள் எதிர் பார்த்துள்ளனர். இந்தச் சூழலில்தான் டெல்லியில் மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷாவை அவரது இல்லத்தில் அதிமுக பொதுச் செயலாளர் பழனிசாமி நேற்று முன்தினம் இரவு சந்தித்து பேசினார். சுமார் இரண்டு மணி நேரம் நடந்த இந்த சந்திப்பில் பல்வேறு விஷயங்கள் பேசப்பட்டன. இதையடுத்து, நேற்று காலை சென்னை புறப்பட்ட பழனிசாமி டெல்லி விமானநிலையத்தில் செய்தியாளர்களிடம் கூறியதாவது: “மத்திய உள்துறை அமைச்சரை சந்தித்து தமிழக தேர்தல் நிலவரம் பற்றி கலந்து பேசினோம்.

தேர்தலில் நாம் எவ்வாறு இணைந்து செயல்பட வேண்டும் என்பது பற்றி ஆலோசித்தோம். சில கட்சிகளுடன் கூட்டணி பேச்சுவார்த்தை நடத்தி வருகிறோம். அவர்கள் அதிமுக கூட்டணிக்கு வருவதற்கு வாய்ப்பு உண்டு.

சசிகலா குறித்து பேச வில்லை. அதை விடுங்கள். எங்கள் கூட்டணியில் குழப்பம் எதுவும் கிடையாது. எங்களைப் பொறுத்தவரை சுமுகமாக, மிகச்சிறப்பாக, எழுச்சியாக கூட்டணி அமைந்திருக்கிறது.

தேர்தல் தேதி இன்னும் அறிவிக்கப்படவில்லை. எனவே தொகுதிப் பங்கீடு பேச்சு விரைவில் ஆரம்பிக்கப்படும். நாங்கள் எதைப் பற்றியும் கவலைப்படவில்லை. திமுக கூட்டணியில்தான் பிரச்னை இருக்கிறது. அந்த கூட்டணியில் காங்கிரஸ் இருக்குமா என்றே தெரியவில்லை. தேஜ கூட்டணி ஒன்றாக இருந்து மிகச் சிறப்பாக செயல்பட்டு வருகிறது. வரும் தேர்தலில் அதிமுக தலைமையிலான தேஜ கூட்டணி அதிக இடங்களில் வெற்றிபெற்று அதிமுக ஆட்சி அமைக்கும்.இவ்வாறு அவர் கூறினார்.

## தேமுதிகவுக்கு ஒரு மாநிலங்களவை ‘சீட்’ - ஸ்டாலின் - சுதீஷ் இடையே ஒப்பந்தம்

திமுக கூட்டணியில் தேமுதிகவுக்கு ஒரு மாநிலங்களவை ‘சீட்’ ஒதுக்கப்பட்டதற்கான ஒப்பந்தம், முதல்வர் ஸ்டாலின் - சுதீஷ் இடையே கையெழுத்தானது.

கடந்த 2005-ல் தேமுதிகவைத் தொடங்கினார் விஜயகாந்த். 2006 தேர்தலில் தனித்துப் போட்டியிட்ட தேமுதிக 8.4% வாக்குகளைப் பெற்றது. தொடர்ந்து 2009-ல் 10% என வளர்ச்சி கண்ட கட்சி, 2011-ல் அதிமுகவுடன் கூட்டணி அமைத்து 7.9% வாக்குகளுடன் 29 இடங்களில் வெற்றி பெற்று எதிர்க்கட்சி அந்தஸ்தைப் பெற்றது.

அதன்பிறகு, தேமுதிக, 2016-ல் 2.6%, 2021-ல் 0.4% என வாக்குகளைப் பறிகொடுத்தது. விஜயகாந்த் மறைவுக்குப் பிறகு 2024 மக்களவைத் தேர்தலில் அதிமுக கூட்டணியில் இணைந்தும் அக்கட்சிக்கு ஒரு இடத்தில் கூட வெற்றி கிடைக்கவில்லை.



விருதுநகரில் விஜயபிரபாகரன் நூலிழையில் வெற்றி யைத் தவறவிட்டார். மேலும், தனது சகோதரர் எல்.கே.சுதீஷை மாநிலங்களவை எம்.பி.யாக்கலாம் என்று பிரேமலதா நினைத்தார். ஆனால், தேமுதிகவுக்கு அதிமுக சீட் வழங்கவில்லை.

வரும் தேர்தலில் தேமுதிக எந்த கூட்டணியில் சேரும் என்று பலரும் நினைத்த நிலையில் யாரும் எதிர்பார்க்காத வகையில் முதல்வர் ஸ்டாலினைச் சந்தித்து திமுக கூட்டணியை உறுதி செய்தார் பிரேமலதா.

இந்நிலையில், நேற்றிரவு அண்ணா அறிவாலயத்துக்கு தேமுதிக பொருளாளர் எல்.கே.சுதீஷ், தலைமை நிலைய செயலாளர் பார்த்தசாரதி, கொள்கைப் பரப்புச் செயலாளர் அழகாபுரம் மோகன்ராஜ் உள்ளிட்ட நிர்வாகிகள் வருகை தந்தனர். அப்போது, கூட்டணி அமைக்கும் போது, தேமுதிகவுக்கு உறுதி அளித்ததன் அடிப்படையில், திமுக தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியில் ஒரு மாநிலங்களவை உறுப்பினர் இடம் ஒதுக்கப்பட்டது.

இதுதொடர்பாக, திமுக தலைவர் மு.க.ஸ்டாலின், தேமுதிக பொருளாளர் எல்.கே.சுதீஷ் இடையே ஒப்பந்தம் கையெழுத்தானது. அந்த ஒப்பந்தத்தில், “மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியில் இணைந்துள்ள தேமுதிகவுக்கு நடைபெற உள்ள மாநிலங்களவைத் தேர்தலில் ஒரு இடம் ஒதுக்கீடு செய்வது. சட்டப்பேரவைத் தேர்தலில் அடுத்தக்கட்ட பேச்சுவார்த்தையின் போது திமுகவை சேர்ந்த குழுவினரும், தேமுதிகவின் குழுவினரும் கலந்து பேசி போட்டியிடும் இடங்கள் குறித்து முடிவு செய்யப்படும்” என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

பின்னர் அண்ணா அறிவாலயத்தில் எல்.கே.சுதீஷ் செய்தியாளர்களிடம் கூறுகையில், “நடைபெற உள்ள மாநிலங்களவை தேர்தலில், திமுக கூட்டணியில் தேமுதிகவுக்கு ஒரு மாநிலங்களவை சீட் வழங்கப்பட்டுள்ளது. பொதுச் செயலாளர் பிரேமலதா, மாநிலங்களவை எம்.பி. தேர்தலுக்கான வேட்பாளரை பின்னர் அறிவிப்பார். மேலும், சட்டப்பேரவைத் தேர்தலில், எத்தனை தொகுதிகள், எந்தெந்த தொகுதிகள் என்பது, ஒரு வாரத்துக்கு பிறகு அடுத்தக்கட்ட பேச்சுவார்த்தையில் தெரிய வரும்” என்றார்.

## தேனியில் ஓபிஎஸ் ஆதரவாளர்கள் கூண்டோடு அதிமுகவில் ஐக்கியம்

முன்னாள் முதல்வர் ஓ.பன்னீர்செல்வத்தின் சொந்த மாவட்டமான தேனியில் அவரது ஆதரவாளர்கள் ஒட்டுமொத்தமாக அதிமுகவில் இணைந்தனர்.

முன்னாள் முதல்வர் ஓ.பன்னீர்செல்வம் கடந்த வாரம் சென்னையில் முதல்வர் ஸ்டாலினை சந்தித்து திமுகவில் இணைந்தார். காலம் முழுவதும் எம்ஜிஆர், ஜெயலலிதா யாரை எதிர்த்து அரசியல் செய்தார்களோ அந்த கட்சியில் அவர் இணைந்ததற்கு ஓபிஎஸ் ஆதரவாளர்கள் பலரும் அதிருப்தியை வெளிப்படுத்தினர்.

இதனைத் தொடர்ந்து தேனி மாவட்டத்தில் ஓபிஎஸ் ஆதரவாளர்கள் பலரும் கடந்த ஒரு வாரமாக படிப்படியாக அதிமுகவில் இணைந்து வருகின்றனர்.

இதன் ஒருபகுதியாக க.மயிலை ஒன்றிய ஓபிஎஸ் ஆதரவாளர்கள் அதிமுகவில் இணையும் நிகழ்வு கடமலைக்குண்டுவில் நடைபெற்றது. நிகழ்ச்சிக்கு அதிமுக தேனி கிழக்கு மாவட்டச் செயலாளர் முருக்கோடை ராமர் தலைமை வகிக்க, தெற்கு ஒன்றியச் செயலாளர் எஸ்எம். ராமர் முன்னிலை வகித்தார்.

இதில் க.மயிலை தெற்கு ஒன்றியத்தில் உள்ள 18 கிளைச் செயலாளர்களும் ஓபிஎஸ் அணியில் இருந்து ஒட்டுமொத்தமாக விலகி அதிமுகவில் இணைந்தனர்.

குமணன்தொழு, வனத்தாய்புரம், மண்ணூத்து, சென்றாயபுரம், தேவேந்திரபுரம், கோம்பைத்தொழு,முத்துலாபுரம், வலம்புரி உள்ளிட்ட 18 கிராமங்களைச் சேர்ந்த கிளைச் செயலாளர்கள் விலகியதால் இப்பகுதியில் ஓபிஎஸ் கூடாரம் முற்றிலும் காலியாகி உள்ளது.

## புதிய தமிழகம் யாருடன் கூட்டணி? கோவையில் இன்று ஆலோசனை

புதிய தமிழகம் கட்சியானது தங்களுக்கு 10 தொகுதிகளையும் ஒரு ராஜ்ய சபா சீட்டையும் எதிர்பார்க்கிறது. ஆனால், திமுக தரப்பில் இரண்டு தொகுதிகள் கொடுத்து அவர்களை கூட்டணிக்குள் கொண்டுவர பேசி வருகிறார்கள். அதேசமயம், அதிமுக தரப்பில் கடந்த ஒரு மாதமாக நடைபெற்று வரும் பேச்சுவார்த்தையில் எந்த முன்னேற்றமும் ஏற்படவில்லை.

இந்நிலையில், புதிய தமிழகம் கட்சியின் அவசர ஆலோசனை கூட்டம் கட்சி தலைவர் கிருஷ்ணசாமி தலைமையில் கோயம்புத்தூரில் இன்று (மார்ச் 5) நடைபெறவுள்ளது. இக்கூட்டத்தில் கலந்துகொள்ள 300-க்கும் மேற்பட்ட முக்கிய நிர்வாகிகளுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இது குறித்து புதிய தமிழகம் கட்சி நிர்வாகிகள் கூறுகையில்,

“தமிழக அரசியல் நிலவரம், யாருடன் கூட்டணி அமைப்பது, எத்தனை சீட்கள் பெறுவது உள்ளிட்ட பல்வேறு விஷயங்கள் குறித்து இன்றைய கூட்டத்தில் ஆலோசிக்கப்படும்.

நிர்வாகிகளின் கருத்தைக் கேட்டு யாருடன் கூட்டணி என்பதையும் தலைவர் முடிவு செய்வார்” என்றனர்.

## மகளிர் தினத்தில் தவெக தேர்தல் அறிக்கை வெளியீடு: பெண்களை கவர புது வியூகம்



தமிழக சட்டசபை தேர்தல் அடுத்த மாதம் (ஏப்ரல்) நடைபெற உள்ள நிலையில், அரசியல் கட்சிகளில் புது வரவான தமிழக வெற்றிக் கழகம் முதல் முறையாக போட்டியிட இருக்கிறது.

எந்தவொரு கட்சியும் தேர்தலை சந்திப்பதற்கு முன்பாக, நாங்கள் ஆட்சிக்கு வந்தால் என்னென்ன திட்டங்களை மக்களுக்காக கொண்டுவருவோம் என்பதை தேர்தல் அறிக்கையாக தயாரித்து வெளியிடுவது வழக்கம். தேர்தல் நேரத்து கதாநாயகனே ஒவ்வொரு கட்சிகள் வெளியிடும் தேர்தல் அறிக்கைகள் தான்.

அந்த வகையில், தமிழக வெற்றிக் கழகத்தில் தேர்தல் அறிக்கையை தயாரிக்க கட்சியின் கொள்கை பரப்புச் செயலாளர் அருண்ராஜ் தலைமையில் குழு அமைக்கப்பட்டது. இந்தக் குழுவில் ஜே.சி.டி.பிரபாகர், ராஜ்மோகன், மயூரி, சம்பத்குமார் உள்ளிட்டோர் இடம்பெற்றிருந்தனர்.

இந்தக் குழுவினர் 5 மண்டலங்களுக்கு நேரடியாக சென்று பொதுமக்கள் மற்றும் கட்சி நிர்வாகிகளை சந்தித்து கருத்து கேட்டனர். இணையதளம் மூலமும் மக்களிடம் இருந்து கருத்து கேட்கப்பட்டது.

இந்த நிலையில், தற்போது தவெக தேர்தல் அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது.

இந்த தேர்தல் அறிக்கையை வரும் 8-ந் தேதி (ஞாயிற்றுக்கிழமை) மகளிர் தினத்தன்று கட்சியின் தலைவர் விஜய் வெளியிட இருப்பதாக தகவல்கள் வெளியாகியுள்ளது.

பெண்கள் மற்றும் உழைக்கும் வர்க்கத்தினரை மையமாக கொண்டு தவெக தேர்தல் அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது. மேலும், விவசாயம், மீனவர்கள், தொழிலாளர்களுக்கு அதில் முக்கியத்தும் கொடுக்கப்பட்டிருப்பதாகவும் தெரிகிறது.

## ஈரோட்டில் எடப்பாடி பிரச்சாரம்

7 மற்றும் 8-ல் ஈரோடில் பிரசாரம்: இதற்கிடையே, “மக்களைக் காப்போம் - தமிழகத்தை மீட்போம்” என்ற தலைப்பில் தமிழகம் முழுவதும் சட்டப்பேரவை தொகுதி வாரியாக பழனிசாமி பிரசாரம் செய்து வருகிறார். அதன் தொடர்ச்சியாக வரும் 7, 8--ம் தேதிகளில் பிராசார சுற்றுப்பயணத்தை பழனிசாமி மேற்கொள்ள இருக்கிறார்.

7-ம் தேதி ஈரோடு புறநகர் மேற்கு மாவட்டம் அந்தியூரில் மாலை 4.30 மணிக்கும், 8-ம் தேதி ஈரோடு புறநகர் கிழக்கு மாவட்டம் பெருந்துறையில் மாலை 4 மணிக்கும், பவானியில் 5.30 மணிக்கும் பழனிசாமி தேர்தல் பிரச்சாரம் மேற்கொள்கிறார் என அதிமுக அறிவித்துள்ளது.

## தலைமை எடுக்கும் முடிவு நம் விருப்பத்துக்கு ஏற்ப இல்லாவிட்டாலும்... மாணிக்கம் தாகூர்

தமிழக அரசியலில் தி.மு.க. காங்கிரஸ் கூட் டணி என்பது நீண்டநாள் கூட்டணியாக மட்டுமல்லாமல், அது ஒரு கொள்கை சார்ந்த கூட்ட ணியாக இருந்து வருகிறது. இந்தநிலையில் காங்கிரசார் மத்தியில், ஆட்சி அதிகாரத்தில் பங்கு என்ற கோஷம் இந்த தேர்தலில் பலமாக ஒலிக்க தொடங்கியது.

த.வெ.க. எனும் புதிய கட்சியை தொடங்கிய நடிகர் விஜய், தன்னுடன் கூட்டணி அமைக்கும் கட்சியினருக்கு ஆட்சி அதிகாரத்தில் பங்கு என அறிவித்தார். இதனால், ஆட்சியில் பங்கு என கோஷம் எழுப் பிய தமிழக காங்கிரஸ் கட்சியினர் மத்தியில் த.வெ.க.வுடன் கூட்டணி அமைக்கலாம் என்ற பேச்சு எழுந்தது.

அதேவேளையில் தி.மு.க.வுடன் கூட்டணியை தொடர வேண்டும் என்பதில் காங்கிரஸ் கட்சியில் இன்னொரு தரப்பினர் உறுதியாக இருந்தனர். இதற்கிடையில் திமுகவுடனான தொகுதி பங்கீடு





பேச்சுவார்த்தையில், காங்கிரஸ் மேலிடம், ‘39 தொகுதிகளில் ஒரு தொகுதிக்கூட குறையக்கூடாது. கேட்டது கிடைத்தால் கூட்டணியில் தொடருவோம்’ என்ற நிலைப்பாட்டில் இருப்பதாக கூறப்படுகிறது. மேலும், 2 ராஜ்யசபா சீட்டுகள், ஆட்சி அதிகாரத்தில் பங்கு- உள்ளாட்சியில் பங்கு போன்றவற்றிலும் காங்கிரஸ் உறுதியாக இருப்பதாக சொல்லப்படுகிறது.

தி.மு.க. தரப்பில், இதற்கு மேல் கூட்டணியில் இருந்து காங்கிரஸ் போனால் போகட்டும் என்ற மனநிலையில் இருப்பதாக கூறப்படுகிறது. இதனால் தி.மு.க. - காங்கிரஸ் தொகுதி பங்கீட்டு பேச்சுவார்த்தை சுமுகமாக நடைபெறாமல் இழுபறியுடன் முடிவடைந்துள்ளது.

இந்த நிலையில், விருதுநகர் காங்கிரஸ் எம்.பி. மாணிக்க தாகூர் வெளியிட்டுள்ள சமூக வலைதளப்பதிவில், “கருத்து வேறுபாடுகள் இருப்பது மனித இயல்பு. ஆனால் எந்த தனிநபரையும் விட கட்சியே உயர்ந்தது. தலைமையினர் எடுக்கும் முடிவுகள் எப்போதும் நம் விருப்பத்துக்கு ஏற்ப இல்லாவிட்டாலும், ஒழுக்கத்துடனும் நம்பிக்கையுடனும் அதை ஏற்றுக்கொள்வதே உண்மையான கடமை. ஏனெனில் ஒற்றுமையே நமது மிகப்பெரிய சக்தி. இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

## “இன்னும் 3 நாட்களில் கூட்டணி உறுதியாகும்” - இழுக்கும் ராமதாஸ்

யாருடன் கூட்டணி என்பது இன்னும் மூன்று நாளில் முடிவாகும் என பாமக நிறுவனர் ராமதாஸ் தெரிவித்தார்.

“நமது இலக்கை அடைவதற்கான வாகனம் வந்துவிட்டது” என்று கடந்த வாரம் சொன்ன ராமதாஸ், இன்னும் கூட்டணியை முடிவு செய்ய முடியாத குழப்பான நிலையில் இருக்கிறார். இதனால் அவரது விசுவாசிகள் நம்பிக்கை இழந்து வருகின்றனர். இந்த நிலையில், அவர்களை உற்சாகப்படுத்துவதற்காக நிர்வாகிகள் கருத்துக் கேட்புக் கூட்டத்தை நேற்றும் தைலாபுரத்தில் நடத்தினார் ராமதாஸ். கடந்த ஒரு வாரத்தில் ராமதாஸ் நடத்திய 2-வது கருத்துக் கேட்புக் கூட்டம் இது. இந்தக் கூட்டத்தில் பாமக கவுரவத் தலைவர் ஜி.கே.மணி, செயல் தலைவர் ஸ்ரீகாந்தி உள்ளிட்ட நிர்வாகிகள் பங்கேற்றனர்.

கூட்டத்துக்குப் பிறகு செய்தியாளர்களிடம் பேசிய ராமதாஸ், “பாமக, இப்போது முக்கியமான கால கட்டத்தில் இருக்கிறது. நாங்கள் இன்னும் கூட்டணி பற்றி முடிவு செய்யவில்லை; விரைவில் முடிவு செய்வோம். கூட்டணியைப் பற்றி முடிவு செய்யாததால் கூட்டணி தொடர்பான கேள்விகளுக்கு என்னிடம் பதில் இல்லை” என்றார்.

“நமக்கான வாகனம் வந்துவிட்டது என்று சொன்னீர்களே... அந்த வாகனத்தில் எதாவது மாற்றம் இருக்கிறதா..?” செய்தியாளர்கள் கேட்டதற்கு, “மாற்றங்கள் வருவது இயற்கை. ஒரு முடிவு எடுத்து விட்டால் உறுதியாக இருப்போம். அடுத்த 3 நாட்களில் தமிழக அரசியலில் பரபரப்பு இருக்கும். இன்னும் 3 நாட்களில் கூட்டணி உறுதி செய்யப்படும்” என்றார். “தை பிறந்தால் வழி பிறக்கும்” என்று சொல்லி வந்த ராமதாஸ், மாசியிலாவது மகிழ்ச்சியான முடிவை அறிவிப்பாரா என்று பார்க்கலாம்.

## தஞ்சாவூரில் விஜய் வாகனத்தை பின்தொடர்ந்த இருவர் படுகாயம்



தஞ்சாவூர், மார்ச் 5:

தமிழக வெற்றிக் கழகம் (TVK) தலைவரும் நடிகரான விஜய்யின் வாகனத்தை இருசக்கர வாகனத்தில் பின்தொடர்ந்து சென்ற இரண்டு இளைஞர்கள் விபத்தில் காயமடைந்துள்ளனர்.

திருச்சியைச் சேர்ந்த மூன்றாம் ஆண்டு கல்லூரி மாணவர் விக்னேஷ் (20) மற்றும் அவரது நண்பர் அருண் (21) ஆகியோர், தஞ்சாவூர் அருகே சென்றபோது அவர்கள் பயணித்த இருசக்கர வாகனம் எதிர்பாராத விதமாக காரின் மீது மோதி விபத்துக்குள்ளானது.

இந்த விபத்தில் விக்னேஷுக்கு தலையில் பலத்த காயம் ஏற்பட்டுள்ளது. அவர் தற்போது மருத்துவமனையில் தீவிர சிகிச்சைப் பிரிவில் (ICU) அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார். அவரது நண்பர் அருணுக்கு கால் முறிவு ஏற்பட்டுள்ளது. தனது வாகனத்தை ரசிகர்கள் மற்றும் தொண்டர்கள் இருசக்கர வாகனங்களில் பின்தொடர வேண்டாம் என்று விஜய் பல கூட்டங்களில் கேட்டுக்கொண்ட போதிலும், இச்சம்பவம் நிகழ்ந்துள்ளது. இந்த சம்பவம் தொடர்பாக போலீசார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

## 'ஜனநாயகன்' விவகாரத்தில் குரல் கொடுத்த முதல் அமைச்சருக்கு நன்றி: விஜய் பேச்சு

தஞ்சாவூர், மார்ச் 5:

விஜய்யின் ஜனநாயகன் படம் கடந்த பொங்கல் பண்டிகைக்கு முன்பாக ரிலீஸ் ஆக இருந்தது. ஆனால் தணிக்கை சான்று கிடைக்காததால் படம் வெளியாவதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது. இதனால், தேர்தலுக்கு முன்பாக படம் வெளியாகுமா? என்பது கேள்விக்குறியாகியுள்ளது. ஜனநாயகன் பட பிரச்சினையின் போது அரசியல் கட்சி தலைவர்கள் பலரும் குரல் கொடுத்த நிலையில், விஜய் தனது பட பிரச்சினை தொடர்பாக கருத்து எதுவும் கூறாமல் இருந்தார். விஜய் தனது சொந்த பட பிரச்சினைக்கே குரல் கொடுக்கவில்லை என்று விமர்சனங்கள் எழுந்த நிலையில், இன்று தஞ்சை கூட்டத்தில் முதல் முறையாக விஜய் ஜனநாயகன் பட விவகாரம் குறித்து பேசினார். விஜய் இது தொடர்பாக பேசும் போது, கரூர் முதல் ஜனநாயகன் படம் ரிலீஸ் வரைக்கும் இப்படித்தான் நடந்தது. ஜனநாயகன் ரிலீஸ் விவகாரத்தில் நிறைய பேர் குரல் கொடுத்தார்கள். முக்கியமாக நம் முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்களும் பூசி மெழுகி, பட்டும் படாமல் குரல் கொடுத்தார்கள். எப்படி இருந்தாலும் குரல் கொடுத்த அவர்களுக்கும் மற்ற அனைவருக்கும் எனது நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்" என்று கூறினார்.

# திருநள்ளாறில் சனிப்பெயர்ச்சி விழா.. பக்தர்கள் நெரிசல் இன்றி தரிசனம் செய்ய சிறப்பு ஏற்பாடு

புதுச்சேரி, மார்ச் 5:

புதுச்சேரி மாநிலம் காரைக்கால் மாவட்டம் திருநள்ளாறில் உலகப் புகழ் பெற்ற ஸ்ரீதர்ப்பாரண்யேஸ்வரர் சுவாமி தேவஸ்தானத்தில் தனிசன்னதியில் ஸ்ரீசனீஸ்வர பகவான் அருள்பாலித்து வருகிறார். இங்கு இரண்டரை ஆண்டுகளுக்கு ஒருமுறை வாக்கிய பஞ்சாங்க முறைப்படி சனிப்பெயர்ச்சி விழா வெகுவிமரிசையாக நடைபெறும். இதில் பங்கேற்க நாட்டின் பல்வேறு பகுதிகளில் இருந்தும் லட்சக்கணக்கான பக்தர்கள் கோவிலுக்கு வருகை தருவார்கள். அவ்வகையில் நாளை (வெள்ளிக்கிழமை) சனிப்பெயர்ச்சி விழா நடைபெறுகிறது. அன்றைய தினம், காலை 8.24 மணிக்கு சனி பகவான் கும்ப ராசியில் இருந்து மீன ராசிக்கு இடம் பெயர்கிறார். சனிப்பெயர்ச்சி நேரத்தை கணக்கிட்டு, சனீஸ்வர பகவானுக்கு சிறப்பு அபிஷேகம், அலங்காரம், அர்ச்சனை, தீபாராதனைகள் நடைபெற உள்ளன.







பக்தர்கள் நெரிசல் இன்றி தரிசனம் செய்ய, தேவஸ்தான நிர்வாகம் இலவச தரிசனம் மற்றும் 3 வகையான கட்டண தரிசனத்துக்கு ஏற்பாடு செய்துள்ளது. அதன்படி, இலவச தரிசன வரிசை மற்றும் ரூ.300, ரூ.600. ரூ.1,000 என கட்டணம் செலுத்தும் சிறப்பு தரிசன வரிசைகள் அமைக்கப்பட்டுள்ளன. அனைத்து டிக்கெட்களும் தேவஸ்தானம் அங்கீகரித்த கவுண்ட்டர்களில் மட்டுமே விற்பனை செய்யப்படும்.

டிக்கெட், பாஸ் போன்ற அனைத்திலும் தேவஸ்தான 'ஹாலோகிராம்' ஒட்டப்பட்டிருக்கும் என்பதால், பக்தர்கள் போலி டிக்கெட்டுகளை தவிர்த்து உண்மையான டிக்கெட்டுகளை மட்டுமே பெறமுடியும். பக்தர்கள் சிரமமின்றி டிக்கெட்டுகள் பெறுவதற்காக, 15 இடங்களில் டிக்கெட் கவுண்ட்டர்கள் அமைக்கப்பட்டுள்ளன. சனிப்பெயர்ச்சி நாட்களில் அதிக வெயிலில் இருந்து பக்தர்களை பாதுகாக்க, அனைத்து வரிசைகளிலும் தகர கூரைகள் அமைக்கப்பட்டுள்ளன. நீண்ட நேரம் நிற்க வேண்டி உள்ளதால், வரிசைகளில் உட்கார்ந்து செல்லும் வசதியும் செய்யப்பட்டுள்ளன. பக்தர்களுக்கு பிஸ்கட், குடிநீர் மற்றும் அன்னதானம் வழங்கப்படும். குழந்தைகளுக்கு தாய்ப்பால் கொடுக்க தாய்மார்களுக்கு பிரத்யேக தனி அறைகள் அமைக்கப்பட்டுள்ளன. மாற்றுத்திறனாளி பக்தர்களுக்கு தனிப்பட்ட வழித்தடங்கள் மற்றும் சிறப்பு தரிசன வசதிகள் செய்யப்பட்டுள்ளன. வரிசையில் நிற்கும்போது பயன்படுத்தும் கழிவறை வசதிகளும் போதுமான அளவில் அமைக்கப்பட்டிருக்கின்றன. அதிக அளவில் பக்தர்கள் வருவதை கருத்தில் கொண்டு, அண்டை மாநில போக்குவரத்து துறையினருடன் இணைந்து கூடுதல் பஸ்கள் இயக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. பக்தர்கள் தங்கள் வாகனங்களை பாதுகாப்பாக நிறுத்துவதற்காக, தனிப்பட்ட வாகன நிறுத்தும் இடங்கள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. பக்தர்கள் அதிகம் குவியும் முக்கிய பகுதிகள் அடையாளம் காணப்பட்டு, அங்கு தற்காலிக குளிர்சாதன வசதிகள் செய்யப்பட்டுள்ளன. அனைத்து பக்தர்களுக்கும் உணவு வழங்கும் நோக்குடன், வரிசைகள் ஆரம்பிக்கும் இடங்கள், தரிசனம் முடிந்த பின் பக்தர்கள் வெளியேறும் பகுதிகள், பக்தர்கள் அதிகம் நடந்து செல்லும் வழித்தடங்கள் ஆகியவற்றில் அன்னதான மண்டபங்கள் அமைக்கப்பட்டு, இலவச அன்னதானம் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

# திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி கோவிலில் மாசித் திருவிழா தெப்ப உற்சவம்

திருச்செந்தூர், மார்ச் 5:

திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி கோவிலில் மாசித்திருவிழா கடந்த மாதம் 21-ந் தேதி தொடங்கி வெகு விமரிசையாக நடந்து வருகிறது. திருவிழா காலங்களில் தினசரி காலை மற்றும் மாலையில் சுவாமியும், அம்பாளும் வெவ்வேறு வாகனத்தில் எழுந்தருளி வீதி உலா வந்து பக்தர்களுக்கு காட்சி கொடுத்தனர்.

11-ம் திருநாளான நேற்று சந்திர கிரகணத்தை முன்னிட்டு பிற்பகல் 2 மணிக்கு கோவில் நடை சாத்தப்பட்டது. பின்னர் இரவு 8 மணிக்கு நடை திறக்கப்பட்டது. தொடர்ந்து மற்ற கால பூஜைகள் நடைபெற்றன. அதே போல் 2 மணிக்கு யாதவ மண்டபத்திற்கு சென்றடைந்த சுவாமி, அம்பாளுக்கு பட்டு சாத்தி வைக்கப்பட்டது. பின்னர் சந்திரகிரகணம் முடிந்த பின்னர் இரவு 8 மணிக்கு மேல் சுவாமி அம்பாளுக்கு சிறப்பு அபிஷேகம் அலங்காரமாகி தீபாராதனை நடந்தது.



தொடர்ந்து சுவாமி குமரவிடங்கபெருமான், தெய்வானை அம்பாள் தனித்தனி சப்பரத்தில் எழுந்தருளி சன்னதி தெருவில் உள்ள யாதவர் மண்டபத்திற்கு சென்றனர். அங்கு சுவாமிக்கும் அம்பாளுக்கும் அபிஷேகம், அலங்காரமாகி தீபாரானை நடந்தது.

பின்னர் சுவாமி, அம்பாள் புஷ்ப சப்பரங்களில் எழுந்தருளி வெளிவீதி வழியாக நெல்லை நகரத்தார் தெப்பக்குளம் மண்டபம் சேர்ந்தனர்.

அங்கு இரவு சுவாமி, அம்பாளுக்கு அபிஷேகம், அலங்காரமாகி மகா தீபாராதனை நடந்தது. பின்னர் வண்ண மலர்களாலும், வண்ண விளக்குகளாலும் அலங்கரிக்கப்பட்டு தெப்பத்தில் சுவாமி குமரவிடங்கபெருமான், தெய்வானை அம்பாளுடன் எழுந்தருளினார். பின்னர் சுவாமியும், அம்மாளும் 11 முறை தெப்பக்குளத்தில் வலம் வந்து பக்தர்களுக்கு அருள்பாலித்தனர். இதில் திரளான பக்தர்கள் கலந்துகொண்டு தரிசனம் செய்தனர்.

12-ம் திருநாளான இன்று மாலையில் சுவாமி, அம்பாள் மஞ்சள் நீராட்டு திருக்கோலத்துடன் 8 வீதிகளிலும் உலா நடக்கிறது. இரவு சுவாமி, அம்பாள் தனித்தனி மலர் கேடய சப்பரத்தில் எழுந்தருளி வீதி உலா வந்து பக்தர்களுக்கு காட்சி கொடுக்கின்றனர்.




வறுமை, நோய், அறியாமை மூன்றும் முற்றிலும் நீங்கும்
போர் என்னும் பொல்லா அரக்கனை
பூமியில் இல்லாமல்
ஆக்கினால்...!
தொடர்புக்கு: 9791667528

## ரங்கா... கோவிந்தா... கோஷம் விண்ணைப்பிளக்க மக்கள் வெள்ளத்தில் மிதந்து வந்த அரங்கநாதர்

மேட்டுப்பாளையம், மார்ச் 5:

கோவை மாவட்டத்தில் பிரசித்தி பெற்ற வைணவத் திருத்தலமான காரமடை அரங்கநாத சுவாமி கோவில் மாசி மகத் தேர்த்திருவிழாவின் முக்கிய நிகழ்வான தேரோட்டம் சிறப்பாக நடைபெற்றது. இந்த ஆண்டுக்கான தேர்த்திருவிழா கடந்த 24ஆம் தேதி கொடியேற்றத்துடன் தொடங்கியது. தொடர்ந்து அன்ன வாகனம், சிம்ம வாகனம், அனுமந்த வாகனம் உள்ளிட்ட பல்வேறு வாகனங்களில் ஸ்ரீதேவி, பூதேவி சமேதராக அரங்கநாத பெருமாள் எழுந்தருளி பக்தர்களுக்கு அருள்பாலித்தார். அதிகாலை ஸ்ரீதேவி, பூதேவி தாயாருடன் அரங்கநாத பெருமாளுக்கு திருக்கல்யாண உற்சவம் விமரிசையாக நடைபெற்றது. அதனைத் தொடர்ந்து யானை வாகன உற்சவமும் நடைபெற்றது. நேற்று அதிகாலை சிறப்பு அபிஷேகம் மற்றும் அலங்கார பூஜைகளுக்குப் பிறகு அலங்கரிக்கப்பட்ட திருத்தேரில் பெருமாள் எழுந்தருளினார். மாலை 4.30 மணியளவில் தேரை வடம் பிடிக்கும் நிகழ்வு தொடங்கியது. கோவில் ஸ்தலத்தார் சுவாமிகள் மற்றும் அர்ச்சகர்கள் தேருக்கு சிறப்பு பூஜைகள் செய்தனர். பல்வேறு அரசியல் மற்றும் சமூக அமைப்புகளைச் சேர்ந்த முக்கிய பிரமுகர்கள் தேரை வடம் பிடித்து இழுத்தனர். தேரானது நான்கு ரத வீதிகள் வழியாக வலம் வந்து இரவு நிலையை அடைந்தது. தேரோட்டத்தின் போது பக்தர்கள் வாழைப்பழங்களைத் தேரின் மீது வீசி வழிபட்டனர்.

## திருவண்ணாமலை அருகே கவுதம நதியில் அருணாசலேஸ்வரர் தீர்த்தவாரி

திருவண்ணாமலை அருணாசலேஸ்வரர் கோவில் திருப்பணியில் பெரும்பங்காற்றியவர் வல்லாள மகாராஜா. இவர் குழந்தைப்பேறு இல்லாமல் தவித்தபோது சிவபெருமானே குழந்தையாக தரிசனம் அளித்ததாக ஆன்மீக புராணங்கள் தெரிவிக்கின்றன. எனவே போரில் உயிரிழந்த வல்லாள மகாராஜாவுக்கு ஆண்டுதோறும் மாசி மகத்தன்று அருணாசலேஸ்வரர் திதி கொடுக்கும் நிகழ்ச்சியும், அதைத்தொடர்ந்து கவுதம நதியில் அருணாசலேஸ்வரருக்கு தீர்த்தவாரியும் நடைபெறுவது வழக்கம். அதன்படி மாசி மகம் நட்சத்திர தினமான நேற்று திதி கொடுக்கும் நிகழ்ச்சியும், தீர்த்தவாரியும் நடைபெற்றது. மங்கல வாத்தியங்கள் முழங்க கோவிலில் இருந்து பள்ளிகொண்டாப்பட்டு கிராமத்தில் உள்ள கவுதம நதியில் தீர்த்தவாரிக்கு சென்றார். வழிநெடுகிலும் பக்தர்கள் தரிசனம் செய்தனர். கவுதம நதியை அடைந்ததும் நதிக்கரையில் அருணாசலேஸ்வரர் திதி கொடுக்கும் நிகழ்ச்சி நடந்தது. பின்னர் சாமியின் சூல ரூபமான அஸ்திரதேவருக்கு கவுதம நதியில் தீர்த்தவாரி நடந்தது.

தீர்த்தவாரி முடிந்த பிறகு ஏராளமான பக்தர்கள் கவுதம நதியில் நீராடினர். மேலும் பக்தர்கள் மீது புனித நீர் தெளிக்கப்பட்டது. பக்தர்களும் கவுதம நதிக்கரையில் தங்கள் முன்னோர்களுக்கு திதி கொடுத்தனர்.

# சூரிய குடும்பத்தின் 8 கோள்களும் அவற்றின் வியக்க வைக்கும் உண்மைகளும்!

சூரிய குடும்பத்தில் உள்ள சூரியனின் நீள் வட்ட பாதையில் சுற்றி வரும் முக்கிய கோள்களைப் பற்றி இந்த கட்டுரையில் காணலாம்.

புதன் வெள்ளி பூமி செவ்வாய் வியாழன் சனி யுரேனஸ் நெப்டியூன் இவை பாறைகளால் ஆன உட்கோள்கள் மற்றும் வாயுகளால் ஆன வெளிகோள்கள் என இருவகைப்படும். வியாழன் மிகப்பெரிய கோள் புதன். மிகச்சிறியது வெள்ளி. வெப்பமானது சூரிய ஒளி மூலம் கோள்கள் பிரகாசிக்கின்றன.

புதன் வெள்ளி பூமி செவ்வாய் ஆகியவை திடமான மேற்பரப்பை கொண்டவை. வியாழன் சனி யுரேனஸ் ஆகியவை வாயு பந்துக்கள்.

புதன் சூரியனுக்கு மிக அருகில் உள்ள கிரகமாகும். பகலில் அதிக வெப்பமும் இரவில் அதிக குளிர் கொண்டது. வெள்ளி அதிக வெப்பமான கோள். காலை விண்மீன்கள் மாலை விண்மீன்கள் என அழைக்கப்படுகிறது. பூமி உயிர் வாழ தகுதியுடைய கிரகமாகும். இது நீல நிற கோள் எனவும் அழைக்கப்படுகிறது.

செவ்வாய் சிறப்பு நிறக்கோள் இதில் இரும்பு ஆக்சைடு அதிக அளவில் உள்ளது வியாழன் மிகப்பெரிய கிரகம் இதில் 67 துணைக்கோள்கள் உள்ளன. சனி அதிக வளைவுகளைக் கொண்டது. நெப்டியூன் சூரியனிலிருந்து அதிக தொலைவில் உள்ளது.

இனி கிரகங்களை பற்றி பார்க்கலாம்:

புதன்: சூரியனின் மிக அருகில் உள்ள கிரகம் சூரியனைவிட வேகமாக வளரும் கோள். இதற்கு துணைக்கோள்கள் இல்லை. தன்னைத்தானே சுற்றிவர எடுத்துக்கொள்ளும் காலம் 59 நாட்கள். சூரியனை சுற்றிவர எடுத்துக் கொள்ளும் நாட்கள் 88 நாட்கள்.

வெள்ளி: பூமிக்கு அருகில் உள்ள கிரகம் புவியின் இரட்டைப் பிறவி என அழைக்கப்படுகிறது. மிகவும் வெப்பமானது. தன்னைத்தானே மெதுவாக சுற்றிக் கொள்ளும். தன்னைத்தானே சுற்றிவர 243 நாட்கள் எடுத்துக்கொள்கிறது சூரியனை சுற்றிவர 224 நாட்களாகும்.



பூமி: உயிர்கலம் என அழைக்கப்படுகிறது. ஒரே ஒரு துணைக்கோள் கொண்டது. 23 டிகிரி சாய்ந்த நிலையில் சூரியனை சுற்றுகிறது. தன்னைத்தானே சுற்றிவர 23 மணி 56 நிமிடம் எடுத்துக் கொள்கிறது. சூரியனைச் சுற்றிவர 365 நாட்கள் எடுத்துக்கொள்கிறது.

செவ்வாய் : சிவப்பு கோள் என அழைக்கப்படுகிறது. இரண்டு துணைக்கோள்கள் கொண்டது. தன்னைத்தானே சுற்றிவர 24 மணி நேரம் 37 நிமிடங்கள் ஆகிறது. சூரியனை சுற்றிவர 687 நாட்கள் ஆகும்.

வியாழன் : மிகப்பெரிய கோள் ஆகும். இதில் 67 துணை கோள்கள் உள்ளன. மிகப்பெரிய துணைக்கோள் கனிமட் எனப்படும் தன்னைத்தானே சுற்றிவர 9 மணி 55 நிமிடம் ஆகும். சூரியனை சுற்றிவர 11 ஆண்டுகள் 10 மாதங்கள் ஆகும்.

சனி : அதிக துணைக்கோள்கள் கொண்டது. கிட்டத்தட்ட 60 துணை கோள்கள் உள்ளது. இதனை கண்டுபிடித்தவர் கலீலியோ அழகிய வளையங்களைக்கொண்ட மஞ்சள் நிற கிரகம் தன்னைத்தானே சுற்றிவர பத்து மணி 40 நிமிடம் ஆகும். சூரியனைச் சுற்றிவர 29 ஆண்டுகள் 5 மாதம் ஆகிறது. ஒரு கற்பனையாக இந்த கிரகத்தை பறித்துக்கொண்டு வந்து கடலில் மிதக்கவிட்டால் தெப்பம் போன்று மிதக்கும் இந்த சனிக்கிரகம்.

யுரேனஸ் : இந்த கிரகத்தை கண்டுபிடித்தவர் வில்லியம் ஏர்செல். 27 துணை கோள்கள் உள்ளன. 98 டிகிரி சாய்ந்து சூரியனை சுற்றி வருகிறது இது ஒரு பச்சை நிறகோள். தன்னைத்தானே சுற்றிவர 17 மணி நேரம் ஆகும். சூரியனை சுற்றிவர 84 ஆண்டுகள் ஆகும

நெப்டியூன் : இதனை கண்டுபிடித்தவர் கேலி என்ற விஞ்ஞானி ஆவார். 13 துணை கோள்கள் உள்ளன. தன்னைத்தானே சுற்றிவர 16 மணிநேரம் ஆகும். சூரியனை சுற்றிவர 164 ஆண்டுகள் ஆகும்.

கிரகங்கள் பற்றிய முக்கிய தகவல்கள்:

பிளானட் என்ற வார்த்தை கிரேக்க மொழியில் இருந்து வந்தது. பிளானட் என்றால் அலைந்து திரிபவன் என்று பொருள். சூரிய குடும்பத்தில் எட்டு கோள்கள் உள்ளன. புதன் வெள்ளி பூமி செவ்வாய் ஆகியவை உட்கோள்கள் எனப்படுகிறது. வியாழன் சனி யுரேனஸ் நெப்டியூன் ஆகியவை வெளி கோள்கள். இதற்கு வாயு கோள் என்றும் பெயர். மிகப்பெரிய கிரகம் வியாழன். மிகச்சிறிய கிரகம் புதன் சூரியனின் அருகில் புதன் உள்ளது. சூரியனின் தொலைவில் நெப்டியூன் உள்ளது. மிகவும் வெப்பமான கிரகம் வெள்ளி. மிகவும் குளிர்ச்சியான கிரகம் நெப்டியூன் துணைக்கோள்கள் இல்லாதது புதன் வெள்ளி கிரகம் ஆகும். வியாழன் தன்னைத்தானே வேகமாக சுற்றிக்கொள்ளும். வெள்ளி கிரகம் தன்னைத்தானே மெதுவாக சுற்றிக் கொள்ளும். ரெண்டு டிகிரி சாய்ந்து சுற்றுவது வியாழன் 23 டிகிரி சாய்ந்து சுற்றுவது பூமி 98 டிகிரி சாய்ந்து சுற்றுவது யுரேனஸ் வெள்ளி கிரகம் கிழக்கிலிருந்து மேற்காக சுற்றி வருகிறது. கோள்கள் தன்னைத்தானே சுற்றிக்கொள்வது ரொட்டேஷன் எனப்படும் கிரகங்கள் சூரியனை சுற்றி வலம் வருவது ரெவல்யூஷன் எனப்படும். இந்த செயல்கள் பிரபஞ்சத்தில் தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

# ஸ்மார்ட் பேரனும் ஸ்மார்டர் தாத்தாவும்


தாத்தாவை விரல் பிடித்து பூங்காவில் நடைப் பயிற்சிக்காகக் கூட்டிப் போனான்; பெயரன்.

தாத்தாவிடம் ஏதேதோ பேசிக்கொண்டிருந்த பெயரன்' தாத்தா! நான் என்னவா ஆகணும்ன்னு நீங்க ஆசைப்படறீங்க? நான் என்னவா ஆவேன்; என்று, நீங்க நினைக்கிறீங்க? அம்மா நான் ஐ. பி. ஸ்' ஆஃபிஸராக ஆகணும்ன்னு சொல்றாங்க. அப்பா சொல்றாங்க, ' நீ டாக்டராகணும் டா'. பெரியப்பா' நீ என்னை மாதிரி சிவில் வழக்கு வக்கீல் ஆகணும். அதுக்கு உன்னை நான் தயார் படுத்தறேன்'னு சொல்றாங்க. எனக்கு என்ன செய்யறதுன்னு தெரியவில்லை. ஒரே குழப்பமாயிருக்கு. என்ன செய்யறது?' என்று கேட்டான்.



எட்டு வயது பேரனிடமிருந்து இத்தனை கூர்மையான வினாவை தாத்தா எதிர் பார்க்கவே இல்லை! ஒரு கணம் யோசித்த தாத்தா' நீ ரொம்ப கெட்டிக்காரன்டா! இங்லீஷ்லே நீங்க சொல்வீங்களே' ஸ்மார்ட் ' ; அதுதான்' நீ ஒரு ஸ்மார்ட் பாய்'. அதினால்தான் உன்னால் இப்படி கேட்க முடிந்தது. அதற்கெல்லாம் நாட்கள் நிறைய இருக்கு. நாளை நடப்பது இன்று எவர் அறிவார்? ஆனாலும்; முதல் கேள்விக்கு என் பதில்; இதோ! வரும் நாட்களில் நீ எவராக வேண்டுமானாலும் ஆகலாம் ; நீ நல்லவனாக ஆக வேண்டும் என்பதே என் ஆசை; சரியா! இப்போது இரண்டாம் வினாவுக்கு என் விடை; இதோ.நீ எதிலும் வல்லவன் ஆவாய்; என்றே நான் நினைக்கிறேன் ; என்றார் தாத்தா.

பேரன்' தாத்தா! நீங்க என்னை விட 'ஸ்மார்ட் க்ராண்ட் பா' . நீங்க ஸ்மார்ட் தாத்தாவாக இருக்கறதினால்தான் தான் நான் ஸ்மார்ட் க்ராண்ட் சன்' ஆக இருக்கிறேன். என்று சொல்லி கைகுலுக்கினான்; பேரன்.



**- சசிகலா விஸ்வநாதன்**

# " அம்மாவின் முடிவு"

பெங்களூரின் பனி அடர்ந்த ஒரு இரவு. குளிருக்கு இதமாக பிளாஸ்கில் இருந்து கொஞ்சம் வென்னீரை எடுத்துக் குடித்தார் சுனந்தா. தூக்கம் வரவில்லை. பாவம் எப்படி வரும்? நிழல் போல கூடவே இருந்த கணவர் சிவராமன் காலமாகி ஒரு மாதமே ஆகியிருந்தது. அவர் இல்லாத வெறுமை மிகவும் கனத்து கிடந்தது. பிபி சுகர் தைராய்டு இன்று பல பிரச்சனைகள் மாமிக்கு. மனைவியை அன்போடும் அக்கறையோடும் பார்த்துக் கொண்டிருந்த அவரது இழப்பில் நிலைகுலைந்து போய்விட்டாள்.

70 வயதை நெருங்கி விட்ட மாமிக்கு மூன்று பெண்கள் ஒரு பிள்ளை . இரண்டு பெண்களும் பிள்ளையும் வெளியூரில் இருக்க, மூத்தவள் வைஷ்ணவி, அத்தை பிள்ளை ரகு ராமனை கல்யாணம் முடித்து உள்ளூர்லயே இருக்கிறாள்.

அவ்வப்போது சிறு மனத்தாபங்கள் இருந்தாலும் பெண்ணும் மாப்பிள்ளையும் சிவராமன் தம்பதியை நன்றாகவே பார்த்துக் கொண்டார்கள். அவருக்கு பெண்களைப் பற்றி கவலைப்பட எதுவுமில்லை. பிள்ளை பாலாஜி தான் அவர் கவலை. வேற்று ஜாதிப் பெண்ணை விரும்பி, பதிவுத் திருமணம் செய்து கொண்டு அவன் வந்து நின்ற போது குடும்பம் ஆடிப் போய்விட்டது. ஆச்சாரத்தில் ஊறிய அவரால் அதை ஏற்றுக்கொள்ள முடியவில்லை.

மனஸ்தாபங்கள், சண்டைகள் பெரிதாக, பிள்ளை வேறு வழியின்றி ஒதுங்கிக் கொண்டான். அப்பா என்றால் அவனுக்கு எப்பவும் பயம்தான். அம்மாவுக்கு மட்டும் அடிக்கடி போன் செய்து பேசுவான். கடைசி காலங்களில் அவர் படுத்த படுக்கையாய் இருந்தபோது, பிள்ளை நினைவு வாட்டி வதைத்தது. பாலாஜி தன் மனைவி இந்துவையும் அழகான மகளையும் கூட்டி வந்தபோது.... கண்டு ஆனந்தப்பட முடியாமல் அவருக்கு நினைவு தப்பியிருந்தது.

மறுநாள் அவர் காலம் முடிந்தது. இதோ பொழுது விடிந்தால் 27ஆம் நாள் காரியம். பிள்ளை குடும்பத்தோடு வந்திருந்தான். அம்மாவை தன்னோடு வருமாறு கேட்டுக் கொண்டே இருக்கிறான்.

ஒரு தூக்க மாத்திரையை போட்டுக் கொள்ளலாம் என்று எழுந்த போது கை தவறி, சிவராமன் சாப்பிட்ட மாத்திரைகள் எல்லாம் மேஜை மேலே கொட்டியது. பிரமை பிடித்தாற் போல் அதையே பார்த்துக் கொண்டிருக்க...

ரூமில் லைட் எரிவதை பார்த்து பெண்ணும் மாப்பிள்ளையும் சுநந்தா பக்கத்தில் வந்து உட்கார்ந்தார்கள்.

" என்னமா இன்னும் தூங்காம உட்கார்ந்திருக்க "..

" என்னமோ யோஜன தூக்கம் வரல.. " சுநந்தா ஏதோ சொல்ல வந்து தயங்கி நிறுத்தினார் ..

" மாமி எதோ சொல்ல வரா போல் இருக்கு சொல்லுங்க" என்றார் மாப்பிள்ளை .

" ஒன்னும் இல்லப்பா இன்னும் ரெண்டு மூணு நாளைக்கு பாலாஜி இங்க இருப்பான். அதுக்கப்புறம் என்ன கொஞ்ச நாள்அங்கே வந்து இருக்கச் சொல்றான்... "

" நீ என்ன பண்ணப் போற? போகப் போறியா இத்தனை நாளா உன் பிள்ளை கண்ணுக்கு உன்னைத் தெரியலையா? " என்று அழுகையும் ஆத்திரமும் சேர வெடித்தாள் வைஷ்ணவி.

" இரு கோபப்படாத... இத்தனை நாளா நாங்க உங்க கூட தான் இருந்தோம்... உனக்கு, உன் தங்கைகளுக்கு, புகுந்த வீட்ல மனுஷா நிறைய... என் பேத்திகள் எல்லாம் பாட்டி, தாத்தா, அத்தை, சித்தி கசின்ஸ் என்று ஒத்துமையா சந்தோஷமா இருக்கு...

ஆனா பாலாஜிய பாரு.... அவனுக்கு மாமியார் வீட்டுலையும் ஆதரவு இல்ல.. மனுஷா இல்ல..... ஒரு அவசரம் ஆபத்துக்கு கூட ஒத்தாசைக்கு ஆள் இல்லாமல் அவ கஷ்ட படறா.. அந்த குழந்தை வருணா, மனுஷாளுக்கு ஏங்கிக் கிடக்கு ..இன்னும் கொஞ்ச நாளில் பெரியவளாயிடும். ரெண்டு பேரும் வேலைக்கு போறா... ரெண்டுங்கிட்டான்வயசுபொண்ணு... என்ன இருந்தாலும்...அது என் ரத்தம்..நான் பார்த்துக்க வேண்டாமோ? அப்பா மாதிரி நான் வீம்பு காட்ட முடியாது.. கொஞ்ச நாள் நானு இருந்துட்டு வரேன் " என்றார் உறுதியாக.



வருத்தம் இருந்தாலும் அம்மாவை பற்றி பெருமையாக இருந்தது வைஷ்ணவிக்கு. அம்மாவை தோளோடு அணைத்து படுக்கையில் ஒண்டிக் கொண்டாள்...
விடிய கொஞ்சம் நேரமே இருக்கிறது..பாலாஜிக்கும்!

**-மீனா சேகர்**

# Boomer to Gen Z

பாகம் 21



**வி.பிரபாவதி**
**மடிப்பாக்கம்.**

பால்கனியில் அமர்ந்து பேசிக் கொண்டிருந்த வாசுவும் மாலுவும் தங்களுக்குள் ரசித்துக் கொண்டிருந்தார்கள்.

"தேங்காய் உருட்டும் போது நீ விட்டுக் குடுத்தது எனக்குத் தெரியும்" - வாசு

"என்னோட கையில காயம் வந்துடாம நீ பாத்துண்டது எனக்கும் தெரியும்" - மாலு.

"இப்ப நெனைச்சாலும் எத்தனை சந்தோஷமா இருக்கு" - வாசு

"நம்ப அப்பவே ஒருத்தருக்கொருத்தர் விட்டுக் கொடுக்கப் பழகிண்டுட்டோம். அதுதான் நிஜம்" - மாலு.

"வாசு கொஞ்சம் வாயேன்" கல்யாணி அழைத்தாள்.

கொஞ்சம் வயதானதால் வரும் முட்டிவலி வந்து அவஸ்தைப் படுகிறாள். அவளுக்கும் அப்படி இப்படி என்று எண்பதைத் தொடப் போகிறது.

மாலு நலுங்கு பற்றி யோசித்தாள். 'உப்புத் தறேன் பருப்பு தா' என்று கேட்பதும், ஒருவருக்கொருவர் தலைவாரி, நெத்திக்கெடுவதும், தேங்காய் உருட்டுவதும், வாழையிலை விசிறியில் வீசி காத்து வருதா என்று கேட்பதும் எத்தனை அருமையான சம்பிரதாயங்கள்.

சீமாச்சு, சீதா, அனு, சுந்தரி இன்னும் பலரும் சேர்ந்து அமர்க்களப்படுத்தினார்கள்.

'மெல்ல மெல்ல வெட்கம் விலக்கி' என்பது போல் இருந்தது.

சாந்தி முகூர்த்தம் வாத்தியார் குறித்த நேரத்தில் நடக்க வேண்டும் என்று இரு வீட்டாரும் பதைபதைப்புடன் பொண்ணு மாப்பிள்ளையை அலங்காரம் செய்து அனுப்பி வைத்தார்கள்.

வாசுவும் மாலுவும் கட்டிலில் அமர்ந்து ஏதேதோ பேசிக் கொண்டிருக்க, இவர்களை உள்ளே அனுப்பிவிட்டு வெளியே கும்மியடித்த மாமிகள்! அதில் ஒரு மாமி "ம்ம்ம் ஆகட்டும் ஆகட்டும் என்றாள்". இவர்களுக்கு வெட்கம் பிடுங்கித் தின்றது.

"ஆமாம் நீங்க என்ன நேசிச்சேளா?"

"அது வந்து மாலு, நோக்கு ஜாதகம் எடுக்கறான்னதும் எனக்கு ஜிவ்வுனு ஒரு உணர்ச்சி. என்னவிட்டு ஏதோ விலகிப் போவது மாதிரி" .



"அப்பத் தெரிஞ்சுண்டேன் நீ என் மனசு முழுக்க இருக்கன்னு. ஆனா நீ ஒன்னும் சொல்லல. ஒனக்கும் நறையா வரன் வந்தது. யாருக்கும் இது தோணாதப்ப நான் யார்க்கிட்ட சொல்ல முடியும்".

"அம்மாக்கு முடலன்னு சென்னைக்கு வந்தப்ப நீ மாஞ்சு மாஞ்சுப் பாத்துண்டதும் அம்மாக்கு ரொம்ப பிடிச்சுப் போயிடுத்து. அம்மாவே மாமாகிட்ட (பஞ்சு ஐயர்) கேட்டதும், மாமாவும் சம்மதிச்சதும் எனக்கு எத்தனை சந்தோஷம் தெரியுமா?" விரிந்த கண்களில் காதல் வழியக் கூறினான் வாசு.மாலு மெல்ல அவன் கைகளைப் பற்றினாள். இதோ கல்லூரிக்குச் செல்லும் ஸ்ரவந்தியும், ப்ளஸ் டு படிக்கும் அபிஷேக்கும் வரமாகக் கிடைத்தனர்.

ஸ்ரவந்தி கம்ப்யூட்டர் சயின்ஸ் படிக்கிறாள். கடைசி வருடம். பெரிய பேர் சொல்லும் இரண்டு மூன்று கம்பெனியில் ப்ளேஸ்மென்ட்டும் கிடைத்தாயிற்று.

அபிஷேக் சயின்ஸ் குரூப் எடுத்துப் படிக்கிறான். மருத்துவராக விரும்புகிறான்.

இட ஒதுக்கீட்டில் இடம் கிடைக்க வேண்டும். வருடங்கள் உருண்டன. ஸ்ரவந்தி வேலைக்குச் செல்கிறாள். வாசு சர்வீஸில் இருந்தாலும் மாலு விருப்ப ஓய்வு எடுத்துக் கொண்டாள். குழந்தைகள் படிப்பு, உத்தியோகம், கல்யாணியின் உடல்நிலை என்று யோசிக்க வேண்டியிருந்தது.

பொறுப்புகள் முக்கியமானது.

பெண் சம்பாத்யத்தை சேர்த்து வைத்தாள் மாலு. அபிஷேக் மெடிக்கல் என்ட்ரன்ஸ் பாஸானான். இரண்டாம் வருடம் மெடிக்கல் காலேஜில் படிக்கிறான். நிறைய செலவாகிறது. இருந்தாலும் பொறுப்பாகப் படிப்பதனால் பெற்றோருக்குக் கஷ்டம் தெரியவில்லை.

ஸ்ரீஹரி, சுந்தரி கல்யாணங்கள் முடிந்ததும் குழந்தைகள் பிறந்ததும் நினைத்துப் பார்க்கும் அலைவரிசைகளாகத் தெரிந்தது.

வாசு அம்மாவுக்குக் கொஞ்சம் காலில் தைலம் தேய்த்துவிட்டான்.

"கொழந்தைகள் வந்துட்டாளாப்பா?"

"இல்லம்மா, மணியாகலை. செத்த நேரம் ஆகும். நீ தூக்கம் வந்தா தூங்கு மா"

"சரிப்பா, கதவ ஒருக்களிச்சுட்டுப் போ" என்றாள் கல்யாணி.

தொடரும்...

# "மாயக்கண்ணன் லீலை"

கோகுலத்தில் ஒரு நாள் கண்ணன், பலராமன் மற்றும் இடை சிறுவர்கள் எல்லோரும் விளையாடிக் கொண்டிருந்தனர். அப்பொழுது கண்ணன் மண்ணை எடுத்து வாயில் போட்டு தின்றான் .அதைப் பார்த்த சிறுவர்களும் அண்ணன் பலராமனும் யசோதை தாயிடம் சொன்னார்கள். அம்மா கண்ணன் மண்ணை தின்றான் ஏன்?என்று நீயே கேள் என்று பலராமனும் கூறினான். குழந்தையின் நலனை விரும்பி யசோதை கிருஷ்ணனின் கையை பிடித்துக் கொண்டு அதட்டி, மிரட்டி ஏன் மண்ணை தின்கிறாய் ?என்று கேட்டாள்.அதற்கு கிருஷ்ணன் அம்மா நான் மண்ணை தின்ன வில்லை .எல்லோரும் பொய் சொல்லுகிறார்கள். என் மீது கோள் சொல்லுகிறார்கள் என்றான். அப்படியானால் நீ வாயை திற என்றாள். கிருஷ்ணன் அவர்கள்



சொல்வது உண்மை என்றால் நீயே என்னுடைய வாயைப் பார் என்றார். பகவான் தன்னுடைய லீலையை புரிந்தார். கிருஷ்ணன் வாயை திறந்தார். யசோதை கிருஷ்ணனின் வாயில் உலகத்தையே கண்டாள்.வாயு, அக்னி, சூரியன் ,சந்திரன், நட்சத்திரம், வான், திசை ,மழை, தீவு ,கடல் இவைகளுடன் பூலோகத்தையும் கண்டாள். தன்னுடைய குழந்தையின் வாயில் வேறுபட்ட அடையாளங்களுடன் விசித்திரமாய் தோன்றும் இந்த உலகத்தையும், கோகுலத்தையும் அதில் தானும் உள்ளதை பார்த்தாள். ஆச்சரியம் அடைந்தாள். இது என்ன கனவா? அல்லது தேவ மாயையா? என்று அவளுக்கு புரியவில்லை. என் குழந்தைக்கு இயற்கையாகவே ஏற்பட்டுள்ள ஒரு ஆத்ம சக்தியா என்று குழம்பினாள். கிருஷ்ணன் இந்த மாயையை உண்டாக்கினார். யசோதை தன்னிலை மறந்தாள் .சிறிது நேரம் கழித்து மனம் தெளிந்து ,தன் மகனை மடியில் தூக்கி வைத்துக் கொண்டு ஆசையுடன் கட்டித் தழுவினாள். கண்ணனின் மீது அதிக பாசம் கொண்டாள்.





- எம் .எல். பிரபா
ஆதம்பாக்கம்.
சென்னை 88

---

தினம் ஒரு தலைவர்கள்

# உமாபாய் குந்தாபூர் வரலாறு

உமாபாய் குந்தாபூர் (1891-1992) கர்நாடகாவைச் சேர்ந்த இந்திய விடுதலை இயக்க வீராங்கனையாவார். இவர் சுதந்திர போராட்ட வீரர்களின் குழுவான பாகினி மண்டலின் நிறுவனராக இருந்தார். நாராயண் சுப்பாராவ் ஹார்திகர் நிறுவிய இந்துஸ்தானி சேவா தளத்தின் பெண்கள் பிரிவின் தலைவராகவும் இருந்தார்.



பிறப்பு மற்றும் கல்வி
1892 ஆம் ஆண்டு மார்ச் 25 ஆம் தேதி குந்தாப்பூரில் பிராமணரான தந்தை கோலிகேரி கிருஷ்ணராவ், தாயார் துங்காபாய் ஆகியோருக்குப் பிறந்த உமாபாய்க்கு பவானி கோலிகேரி என்ற பெயர் இருந்தது. 1898 இல், இவர்கள் குடும்பம் மும்பை நகருக்கு குடிபெயர்ந்தது.

சொந்த வாழ்க்கை
13 வயதில், சஞ்சீவ ராவ் என்பவரை 1905 இல் மணந்தார். இவருக்கு ஐந்து சகோதரர்கள் இருந்தனர்.
வாழ்க்கை
1920 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 1 ஆம் தேதி பாலகங்காதர திலகரின் இறுதி ஊர்வலத்தின் மூலம் உமாபாய் சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபட உத்வேகம் பெற்றார். அந்த சமயங்களில் காங்கிரசின் சேவையைப் பார்த்த பிறகு, சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபட முடிவு செய்தார்.

செப்டம்பர் 4, 1920 அன்று மகாத்மா காந்தி ஒத்துழையாமை இயக்கத்தை அறிவித்தபோது, உமாபாய் தனது சகோதரர் ரகுராம ராவ் மற்றும் கணவர் சஞ்சீவ ராவ் ஆகியோருடன் இயக்கத்தில் பங்கேற்றார். இவர் காதியின் பயன்பாட்டை ஊக்குவித்தார். வீடு வீடாகச் சென்று பெண்களை சுதந்திரப் போராட்டத்தில் பங்கேற்க ஊக்குவித்தார். கூடுதலாக, இவர் பல நாடகங்களை எழுதி மேடையில் நிகழ்த்தினார். நாடகங்களை மேடையேற்றுவதன் மூலம் மற்றவர்களை இயக்கத்தில் சேர ஊக்குவிக்கும் நோக்கத்துடன் இருந்தார்.

28 மார்ச் 1923 இல் காசநோயால் அவரது கணவர் சஞ்சீவ ராவ் இறந்த பிறகு, அப்போது 31 வயதாக இருந்த உமாபாய், தனது மாமனாருடன் ஹுப்ளிக்குத் திரும்ப முடிவு செய்தார். அங்கு இவரது மாமனார் ஆனந்த ராவ் ஹுப்ளியில் கர்நாடக அச்சகத்தை நடத்தி வந்தார். பின்னர் உமாபாய் 1923 இல் நாராயண் சுப்பாராவ் ஹார்திகரால் நிறுவப்பட்ட இந்துஸ்தானி சேவா தளத்தில் ஈடுபட்டார். இந்திய இளைஞர்களை சுதந்திரப் போராட்டத்தில் பங்கேற்க ஊக்குவிக்கும் நோக்கத்துடன். சங்கத்தில் சேர்ந்தது மட்டுமின்றி, மகளிர் பிரிவு தலைவராகவும் தேர்வு செய்யப்பட்டார். கூடுதலாக, உமாபாய் திலக் கன்யா பள்ளியை மேற்பார்வையிடும் பொறுப்பை ஏற்றுக்கொண்டார். இதுவும் முதலில் ஹார்திகரால் நிறுவப்பட்டது.
இந்திய விடுதலைப் போராட்டம்
சுதந்திரப் போராட்டத்தில் தீவிரமாகப் பங்கேற்ற உமாபாய், 1932ல் ஆங்கிலேய அரசால் கைது செய்யப்பட்டு 4 மாதங்கள் ஏர்வாடா மத்திய சிறையில் அடைக்கப்பட்டார். சிறையில் இருக்கும் போது உமாபாய்க்கு மாமனார் ஆனந்த ராவ் இறந்த செய்தி கிடைத்தது. வலுவான ஆதரவாளராக இருந்த ஆனந்த ராவின் இழப்பு உமாபாயை மிகவும் பாதித்தது. அப்போது சிறையில் அடைக்கப்பட்டிருந்த சரோஜினி நாயுடுவும் உமாபாய்க்கு ஊக்கம் அளித்து, போராட்டம் தொடர்பான அனைத்து நடவடிக்கைகளையும் மறைமுகமாக நடத்த வேண்டும் என்று அறிவுறுத்தினார். உமாபாய் விடுதலையானதும், ஆனந்த ராவ் நிறுவிய கர்நாடக அச்சகத்தை பிரித்தானிய அரசு கைப்பற்றியதையும், திலக் கன்யா பள்ளி மூடப்பட்டதையும் இவர் கண்டறிந்தார். கூடுதலாக, ஆனந்த ராவ் நிறுவிய பகினி மண்டல் என்ற தன்னார்வ தொண்டு நிறுவனம் சட்டவிரோதமானது என்று கருதப்பட்டது. இந்த பின்னடைவுகள் இருந்தபோதிலும், உமாபாய் சுதந்திரப் போராட்ட வீரர்களுக்கு தனது வீட்டில் அடைக்கலம் அளித்து வந்தார். 1942ல் வெள்ளையனே வெளியேறு இயக்கத்தின் போது, இந்திய விடுதலைப் போராட்டம் தீவிரமடைந்தது. பல போராளிகள் உமாபாயின் இல்லத்தில் தஞ்சம் புகுந்தனர். அங்கு இவர் அவர்களுக்கு உணவு மற்றும் தங்குமிடத்தை வழங்கி வந்தார்.



# ‘மீசைய முறுக்கு 2’ படத்தின் முதல் பாடல் வெளியீடு!



குஷ்பு சுந்தர் தயாரிப்பில், கடந்த 2017ஆம் ஆண்டு ஹிப் ஹாப் ஆதி இயக்கி, நடித்திருந்த படம் மீசைய முறுக்கு. இப்படம் ரசிகர்களிடையே நல்ல வரவேற்பைப் பெற்றது. தற்போது இப்படத்தின் இரண்டாவது பாகம் தயாராகி வருகிறது. முதல் பாகத்தைப் போலவே இதையும் ஹிப்ஹாப் தமிழா ஆதியே இயக்கி, இசையமைக்கிறார்.

இப்படத்தையும் குஷ்பு சுந்தரின் அவ்னி மூவிஸ் மற்றும் ஏ.சி.எஸ் அருண்குமாரின் பென்ஸ் மீடியா இணைந்து தயாரிக்கின்றன.

இப்படத்தில் ஆதியுடன் இணைந்து பிரபல யூடியூபர் ஹர்ஷத் கான், சைத்ரா ஜே. ஆச்சார், கேத்திகா சர்மா, ரம்யா ரங்கநாதன், நாசர், கருணாஸ், ஷா ரா மற்றும் ஆடுகளம் நரேன் ஆகியோர் நடிக்கின்றனர்.

சமீபத்தில் படத்தின் ஃபர்ஸ்ட் லுக், டீசர் வெளியாகி கவனம் ஈர்த்தது. இந்நிலையில் இன்று படத்தின் ஃபர்ஸ்ட் சிங்கிள் Aura 10/10 வெளியாகி ரசிகர்களிடையே கவனம் ஈர்த்துவருகிறது.



விஜய் தொலைக்காட்சியில் வெற்றிகரமாக ஓடிக்கொண்டிருக்கும் சீரியல் சிறகடிக்க ஆசை. இந்த சீரியலில் மீனா என்கிற கதாபாத்திரத்தில் நடித்து பிரபலமானவர் நடிகை கோமதி பிரியா. இவர் தமிழ் மட்டுமின்றி தெலுங்கு, மலையாளம் ஆகிய இரு மொழிகளிலும் உள்ள சீரியலில் நடித்து வருகிறார்.

ரசிகர்களின் மனம் கவர்ந்த சின்னத்திரை நடிகையாக இருக்கும் கோமதி பிரியா, தற்போது தனது இன்ஸ்டாகிராம் பக்கத்தில் அழகிய சேலையில் எடுத்துக்கொண்ட போட்டோஷூட் புகைப்படங்களை பதிவு செய்துள்ளார்.

# செல்வராகவன் நடிக்கும் ‘மனிதன் தெய்வமாகலாம்’ படத்தின் டீசர் அப்டேட்



இயக்குநர் டென்னிஸ் மன்ஜுனாத் இயக்கத்தில் ‘மனிதன் தெய்வமாகலாம்’ என்ற படத்தில் செல்வராகந நடித்து வருகிறார். விஜயா சதீஷ் இப்படத்தை தயாரிக்கிறார்.

இந்தப்படத்தில் குஷி ரவி, வை.ஜி. மகேந்திரன், மைம் கோபி, கௌசல்யா, சதீஷ், லிர்திகா, என். ஜோதி கண்ணன் உள்ளிட்ட பலர் முக்கிய பாத்திரங்களில் நடிக்கின்றனர்.

இயற்கையும் அமைதியும் சூழ்ந்துள்ள ஒரு கிராமத்தில் நிகழும் பெரும் சோகம் அதன் ஒற்றுமையை சிதைக்கிறது. அதனைத் துடைத்தெறிய மக்கள் மனவலிமையில் போராடும் நாயகன், தனது கிராமத்தைக் காப்பாற்ற எடுக்கும் தீர்மானம், அவனை அங்கு தெய்வமாக உயர்த்துகிறது. இதுவே படத்திற்கான அற்புதமான தலைப்பை உருவாக்கியது.

# டாடா இயக்குநர் தயாரிப்பில் கவுதம் ராம் கார்த்திக்






கவின், அனுபமா தாஸ் நடிப்பில் வெளியாகி பெரும் வெற்றி பெற்ற டாடா படத்தை இயக்கியவர் கணேஷ் கே. பாபு. இவர் தற்போது நடிகர் கவுதம் ராம் கார்த்திக் நடிக்கும் படத்தை தயாரித்து வருகிறார். தீனா ராகவன் எழுதி, இயக்கும் இந்தப் படம் கவுதம் ராம் கார்த்திக்-இன் 19-ஆவது திரைப்படம் ஆகும்.

பலக்கட்டங்களாக நடைபெற்று வரும் இந்தப் படத்தின் டைட்டில் டீசர் வருகிற மார்ச் 6-ஆம் தேதி வெளியாகும் என்று படக்குழு அறிவித்துள்ளது. இதற்கான போஸ்டரில் பச்சை மற்றும் நீல நிற கொடியின் மீது கவுதம் ராம் கார்த்திக் 19 என்பதை குறிக்கும வகையில், “GRK #19” என குறிப்பிடப்பட்டுள்ளது.

கவுதம் ராம் கார்த்திக் மற்றும் டாடா இயக்குநரின் புதிய கூட்டணியுடன் இந்தப் படத்தில் செல்வராகவன் முக்கிய கதாபாத்திரத்தில் நடித்துள்ளார். டைட்டில் டீசரைத் தொடர்ந்து படத்தின் அடுத்தடுத்த அப்டேட்கள் விரைவில் வெளியாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

# என்ன செய்தார் விஜய்? தங்கையின் கேள்விக்கு வீடியோ பகிர்ந்து பதிலடி கொடுத்த சிபி சத்யராஜ்



திமுகவில் இணைந்துள்ள நடிகர் சத்யராஜ் மகள் திவ்யா தொடர்ந்து தவெக தலைவர் விஜய் குறித்து கடுமையாக விமர்சனங்களை முன்வைத்து வருகிறார்.

அவ்வகையில் திவ்யா சத்யராஜ் அண்மையில் அவரிடம் 2 கேள்விகளை கேட்டிருந்தார். ஒன்று, அரசியலுக்கு வருவதற்கு முன்பு நீங்கள் மக்களுக்கு என்ன செய்திருக்கிறீர்கள்? அடுத்த கேள்வி நீங்கள் கொள்கை தலைவராக பெரியாரை வைத்திருக்கிறீர்கள். ஆனால் உங்கள் கட்சியை சேர்ந்தவர்கள் பெண்களை இப்படி தப்பா பேசுறாங்க, இதை சகித்துக்கொள்ள முடியாது என்று பேசியிருந்தார். திவ்யாவின் கேள்விகளுக்கு த.வெ.க தொண்டர்களும், விஜய் ரசிகர்களும் பதிலடி கொடுத்தனர்.

இந்நிலையில், விஜயின் தீவிர ரசிகரான சிபி சத்யராஜ் தனது அப்பா நடித்த அரசியல் படமான அமைதிப்படை படத்தின் காட்சியை பகிர்ந்து தனது சகோதரிக்கு பதிலடி கொடுத்துள்ளார்.

சிபிராஜ் தனது இன்ஸ்டாகிராம் ஸ்டோரியில், அமைதிப்படை படத்தில் மணிவண்ணனிடம் பேசும் சத்யராஜ், ‘மணியா வரலாறை தெரிஞ்சுக்க’ என வசனத்தை வைத்து விட்டு விஜய் இதுவரை செய்த உதவிகள் தொடர்பான வீடியோவை பகிர்ந்து பதிலடி கொடுத்துள்ளார்.

# போருக்கு நடுவில் சிக்கிக்கொண்ட லப்பர் பந்து பட நடிகை



இரண்டு வருடங்களுக்கு முன் வந்து மிகப்பெரிய ஹிட் ஆன படம் லப்பர் பந்து. அந்த படத்தில் ஹீரோயினாக நடித்து இருந்தவர் ஸ்வாசிகா. அந்த ஒரே படம் அவரை புகழின் உச்சிக்கே கொண்டு சென்றது.

அதற்கு பிறகு அவருக்கு அதிக பட வாய்ப்புகள் வந்து குவிந்தது. குறிப்பாக அவர் நடித்த மாமன் படம் மிகப்பெரிய வரவேற்பை பெற்றது.

சமீபத்தில் இஸ்ரேல் – இரான் போர் காரணமாக அரபு நாடுகளிலும் கடும் பதற்றம் நிலவியது. இரான் தாக்குதல் நடத்திய காரணத்தால் துபாய் உள்ளிட்ட அனைத்து விமான நிலையங்களும் மூடப்பட்டன.

நாடு திரும்பிய சுவாசிகா

அபுதாபில் இருந்த நடிகை சுவாசிகா நாடு திரும்ப முடியாமல் கடந்த மூன்று நாட்களாக தவித்திருக்கிறார். தற்போது விமானம் மூலமாக நாடு திரும்பி இருக்கும் அவர் உருக்கமாக பேசி இருக்கிறார்.

அங்கு பதற்றம் அதிகமாக இல்லை. ஆனால் நான் வேறு நாட்டவர் என்பதால் இயல்பாகவே அதிகம் பயம் ஏற்பட்டது. விமான நிறுவனம் அனைத்து ஏற்பாடுகளையும் செய்து கொடுத்தது என நடிகை சுவாசிகா தெரிவித்து இருக்கிறார்.

Any Website
Rs.10,000/-
Professional Websites at Affordable Price!
Call: 7789941009

Sanjay
Cell: 90032 64920
Real Choice
Retail & Wholesale Dealers In: Designer Sarees, Chudidhar, Laganga, Choli & Wedding Collection
#361, Mint Street, (Opp. New Jain Temple)
Sowcarpet, Chennai-600 079.
Real Choice Chennai | Real Choice Chennai | Real Choice Chennai

WANTED
Needed female staff to look after children, patients.
Contact
9150989424

WANTED
Retd, VRS, Home Makers, NRIs, Business Person
Contact
8248951872

WANTED
Site Supervisor required for construction work in Ambattur
Contact:
8428872887

சிவா விஷ்ணு
திருமண தகவல் மையம்
அனைத்து இனத்தவர்களுக்கும்
முதல் மணம் • மறுமணம்
பொருத்தமான ஜாதகங்கள் அனுப்பப்படும்
மணமகன் • மணமகள் தேவைப்படும் அனைவருக்கும்
நம்பகமான மற்றும் விரைவான சேவை
✓ அனைத்து இனத்தவர்களுக்கும் பதிவு
✓ ஜாதக பொருததம் பார்த்து அனுப்பப்படும்
✓ முதல் திருமணம் & மறுமணம் வசதி
✓ உடனடி தொடர்பு & சிறந்த பொருத்தம்
தொடர்புக்கு: 9150989424

Vilambaram
WE HELP YOU TO BOOST YOUR BUSINESS
VISIT:VILAMBARAM.COM CONTACT: 8122798599

WANTED
Job 1-SALES ENGINEER
Required Experience:
05-07 years in selling Acrylic Laminates (Decorative for Interiors) in Tamil Nadu
Job 1-SALES ENGINEER
Required Experience:
05-07 years in selling Metal Roofing for PEB Building in Tamil Nadu
ALP AEROFLEX INDIA PVT. LTD.
Contact details for Tamilnadu Location
Cell: 9884083322
Email: hari@alpoverseas.com

START YOUR OWN EPAPER WEBSITE TODAY!
CALL 7789941009

Wanted REPORTERS
சட்டமன்ற தொகுதி வாரியாக
நிருபர்கள் தேவை
PRGI No. TNBIL/25/A1564
பேப்பர்பாய்
8122664699

தனியார் வாகன உதிரிபாகங்கள் உற்பத்தி செய்யும் நிறுவனத்தில் பணிபுரிய ஆட்கள் தேவை.
Quality Line Inspector
Fresher/Exp Male Only
Qualification - ITI/Diploma/B.E
Final Quality Inspector
Fresher / Exp - Male/Female
Qualification: 10th/ 12th/ ITI
VMC Machine operator
Fresher/ EXP Male only
Qualif: 10th/12th/ITI/Diploma
Mr Prakesh : 8939 940 090
Mr.Neelavanan : 9884 001 253
SALARY BASED ON EXPERIENCE

TAMIL TELECALLER JOB FOR
WORK FROM HOME
ALL OVER TAMILNADU
APPLY NOW
7789951009
PRINT MEDIA, DIGITAL MEDIA
SOCIAL MEDIA
DAILY & MONTHLY SALARY
SALARY STARING FROM
Rs. 10000/- onwards
Whatsapp: 7789951009

UNIVERSAL ENGINEERS CHENNAI PVT LTD
உடனடி வேலை வாய்ப்பு திங்கள் முதல் வெள்ளி வரை காலை 10.00 மணிமுதல் மாலை 3.00 மணிவரை நேரில் வரவும்
அலுமினிய வெல்டர் - 5 நபர்கள்
டிக் (TIG) வெல்டர் - 5 நபர்கள்
ஹெல்பர்கள் - 25 நபர்கள்
பெண்டிங் மிஷின் ஆப்பரேட்டர்
Press Brake,Laser ஆப்பரேட்டர்
Turret ஆப்பரேட்டர்
5 - 6 வருடம் அனுபவம் உள்ளவர்கள் தேவை.
No. 72, North Phase, Ambattur Industrial Estate,Chennai - 600098
hr.executive@universalengineers.in
Ph: 8925928971

அருள்மிகு ஸ்ரீ மாலையம்மன் சமேத அருள்மிகு சுப்பிரமணியர் துணை
அருள்மிகு திருச்செந்தூர் முருகர் துணை
ஸ்ரீ ஹரி
ஜோதிட மையம்
ஜாதகம், திருமணப் பொருத்தம், ஜாமக்கோள் , ஆரூடம் பார்க்கப்படும்.
தாம்பூல பிரசன்னம் , சோழி பிரசன்னம், அஷ்ட மங்கல பிரசன்னம்
மேலும் திருமணம், புத்திர பாக்கியம், கல்வி, தொழில் ஆகியவற்றில் ஏற்பட்ட தடைகளுக்கு ஜோதிடரீதியான தீர்வு செய்யப்படும்.
ஜோதிட நிபுணர் இராஜபாளையம் இராமமூர்த்தி MA Astro
81899 08040 / 93425 03572
harisudhan1968@gmail.com




### யுக்தி !

தற்போது இளம் வயது
பெண்கள் கூட
'அங்கிள் ' என்றழைத்து
அவர்கள் வயதை குறைத்து
மதிப்பிட
நம்மை
பலிகடா
ஆக்குகிறார்கள்!



**எம்.பி. தினேஷ்**
கோவை

1. சீக்கிரம் வீட்டுக்கு
போனால் சோறு சூடாக
இருக்கும் பொண்டாட்டி ஜில்
என்று இருப்பாள்
லேட்டா வீட்டுக்கு போனால்
பொண்டாட்டி சூடா
இருப்பாள் சோறு ஜில் என்று
இருக்கும் இவ்வளவுதான்
வாழ்க்கை

2. பக்கத்து வீட்டில்
வழங்கப்படாத திருமண
அழைப்பிதழில்அச்சிடப்பட்டு
இருந்தது சுற்றமும் நட்பும்

3.நேரத்தை
பயன்படுத்தியவன்
தோற்றதும் இல்லை
வீணாக்கியவன் வென்றதும்
இல்லை

4.பொறுமை கசக்கும்
ஆனால் அதன் மூலம்
கிடைக்கும் பலன் இனிக்கும்

5. கால நேரங்கள்
எல்லோருக்கும்
பொதுவானவை
பயன்படுத்திக்
கொள்பவர்களுக்கு
அது ஒரு படிக்கல்
வீணாக்குபவர்களுக்கு
அது ஒரு தடை கல்

**நடேஷ் கன்னா**
கல்லிடைக்குறிச்சி

### மூத்தோர் சொல் கேள்

அமிர்தம் என்றொரு
அட்சயம் மூத்தோர்சொல்!
அனுபவ ஏணியாய்
ஆயிரம் கருத்துக்களை
அள்ளித்தரும் பொற்குடம்!
ஆழ்கடலில் முத்தெடுக்கும்
ஆற்றலான வலிமை சொல்!

மூத்தோரின் முத்துச்சொல்
சோதனைகளை வென்று
சாதனைதரும் வல்லமை!
ஒளிமயமான வாழ்விற்கு
ஒளியேற்றும் குல விளக்கு!


எதிர்கால உயர்விற்கு
வழிகாட்டும் படிக்கட்டு!
சரித்திரம் படைத்திடும்
செம்மை சொல்லின்
சிந்தனை நாயகன்!
அறிவுரைகளை அள்ளி
அன்போடு தந்திடும்
அர்த்தமுள்ள ஆசான்!

மூத்தோரெனும் முத்தை
ஒதுக்கும் நாகரீகம்
பண வேட்டையால் மறையும்
பாசமான உறவுகளால்
மறையும் நீர்க்குமிழி போல
மறுக்கின்ற மூத்தோர் சொல்
வளரும்
தலைமுறையினருக்கு
வாழ்த்தாய் அமைந்திட

மூத்தோரை வெறுக்கும்
மூடர்கள் கூட்டம்
மிகுந்த உலகமாய்
மாறி மூத்தோர்சொல்
மதிக்கும் மனிதராய்
வாழ
முயற்சிப்போம்!
மூத்தோர்
சொல்லை
மகிழ்வாய்
ஏற்போம்!



**பா.கலைமகள்,**
விழுப்புரம்.



### பொன்மழைப் பொழியும் கனகதாரா ஸ்தோத்திரம்.!

சங்கரன் வந்தார்..
பிச்சைப் பாத்திரமேந்தி
என்பசி தீர்ப்பாருண்டோ
குடிசைமுன் நிற்கின்றார்.!

ஏழைப் பெண்ணவள்..
குடிசையிலே இருந்தாள்..
இரக்கமுடன் உணவினை..
எங்குமே தேடுகின்றாள்!

பாலகன் துறவி.. பசி
என்கிறானே.. யாது நான்
தருவது என்றே..
துயரத்தில் துடித்தாள்!

உணவில்லை ஆயினும்
ஒரே ஒரு நெல்லிக்கனி
இருப்பதை அறிந்தாள்.
இதயத்தில் மகிழ்ந்தாள்

ஏழை மனதில்
இருப்பதை கொடுக்க
வாயில் வந்தாள்..

வாஞ்சையுடன் தந்தாள்;
எல்லாம் இருந்தும். ஈந்திட
மறுப்பார். நடுவே இத் தாய்.
சங்கரர் நெகிழ்ந்தார்.!

இவளின் அன்பு..
வானிலும் உயர்ந்தது!
கருணையே சிறந்தது
கண்மூடி நின்றே.

மகா லெட்சுமியை
மனதுள் நினைத்தார்!
தாயவள் வறுமைத்
தீர்ந்திடத் துதித்தார்!

வானம் இடித்தது..
பூமியோ அசைந்தது..
மாது அவள் குடிசைமேல்..
பொன் மழைப் பொழிந்தது!

தங்க நெல்லிக்கனி
தாரை தாரையாய்
ஏழைத் தாயவள்
குடிசைமேல் பொழிந்தது.!

கருணைவுடைய..
இதயங்கள் அழைக்க
கைகளில் இருப்பதை
அன்புடன் கொடுக்க..

அன்னை லெட்சுமி
அருள் மழைப் பொழிவாள்!
ஆதி சங்கரர்.. இதை
மெய்ப்பித்துக் காட்டினார்.!



வாழிய கருணை..
வாழியத் திருமகள்..
ஆதிசங்கரர் தந்த
அத்வைதம் வாழியவே!

**வே.கல்யாண்குமார்.**

1. சிலவற்றை தெரிந்து
கொண்டால் தெளிவாக
இருப்போம் பலவற்றை
தெரியாமல் இருந்தால்
நிம்மதியாக இருப்போம்

2. கூட்டுக் குடும்பமாக
வாழ்வது தேனீக்கள் மட்டுமே
சந்தேகம் இருந்தால் அதில்
கை வைத்து பாருங்கள்


3. சம்சாரம் தொடாமல்
ஷாக் அடிக்கும்
மின்சாரம் தொட்டால்
ஷாக் அடிக்கும்

4. காதல் என்பது
காவிரி ஹாஸ்பிடல்
மாதிரி உள்ளே போனால்
திரும்பி
வந்துவிடலாம் கல்யாணம்
என்பது அப்பல்லோ
ஹாஸ்பிடல் மாதிரி உள்ளே
போனால் திரும்பி வர
முடியாது

5. பொண்டாட்டியும்
சொந்தக்காரங்களையும்
பேஸ்புக்கில் பிரண்ட்ஸாக
வைப்பது நமக்கு நாமே
சூனியம் வைத்துக்
கொள்வதற்கு
சமமானது



**நடேஷ் கன்னா**
கல்லிடைக்குறிச்சி



### சிறு மரம்

மண்ணின் மடியில்
மெல்ல விழுந்தது
ஓர் விதை...
பூமியில் விழுந்த
மழைத்துளி முத்தை
திறந்து புதிய
பாதை தேடிய வேர்கள்

நிழல் பரப்பி காற்றின்
கையில் தொங்கித் துள்ளும்
பச்சை விரல்களாக
இலைகள்
வலியைத் தாங்கி
வலிமையையும், உறுதியையும்
கற்று கொடுக்கும் மரங்கள்...

இன்று சிறியதாக...
நாளை பெரிதாக...
நிழல் தரும் சிறு மரம் ...

ஒரு
விதையிலே
ஒரு உலகமே
ஒளிந்து
கிடக்கிறது



**நா.பத்மாவதி**
கொரட்டூர்

### துளிப்பாக்கள்

நெய்த நூலை விட
தைத்த நூல்களே அதிகம்
ஏழையின் சேலை!
ஏரிகள் நீரில்லாமல்
நிரம்பி வழிந்தது
அடுக்குமாடி வீடுகளாக.

மண்ணில் புதைந்த பிறகும்
மண்ணை முட்டி முட்டி
முளைத்து எழுந்த விதை!
தீக்குச்சி உரசும்போது
எரியும் நினைவுகள்
அடுக்கிய பிஞ்சு விரல்கள்!
மழையில் குளித்த
மின்சாரக்
கம்பிகள்
கண்ணீர்
வடிக்கின்றன!



**பூ.சுப்ரமணியன்,**
சென்னை

### பொருளற்றதாய்!

இல்லறம் என்பது...
நல்லறமாக நடக்க வேண்டும்
என்றால் அறம் தேவையில்லை
பொருள் ஒன்றே போதும்
என்று முடிவுக்கு வந்து
பொருளுக்காகவும்
ஆசைக்காகவும்
தேவைக்காகவும்
வசதிக்காகவும் ஓடும் பல
மனிதர்களின் வாழ்வு
பொருளற்றதாய் முடிந்து
விடுகிறது மரணத்தில்!

### பரிகாரம்!

சிலர் அரிதாரம்...
நாடகத்தில் தெரியும்
சிலர் அவதாரம் நடிப்பில்
தெரியும் சிலர் அகங்காரம்
கோபத்தில் தெரியும்
சிலர் அதிகாரம் வசதி
வாய்ப்பில் தெரியும்
இதற்கெல்லாம் பரிகாரம்
இல்லையென்று தெரிந்தும்
தொடர்ந்து துணி கர
பாவம் செய்யும் பாதகர்களின்
வாழ்வு பரிதாபத்தில் முடியும்!

### வாழ்வு!

விதி வழியே... ஓடம் போல்
என் பயணம் ஆனது
அலையடிக்கும் கடல்
அலையில் அழிந்துவிட்ட
மணல் சுவடாய்
என் கதையானது
எதிர்நீச்சலில் கரை சேர
முடியாமல் என் கைகள்
ஓய்ந்தது சுழலில் மாட்டிய
நுரையாய் என் மனம் ஆனது
துடுப்பிழந்த
படகு
தண்ணீரில்
சுற்றுவதை
போல்
சுற்றி சுற்றி
ஓய்ந்த நானும்
உணர்ந்துவிட்டேன்
வாழ்வு இதுதான்யென்று
கண்ணீரில்!



**கவிஞர்.ஜெ.ம. புதுயுகம்**
பண்ணந்தூர்

நான் விரும்பி பெறாதது
என்பிறப்பு

என் விருப்பமின்றி
வரப்போகும் இறப்பு
இதுயார் விதித்தது

நான் விரும்பி பெற்றது
உன் உறவு
என் விருப்பத்திற்கு எதிராக

நீயெடுத்த முடிவு நம் பிரிவு
இதுயேன் நிகழ்ந்தது

எதுவுமே பதில் இல்லா
கேள்வியாக

-------------------

### தனிமை

தனிமை என்பது
சுடர்நிலை அல்ல
அது அகல்விளக்கின்
அடி இருள்...

### என்னவளே...!!

உன்னிடம் மயங்கி கிடக்கும்
போதே என்னை மறந்து
விடு என்று உரைத்து
இருக்கலாம்.
இப்படி தனிமை விட்டு
நெஞ்சில் ஆறாத ரணமாக
தங்கி விட்டாயே



வலிகளை கண்ட வழிகள்
உன் விழியை கண்டால் என்
வலி போயிடம்
என நினைத்தேன்..

நீ ஏற்படுத்திய
காயமே என்
விழிகளுக்கு பெறும்
வலியை தந்தது..

வலிகளை கண்ட
என் விழிகளுக்கு
நீ ஏற்படுத்திய
காயங்கள் பெரிதல்ல..

எப்போதே
மருந்து
விட்டது என
இதயத்திற்கு
தெரியும்
ஆனால்



அப்போதெல்லாம் விழிகள்
தான் கொட்டி தீர்க்கிறது..

எப்போதும் அழுவும்
விழிகளுக்கு தெரியும்
அது ஒரு நிரம்பிய
குளம் என்று..

**கவிஞர் பாலசந்தர்**
மண்ணச்சநல்லூர்

எந்த நிகழ்விலும் அல்லது
எங்கே சென்றாலும்
குழந்தைகள் அவளோடு
ஒட்டிக் கொள்கின்றன.
தின்பண்டங்களைப்
பகிர்கின்றன.
காதோடு ரகசியம் பேசி
இன்று வரை தரிசித்திராத
சிரிப்பையும் கொட்டிச்
செல்கின்றன.
இயல்பாய் வந்து
தயக்கமின்றி மடி மீதமர்ந்து
உரையாடிச் செல்லும்
பிள்ளைகளில்
பல ரகம்.எட்டி நின்று
உற்றுப் பார்க்கும் என்
இருப்பை எவருமே
கவனிப்பதில்லைஅந்நேரம்.
எல்லாம் முடிந்து
அவர்களிடம் விடைபெற்று
என்னருகில் யுக்தா
வரும்போது
அவளைத்
தொட
முடிவதில்லை
அப்போது
மட்டும்.



**ரிஷபன்**

## நூல் விமர்சனம்

நூல் :
வெற்றிச் சிந்தனைகள் 100
நூல் ஆசிரியர் : சிந்தனைக் கவிஞர் கவிதாசன்
நூல் விமர்சனம்:
கவிஞர் இரா.இரவி
வெளியீடு : விஜயா பதிப்பகம், 20, ராஜ வீதி, கோவை.
பக்கங்கள் 104,
விலை ரூ. 100




"வெற்றிச் சிந்தனைகள் 100" ல் கையடக்க நூலாக வித்தியாசமான வடிவமைப்பில் சிறப்பாக உள்ளது. விஜயா பதிப்பகம் மு.வேலாயுதம் அவர்கள் சிறப்பான மதிப்புரை நல்கி உள்ளார். நூலாசிரியர் சிந்தனைக் கவிஞர் கவிதாசன் அவர்கள், வெற்றிச் சிந்தனைகள் 100 வழங்கி உள்ளார். நூறும் நம் மனதில் நன்கு பதியமாகி விடுகின்றன. நமக்குள் ரசவாதத்தை ஏற்படுத்தி நம்மை புது மனிதனாக புதுப்பித்துக் கொள்ள, ஊக்கப்படுத்திக் கொள்ள, செம்மைப்படுத்திக் கொள்ள, சீர்படுத்திக் கொள்ள, சிந்தனை கொள்ள, செயலாக்க உதவிடும் சிறந்த நூல். பதச்சோறாக சில மட்டும் உங்கள் பார்வைக்கு இதோ!

"சோம்பல் புழுதியில் மூழ்கும் மனிதர்கள் வெற்றி வாய்ப்புகளை விவாகரத்து செய்து விடுகிறார்கள்"

உண்மை தான், சோம்பலில் சோர்ந்து இருப்பவர்களால் "எதையும் சாதிக்க முடியாது" சுறுசுறுப்புடன் செயல்படாமல் சோம்பியே இருந்தால் வெற்றி என்பது வசமாகிட வாய்ப்பே இல்லை. அதனால் தான் விவாகரத்து செய்து விடுகிறார்கள் என்று எள்ளல் சுவையுடன் உணர்த்தி, படிக்கும் வாசகருக்கு புத்துணர்வைப் போதித்து வெற்றி பெறுகிறார் நூல்ஆசிரியர்.

"விமர்சனங்களைக் கொண்டு நம்மை நாமே செதுக்கிக் கொள்ள வேண்டும், மனதைச் சிதைத்துக் கொள்ளக் கூடாது"

விமர்சனங்களை கூர்ந்து கவனிக்க வேண்டும். அதில் உண்மை இருந்தால் கவனத்தில் கொண்டு நம்மை செதுக்கிக் கொள்ள வேண்டும். பொய்யான, பொறாமையான விமர்சனங்களை புறம்தள்ள வேண்டும். அதே நேரத்தில் சரியான விமர்சனத்தை புரிந்துகொண்டு சொன்ன குறையை சரிசெய்து கொள்ள வேண்டும். சிலருக்கு விமர்சனத்தைத் தாங்கும் சக்தி இருப்பதில்லை. மனதைச் சிதைத்து, சோர்ந்து, சோம்பி, வாடி விடுவார்கள். இதனால் அடுத்த செயலுக்கு வாய்ப்பு இல்லாமல் போய்விடும். எனவே, மனப்பக்குவம் வேண்டும். இப்படி பல உண்மைகளை சில வரிகளின் மூலம் உணர்த்துகின்றார், பாராட்டுகள்.

"சாக்குபோக்கு சொல்பவர்கள் ஒருபோதும் சவால்களை வெல்வதில்லை"

நம்மில் சிலர் செயலில் இறங்காமல் சாக்குபோக்கு சொல்லியே, காரணம் சொல்லியே காரியம் செய்வதில்லை. எதையும் எதிர்மறையாக சிந்தித்து, என்னால் முடியாது, எப்படி முடியும்? எதுவும் முடியாது, தடைகள் பல உள்ளன,

இப்படிச் சொல்லியே நேரத்தை விரயம் செய்து செயலில் இறங்குவதே இல்லை. அப்படிப்பட்ட மனிதர்களால் சவால்களை வெல்லவே முடியாது என்பதை உணர்த்தி, சாக்குபோக்கு சொல்லாமல் செயலில் இறங்கினால் சாதனை புரியலாம், வெற்றிக்கனியைப் பறிக்கலாம் என்பதை குறைந்த சொற்கள் மூலம் நிறைந்த கருத்தை வலியுறுத்துகின்றார். சுண்டக் காய்ச்சிய பாலாகவே உள்ளன சிந்தனைகள். தேவையற்ற ஒரு சொல் கூட இன்றி, சிற்பி சிலை செதுக்குவது போல, சொற்களை செதுக்கி சிந்தனைச் சிலைகளை வடித்துள்ளார்.

"மணித்துளிகளுக்குச் செயல் வடிவம் சூட்டினால் வரலாற்றின் கரங்கள் நம்மை வாரி அணைத்துக் கொள்ளும்"

காலம் பொன் போன்றது அல்ல, பொன்னை விட மேலானது. பொன்னைக் கூட விலை கொடுத்து வாங்கி விடலாம். ஆனால் நேரத்தை விலை கொடுத்து வாங்க முடியாது. உலகில் பிறந்த மனிதர்கள் யாவருக்கும் 24 மணி நேரம் தான். நேரத்தை திட்டமிட்டு, பயனுள்ள வழியில் பயன்படுத்தியவர்களே வரலாற்றில் இடம் பிடிக்கிறார்கள். எனவே, நாமும் நேரத்தை செயல்படுத்தும் நுட்பத்தைக் கற்பிக்கிறார்.

"நேர்மையான நெஞ்சத்தில் பயத்தின் வேர்கள் படர்வதில்லை, நேர்மை என்பது சட்டத்தின்படி நடப்பதல்ல, அறத்தின் பாதையில் செல்வது"

நேர்மையாக நாம் நடந்து கொண்டால், யாருக்கும் அஞ்ச வேண்டியதில்லை. மனிதில் துணிவு இருக்கும். ஆனால் நேர்மையற்றவர்கள் தவறு செய்து விட்டு, மாட்டிக் கொள்வோம் என்ற பயம் எப்போதும் தொற்றிக் கொள்ளும். ஆனால், எந்தவித தவறும் இன்றி நேர்மையாக அறச்செயல் புரிந்து வந்தால், யாருக்கும் பயப்பட வேண்டாம்.


"தெரியாமல் இருப்பது அவமானமில்லை, தெரியவில்லை என்பது தெரிந்த பிறகும் தெரிந்து கொள்ளாமல் இருப்பதே அவமானம்!"

அலைபேசியை எடுத்துக் கொள்ளுங்கள், வாங்கியவுடன் அனைத்தையும் அறிந்து பேச முடியாது. நண்பர்களிடம், அறிந்தவர்களிடம் கேட்டு தெரிந்து கொண்டால் நாமும் சாதிக்க முடியும். சிலர் கற்றுக்கொள்ளாமல் எனக்கு தெரியாது என்று ஒதுங்கியே திறன்பேசியே வாங்காதவர்கள் உண்டு. அப்படி இருக்கக் கூடாது, திறன்பேசி வாங்கி கற்றுக் கொண்டால் நமக்கு பல நன்மைகள் கிட்டும். எனவே, தயக்கத்தை தவிர்த்து கற்றுக்கொள்வது அவசியம் என்பதை நன்கு உணர்த்தி உள்ளார்.

"கண்காணிப்பு இல்லாத போது கண்ணியமாக நடந்து கொள்பவனே சுதந்திரமான மனிதன்!"

கேமரா கண்காணிக்கிறது என்பதற்காக கண்ணியமாக நடப்பது நடிப்பு. கேமரா இல்லாத போதும், எங்கும், எப்போதும் கண்ணியமாக நடந்து கொள்பவனே சிறந்த மனிதன்.

கிடைத்த வேலையை பிடித்த வேலையாகச் செய்யும்போது வெற்றி தேவதை நெற்றித் திலகமிடுகிறாள். முதுமுனைவர் வெ. இறையன்பு ஐயா சொல்வார்கள், எந்தஒரு செயலையும் இஷ்டப்பட்டு செய்ய வேண்டும், கஷ்டப்பட்டு செய்யக்கூடாது, அதுபோல நாம் விரும்பிய வேலை நமக்கு கிடைக்கவில்லை என்பதற்காக கிடைத்த வேலையை வெறுப்பாக செய்வது முறையன்று. கிடைத்த வேலையை விரும்பிச் செய்தால் அதிலும் சாதனை படைத்து தனிமுத்திரை பதிக்க முடியும். இப்படிச் சிந்தனையைத் தூண்டும், செயலை ஊக்கப்படுத்தும், சாதிக்க வைக்கும் வெற்றிச் சிந்தனைகள் 100ம் வாழ்வில் கடைப்பிடித்தால் வெற்றி உறுதி.



### மூத்தோர் சொல்

" தித்திக்கும் அமுத
வார்த்தை அல்ல அனுபவப்
பாடம் மூத்தோர் சொல்
கேள் ...."

கடந்து வந்த பாதை மேடு
பள்ளம் இன்பம் துன்பம்
சோதனை சாதனையின்
வெளிப்பாடு மூத்தோர்
சொல்..."

ஏணிப் படியாய் ஏற்றிவிடும்
பாழும் கிணறு ஆழ்துளைக்
கிணறு போல அழித்து
விடாது ..."

வேடிக்கையான
விசித்திரமான விஷயமான
விஷமமாம மனிதர்களை
கண்டு பழகி புரிந்து
கொண்ட அனுபவப்
பெட்டகம் ..."

சுகமானது தூய்மையானது
திகட்டாதது தெளிவானது
பலம் தரும் மூத்தோர்
சொல்..."

வாழ்வியல் வழி முறைகளை
எளிமையாக சொல்லித்தரும்
பக்குவ மனது கொண்டது
மூத்தோர் சொல் ...."

மந்திரச் சொல் மாசில்லா
சொல் கவலையை விரட்டும்
காந்தச் சொல் சக்தி தரும்
மூத்தோர் சொல் கேள் ..."

கவலை
இல்லை
புரிந்து
கொள்....."



**ஆர். சீதாராமன்**
சீர்காழி

### குட்டிச் சுவரின் கௌரவம்

காரை உதடுகளை உதிர்த்து
செங்கல் பல்லால் சிரிக்கும்
நான் கழுதைக்கு உறவினன்!
என் பெயர் குட்டிச் சுவர்!

பல நேரங்களில்
பிறாண்டப் பட்டாலும்
சில நேரங்களில்
கௌரவப் படுத்தப் படுகிறேன்!

திரிஷாவும் சினேகாவும்
வண்ணப் போஸ்டராய்
என் மீது மிளிர்கையில்
நின்று ரசித்தவர் பட்டியல்
விண்ணைத் தொடும்!
நிராகரித்தவர் பட்டியலில்
வெற்றிடம் வெட்கப்படும்!

என் முதுகில் மறைந்து
கஞ்சா கசக்கும்
இருட்டு இளைஞர்களை
காவு கொடுக்கும் கனவுண்டு
அதற்கு கரங்களில்லையே
என்ற கவலையுமுண்டு!


ஒரு வாரம் நகைக்கடை
விளம்பரத்தில்
கோடீஸ்வரனாயிருப்பேன்!
மறு வாரமே மூல
வியாதிக்கு
மூலிகை மருத்துவம்
சொல்வேன்!
ஆம்! விளம்பரத்துறையின்
விசுவாமித்திரர் நான்!
இரவு நேரங்களில் மட்டும்
இதயத்தை இரும்பால்
வார்த்துக் கொள்வேன்!
மறைவில் நடக்கும்
சதை வியாபாரத்திற்கு
திரையாக நான்!
பண்பாடு சிதைக்கும்
பாவ நிகழ்வுக்கு
படுதாவாக நான்!

அன்றொரு நாள்
ஆர்ப்பாட்டமாய்
அபரிமிதம் வழிந்தது!
அரசியல் கட்சி மாநாட்டிற்கு
அழைப்பிதழானேன்!
இதுவரை காணாத
இங்கிலீஷ் வர்ணங்கள்
எதுகை மோனையுடன்
எழுச்சி வர்ணனைகள்!
மேலாக மந்திரியின்
மகத்துவம் இந்த மண்
சுவருக்கும் வந்தது!
ஆம்.. இரவு பகல்
என்னேரமும்
இரண்டு கான்ஸ்டபிள்
பந்தோபஸ்து எதிர்க்
கட்சிக்காரன் எவனும்
அழித்து விடாதிருக்க!



**முகில் தினகரன்**
கோயமுத்தூர்







## மகிழ்ச்சியான தருணம்...

புலர்ந்த காலை ஆனந்தம்
தரும், உள்ளத்தில் உவகை
துளிர்க்கும் நேரம்.எண்ணிய
எண்ணங்களுடன்
சந்தோஷங்கள் சேர்ந்து,
பறக்கும் புள்ளினம் போல்
மகிழ்வு தோழியின் குரல்
கேட்டு தோளில் ஒரு
சிலிர்ப்பு மனம் மகிழ்ச்சியில்
ஆனந்த கானம் பாடும்
துயரம் எல்லாம் ஓடிப்போய்
துள்ளும் மனம் துள்ளுதே...
உள்ளத்தில் ஆனந்தத்தை
உல்லாசமாக
அனுபவிக்கும்
அந்த
தருணமே
மகிழ்ச்சியான
தருணம்
அன்றோ?



**உஷா முத்துராமன்**



## காக்க வேணும்

அப்பாவின் பாசத்திற்கு
ஈடாகுமா உன் பாசம்...
அதை வென்றிடுமா என்றும்
உன் நேசம்...

அம்மா கொடுத்த உடலும்
அப்பா கொடுத்த உயிரும்
உருவமா பிறந்த உனக்கு
இது புரியுமா...
உன் நல்ல மனசுதான்
இதை அறியுமா...

ஆயிரம் கஸ்ட்டங்கள் பட்டு
அயாராம உழைத்து..
உன்னை பட்டங்கள் பல
படிக்க வைத்த சென்ம...
அதை புரிச்சி நடந்துக்க
வேணும் ஆம்....

உழைச்சி உழைச்சி தேஞ்ச
ஒட்டிய உடலுதாங்க...
ஒரமா கிடக்கும்போது ...
நீ உசிரா காக்க வேணும்
நீ உசிரா
காக்க
வேணும்...!!



**பொன். கருணா**
நவி மும்பை

## முயற்சி

எளிதில் அடையாளம்
காட்ட முடியாத
மன உணர்வுகளை,
சுலபத்தில் கிடைக்காத
வார்த்தைகளைத்
தேடியெடுத்துக்
கவிதையாய் வடித்தபோது
யாருக்கும் புரியாத
புதிராகிப் போனது.

**கே. பி. ஜனார்த்தனன்**

## ஐம்பூதம் போற்றுவோம்!

நிலமும் நீரும் நெருப்பும்
காற்றும்.. பாலை வனமும்
காத்திட முனைவோம்.!
உலவும் தென்றல்.. காற்றினை
தழுவி.. உலகம் முழுதும்
பொது நலம் வளர்ப்போம்.!

மண்ணைக் காக்க மரங்களை
வைப்போம்
மாசில்லாத காற்றினை
நினைப்போம்.. எண்ணிலாத
பெருமைகள் தந்த
இயற்கை அழகை
எல்லோரும் காப்போம்!

நிலவு தெரியும்
வானில் இனிமேல்.
அனைவருக்கும் ஒரு
இல்லத்தை அமைப்போம்!
உலகம் முழுதும் இருக்கும்
மனிதர்கள் ஒன்றாய் சேர்ந்து
அங்கே வாழ்வோமே.!

மலையை திருடி.. மணலைத்
திருடும் கசடர் யாவரையும்
வேலூர் சிறையில்
அடைப்போமே.! நதியில்
மாசை.. காற்றில் தூசை
கலந்த பேதைகள் திருந்த ஓர்
முடிவெடுப்போமே.!

பாலை வனத்தை
சோலையாக்க.. இயற்கை
வளத்தைப் பாதுகாக்க..
ஐம்பூதங்களை
நினைப்போமே. இதை
அனைவருக்கும்
எடுத்துரைப்போமே..!



**வே.கல்யாண்குமார்**

கற்பனையில்
சந்தோஷங்களை
உள் அடக்கியே
கண்ணாமூச்சி
விளையாட்டை நடத்தும்
கனவுகளை
புரண்டு கொண்டே
காண
முடிவதில்லை
நாளைய
கேள்வி?



**ஜயந்தி சிவக்குமார்**
திருச்சி.

## தறிகெட்டு ஓடும் சமூகம்.

தறிகெட்டு ஓடும் சமூகம்
நிம்மதியைத் தேடி அலையும்.
தன்னை மறந்த மனிதன்
போதையில் தரையில்
வீழ்ந்து கிடப்பான். அவசர
கோலத்தால் வேலையில்
சுணக்கம் ஏற்படும்.
அதன் பொருட்டு அன்பு
சுருங்கி எரிச்சலும், கோபமும்
எழுச்சி பெற்று தரவு சரியும்.
அழகிய வார்த்தைகள்
கூட அர்த்தமின்றி சிதறி
சிறுமைப்படுத்தும்.
பொய்மையின் போர்வையில்
உண்மை மூச்சுத் திணறும்.
பொற்காசுகளின் ஒளியில்
மனிதநேயம் குருடாகும்.
போட்டி என்ற பெயரில்
உறவுகள் சுருங்கிக் கருகும்.
புகழின் பசி கொண்டு
உள்ளங்கள் சிதையும்.
இன்னும்
எங்கோ
நம்பிக்கை
விதை
முளைக்கும்.
இயற்கை
போல
அமைதி திரும்பும் நாளை
எதிர்நோக்கிக் காத்திருக்கும்
நிலை ஏற்படும்.



**உ.மு.ந.ராசன் கலாமணி**
கோயம்புத்தூர்.

## உயிரே லஞ்சம்

நான் வாழ்ந்த வாழ்கின்ற
இதயமல்லவா உன் நெஞ்சம்!

நீ இல்லாத வாழ்வை
கொடுக்க நினைப்பது உன்
வஞ்சம் !

உன் இதயத்தில் எனக்கொரு
இடம் கொடுப்பதற்கு என்ன
பஞ்சம் !

உனக்காக இந்த உலக
வாழ்க்கையேவே துறந்து
என் "உயிரையேக்"
கொடுக்கிறேன் லஞ்சம் !

நாம் இணைந்து
வாழ்ந்தால் பூர்த்தியடையும்
நல்வாழ்க்கையின் மஞ்சம் !

எப்போதும்
எப்பொழுதும்
நீயே என்
வாழ்வின்
தஞ்சம் !



**G.A.கோவிந்தராஜ் (எ)சுரேஷ்குமார்**
திருப்புவனம் புதூர்

## "மானிடனே மந்தையாகாதே"

மானிடனே! மந்தையாகாதே...

முன்னே சென்றவன்
சொன்னதெல்லாம்
முத்திரையல்ல...
மூளையைத் தீட்டி
சுயத்தில் நடந்திடு!

கூட்டம் கத்தினால்
நீயுமோர் குரலாகாதே!
கொளுத்தும் தீயைக்
குளிரென்பார் நம்பாதே!

எவனுடைய கையசைப்பும்
உன்னை அசைக்க
வேண்டாம்! எவனுடைய
கோபமும் உன் குருதியினைக்
கொதிப்பாக்க வேண்டாம்!

படம் பார்த்து பித்துப் பிடித்து
படுகுழியில் பாய்வது புகழா?
பேச்சைக் கேட்டு பகை
வளர்த்து பேரழிவைத்
தேடுவது பெருமையா?

உன் மூளை உனக்கான
அறிவுக் கோபுரம்!
உன் முடிவு நீயெடுக்கும்
ஓங்கார மந்திரம்!

மனிதனாய் பிறந்து
மந்தையாடாய் மாறாதே!
புனிதனாய் வாழ்ந்து
புண்ணியங்கள் சேர்த்திடு!

கேள்வி கேட்பது குற்றமல்ல
யோசித்து நடப்பது
துரோகமல்ல! சிந்தித்து
செயலாற்றல் சிறப்பு
மந்தையாய் இருப்பதுவெறுப்பு!

நிழல் தாண்டி உயர்ந்திடு
முன்னோடி ஆக முயன்றிடு!
முடியாது போனாலும்
போகட்டும்
மூடனாக
மட்டும்
மாறிடாதே!



**முகில் தினகரன்**
கோயமுத்தூர்

## ஹைக்கூ

பூகம்பம் வரும் முன்
அறியும் தவளை மனிதன் ?

சேமிக்கும் எறும்பு மழைக்
காலத்திற்கு மனிதன் ?

நன்றி மறக்காது
வாலாட்டும் நாய் மனிதன் ?

பசிக்காமல் உண்பதில்லை
விலங்குகள் மனிதன் ?

பிறந்ததும் உடன்
நீந்திடும் மீன் மனிதன் ?

அடைகாக்கும் காகம்
குயிலின் முட்டையையும்
மனிதன் ?

**கவிஞர் இரா .இரவி**

## மின்னல்!

*'வம்பு' செடியை
வளர்த்தெடுத்து.. அதில்
'அன்பு'கனி கிடைக்க
காத்திருக்கும் அற்ப
மானிடரா நாம்.?...
எங்கோ விழுந்து
வெடிக்கும் ஆயுதங்களை...
தொலைக்காட்சிப்
பெட்டியின் முன்
அமர்ந்து ஆரவாரத்துடன்
ரசிக்கிறோமே... அதன்
கரித்த கந்தகத்துகள்கள்
நமது சோற்றுத்தட்டங்களில்
பாவும் என்கிற நிதர்சனம்
புரியாமல்.சரியா?..
சகல ஆயுதங்களையும்
பிரயோகிக்க திறன்பெற்ற
மேதாவிகள் ஓராயுதத்தை
மட்டும் உறைநிலையிலேயே
வைத்து.. வதைக்கிறார்களே
வையகத்தை... மமதை
வீழ்ந்து மண் கவ்வ
மனிதம் பூக்கும் நாளில்...
அறிவே ஆயுதம் என்பதை
உணர்வோம்.. அதுவரை
சகமனிதர்களின்
வாழ்வாதார வேள்விக்கு..
குடும்பபாடுகளின்
நுகத்தடி சுமக்கும்
முயற்சிக்கு.. ஓர்முகத்துடன்
பிரார்த்திப்போம்..
வாருங்கள்... அதிகார
போதைப் போர்கள் ஓயட்டும்..
அமைதியான
பூமி
புத்துணர்வுடன்
சுழலட்டும்.!*



**க.குமாரகுரு,**
மயிலாடுதுறை



## மூத்த குடிமக்கள்.!

வயதானால் எங்களை
இப்படித்தான் அழைப்பாய்..!
அடையாளம் காண
அரசாங்கம் அழைக்கும்!

ஓய்வுக்குப் பிறகு
ஓடாடும் நாங்கள்..
அறுபதைத் தாண்டினால்..
சீனியர் சிட்டிசன். !
மூத்த குடிமக்கள்.!சாய்வு
நாற்காலிகள்..! சம்பாதனை
செய்தோர்கள்!
ஓல்டு ஸ் கோல்டு என்றாய்
கோல்டுக்கு மதிப்பு ஏறும்..
எங்களுக்கு உண்டா கூறும்!

வீட்டுத் திண்ணையிலே
எங்களுக்கு இடம் ஒதுக்க..
வேட்டித் துணியெல்லாம்
நாங்களே துவைப்போம்!
ரேசன் அரிசி வாங்க..
மின்சார பில் கட்ட..
வேகாத வெயிலிலே
வரிசையிலே நிற்போம்!

பென்சன் பணம் வந்தால்..
செலவுக்குக் கொடுப்போம்!
பேரன்.. பேத்திகளை..
அழைத்து வர நடப்போம்!
யாருக்கும் பாரமின்றி
வாழத்தான் நினைப்போம்!

பெரிசு என்று அழைத்தாலும்
கேட்காது போல் இருப்போம்!
பெற்றெடுத்துப் பிள்ளைகள்
முன் பேசாது இருப்போம்!
முதியோர் இல்லத்திலே..
சேரத்துப் பிள்ளையைக்கூட
பார்க்கத் துடிப்போம்..!
பார்த்த விழி பூத்திருக்க..
வாசலிலே நிற்போம்..!
பாசத்தை மறவாத பழையப்
புத்தகம் நாங்கள்!

போட்டதைச் சாப்பிடுவோம்..
போவதற்கும் காத்திருப்போம்..
கடந்த காலங்களை
நினைத்தப்படி நடப்போம்..
கைப்பிடித்தவள் இருந்தவரை
ராஜனைப் போல் இருந்தோம்!

இலை தழைத்து நிழல்
கொடுத்து.. கிளை விரித்து..
வேரூன்றி.. விதையூன்றி..
காய் கனிகள் கடைசிவரை
தந்தே நிற்கும் பட்ட மரங்கள்!
சீனியர் சிட்டிசன்கள்.. கடவுள்
தந்த வரங்கள்!

இன்று நாங்கள். நாளை
நீங்கள்.. வயதான எல்லோரும்
வாழ்வின் கடைமடைகள்..
கனவைச் சுமந்தவர்கள்!
காத்திருக்கும் பயணிகள்.!
நாங்கள்.. மூத்த குடிமக்கள்!
சீனியர் சிட்டிசன்கள்!

**வே.கல்யாண்குமார்.**



1. யார் நினைத்தாலும்
ஒழுக்கத்தை கற்றுக்
கொடுக்கலாம் நாம்
நினைத்தால் மட்டுமே
பின்பற்ற முடியும்

2 கோபங்கள் கூட
மன்னிக்கப்படுகின்றன
ஆனால் உதாசீனங்கள்
ஒரு போதும்
மன்னிக்கப்படுவதில்லை

3. அடுத்தவனுக்கு
கிடைத்துவிட்டது
என்று மனிதன் பொறாமை
படாத ஒரு விஷயம் மரணம்

4.பொறுமை கொண்டவரின்
வாழ்க்கை. பிறர்
பொறாமைப்படும் அளவிற்கு
இருக்கும்

5. கோவில் வாசலில்
இருந்தாலும்
கடவுளிடம்
கேட்காமல்
மனிதர்களிடம்
கையேந்தும்
பிச்சைக்காரர்கள்
உண்மையான
அறிவாளிகள்

1. மரங்களில் இருந்து
குணத்தையும்
வேர்களில் இருந்து
வலிமையையும்
இலைகளில் இருந்து
மாற்றத்தையும்
கற்றுக் கொள்ளலாம்

2. முற்றுப்புள்ளியை கூட
மூன்று முறை வைத்தால்
அது தொடர்ந்து விடும்

3. திறந்தே கிடக்கிறது
வானம் களவாட
முடியவில்லை நிலவை

4. வயலில் இறங்கி
அறுவடை செய்தவன்
வயிற்றுப் பாட்டுக்காக
வரிசையில் நிற்கிறான்
நியாயவிலை கடையில்

5. தான் வைத்த குழம்பில்
உப்பு போடாததால்
வீட்டில் அனைவரிடமும்
முட்டாள் பட்டம்
வாங்கினாள் கல்லூரியில்
இரட்டை பட்டம்
பெற்ற குடும்பத் தலைவி



**நடேஷ் கன்னா**
கல்லிடைக்குறிச்சி



இன்னும் நூறு முறை கூட
என்னை பார்த்து
சிரித்து கொள்ளுங்கள்
ஏற்கனவே சிதைந்து
போனவனை மேலும்
காயப்படுத்தி விட
முடியுமா என்ன?

கனவு தேவதையே
நின்னை சரணடைய
எந்த தவம் செய்யவேண்டுமடி!

அழுது கொண்டிருக்கும்
இதயத்தை வெளிக்காட்டியதே
இல்லை
முகத்தில் போலியான
சிரிப்பை உதிர்த்து
புன்னகை மன்னன்
நானாகிறேன்!

கண்களை வைத்தே
புரிந்து கொள்வாயா?
நின்னை சரணடையவே
அந்த இதயம்
இன்னும் துடித்துக்
கொண்டிருப்பதை!

என்னை அழ வைக்கும்
உறவுகளை பற்றியோ,
சூழ்நிலை பற்றியோ
இப்போதைக்கு
கவலையில்லை
மரிப்பதற்கு முன்
என்றாவது ஒரு நாள்
நின்னை சரணடைய
வேண்டும்!



**லி.நௌஷாத் கான்**



## புற்றுநோயைப் புதைப்போம்

அறிந்தேநாம் தவறுதனைச் செய்யு கின்றோம்
அறிவிருந்தும் அறிவிலியாய் ஆகி விட்டோம்
பொறித்திருக்கும் எச்சரிக்கை படித்த பின்பும்
பொலிவழித்தே நோய்சேர்க்கும் என்று ணர்ந்தும்
அறிவுறுத்தித் தொலைக்காட்சி செய்தித் தாள்கள்
அறிவிப்பாய் நாள்தோறும் அறிக்கை தந்தும்
வெறியோடு வெண்சுருட்டுப் புகையி ழுத்தே
வேதனையில் துடிப்பதுவும் தேவை தானா ?

வெற்றிலையை மென்னுவதில் தவறோ இல்லை
வெற்றிலையில் புகையிலையைச் சேர்ப்ப தாலே
நற்தொண்டை வாய்நாக்கு உதடெல் லாமே
நாளடைவில் ஆறாத புண்ணாய் ஆகிப்
புற்றுநோய்க்கு வித்திட்டே உடலுக் குள்ளே
புரையோடி உயிர்குடிக்கும் என்ற றிந்தும்
சற்றுமதை நினைக்காமல் சுவையே என்று
சாவதற்கு நஞ்சுண்ணல் தேவை தானா ?

வழிதிறந்து வருமானம் பெருக்கிக் கொள்ள
வாய்க்கரிசி போடுகின்ற அரசெ திர்த்தே
விழிப்புணர்வு நாம்கொள்வோம் விரித்து வைத்த
விடவலைக்குள் வீழாமல் காத்துக் கொள்வோம் !
வழிமாறிப் போவோர்க்கே எடுத்து ரைத்து
வாய்த்ததீய பழக்கத்தை விடுக்கச்செய்வோம்!
குழிதோண்டிப் புற்றுநோயைப்புதைப்பதற்கே
கூடியொன்றாய் செயல்படுவோம்
உயிரைக் காப்போம் !!



**பாவலர் கருமலைத்தமிழாழன்**



ஒட்டமே உயிர்ப்பு என்றான
பிறகு...சிறுகூழாங்கற்கள்....
பள்ளம்... பேடு... பெரும்
பாறை.... ஓங்கியமலைகள்...
என யாவும்..வழித்தடங்களே...
ஆறு
ஒன்றிற்கு...

அருகருகே
இருத்தல்
மட்டும் அல்ல...

தொலைதூரங்களிலும்...
தொலைத்து விடாது...
காத்தலே.... காதல்...



**தே.சௌந்தரராஜன்**
கல்யாணம் பூண்டி



## சாதிக்கப் பிறந்தவள் பெண் !

ஆண்களை விட பெண்களின்
மூளைக்கு ஆற்றல் அதிகம்
ஆய்வின் முடிவு !

தாழ்வு மனப்பான்மையைத்
தகர்த்து ! தன்னம்பிக்கையை
மனதில் நிறுத்து !

பெண் பலவீனமானவள்
அல்ல! பெண் பலமானவள்
உணர்ந்திடு !

வாய்ப்புகள் வழங்கினால்
பெண் வானத்திலும் வலம்
வருவாள் !

கல்பனா சாவ்லா சுனிதா
வில்லியம்ஸ் விண்வெளியில்
நிகழ்த்தினார்கள் சாதனை !

இன்னிசையிலும் சாதிப்பாள்
பெண் ! எட்டுத்திசையிலும்
சாதிப்பாள் பெண் !

அடக்க நினைத்தால் அடங்க
மறு ! ஆதிக்கம் செய்தால்
ஆதிக்கம் அழி !

போகப் பொருள் அல்ல
பெண்! பொங்கி எழு !
போற்ற வேண்டியவள் பெண் !
உணர்த்திடு !

அடுப்படியில் முடங்கி
விடாதே பெண்ணே !
அளப்பரிய திறமைகள்
உன் முன்னே !

சாதம் சமைக்கத்தான்
பெண் என்பதுமடமை!
சாதிக்க முயன்றிடு
பெண்ணே உன் கடமை !
தொடர்களுக்கு அடிமையாகி
காலம் கழிக்காதே !
தொடர் செயலால் உயர்ந்த
சிகரம் தொட்டிடு !

ஆண்களால்முடியாததும்
முடியும் பெண்களால்!
ஆணைவிடப் பெண்ணே
உயர்வு செயல்களால்!

முயன்றால் முடியாதது
எதுவும் இல்லை ! முயன்றிடு
பெண்ணே முடியும் உன்னால்!

அகிலம் போற்றும் அன்னை
தெரசா ! அன்பு செலுத்திய
இமயம் தெரசா !

அனைத்துத்துறையிலும்
சாதிக்க முடியும் ! அன்பை
மதித்தால் எதுவும் முடியும் !

வாழ்வில் போராடியது
போதும்! வாழ்வை
வசந்தமாக்கு ! வெளுக்கும்
கிழக்கு !

இன்னல் அடைந்தது போதும்!
இனி இன்பம்
நிரந்தரமாகட்டும் !

சோதனைக்கு அஞ்சாதே
சோகம் வேண்டாம் !
சாதிக்கப்பிறந்தவள் என்ற
எண்ணம் வேண்டும் !

சராசரியாக வாழ்ந்தது
போதும் பெண்ணே !
சரிநிகர் சமமாக வாழ
வேண்டும் பெண்ணே !



**கவிஞர் .இரா இரவி**


FREE MARRIAGE
INFORMATION CENTER :
இலவச திருமண
தகவல் மையம்
இலவச திருமண தகவல் மையம்
யாருக்கும் பணம் தர தேவை இல்லை
பணம் வங்கும் புரோக்கர்கள் தவிர்க்கவும்
www.enthuani.com
Call: 9337501889


ADIYOGI
REAL ESTATE
WHOLESALE
VADACHENNAI CALL DRIVER
ஆதியோகி
ரியல் எஸ்டேட்
CMDA DTCP அப்ரூவல்
வீட்டுமனைகள் விற்பனை
_CONTACT_
8939228901


Vilambaram
We
provide
Targeted Leads
to grow your
buisness
Boost
your
business
Call:: 91 7789941009, 9337501889
www.vilambaram.com


THINKING to BUY / SELL / RENT
a PROPERTY
JOINT VENTURES INVITED
MK REAL ESTATE
Call :7871617005


SEVEN STARS
LOGISTICS PVT.LTD.
we simplify shipping for your business
Our Services are ...
Freight Forwarding, International Courier,
Customs Clearance, Cargo Movement by Air,
Sea and Road, Door to Door Service.
# 2, 2nd floor, Krishnan Koil Street, George Town,
Chennai - 600 001. INDIA.
+91 44 43570909 +91 96770 88843
info@sevenstarslogistics.com www.sevenstarslogistics.com


CAR WASH
SADHANA DEVI.K
SUPREME
Car Wash
& Detailing
Car Foam Pressure Wash
Teflon Coating
Ceramic Wax Treatment
Under Chassis Painting
Interior Foam Wash / Stain Remover
Paint Correction / Protection
We Done Here
9840882711
7200043675
Supremecarwashchennai@gmail.com
No.17/4, Senniamman Koil Street, Tondiarpet, Chennai - 600 081.


அருள்தரும்
தெய்வம்
என்றும் நம் இல்லங்களில்
www.arultharumdeivam.com
அற்புதமான
ஆன்மீக செய்திகள்,
பரிகாரங்கள்,
ஸ்தல வரலாறு மற்றும்
சுவாரஸ்யமான
தகவல்கள் மாதம்
இருமுறை படித்து
ஆன்மீகத்தை
அறியுங்கள்..


LOW COST
MATRIMONY
WEBSITE
CALL: 7789951009


MLMPERFECT.COM
Start Any MLM
Software @
Rs.499/Month
+ EMI Available
EMI
Trusted by
1000+
satisfied clients
Binary Plan
Matrix Plan
Level Plan
Generation Plan
Cryptocurrency MLM
9853719337 / 7436914247


We Are Urgently Hiring!
Marketing Manager
Ad Sales (Print Media)
Package
Rs. 4.8 LPA
Company : PADMA DIGITAL BROADCAST PRIVATE LTD
Location : Chennai
Padma Digital a leading name in print media, is looking for a Marketing Manager – Ad Sales to join our dynamic team.
Key responsibilities for Marketing Manager
• Minimum 5 years of experience in print media ad sales
• Proven experience in space selling
• Strong background in field sales and client acquisition
• Excellent communication and negotiation skills
• If you're a results-driven professional with a passion for media sales, we want to hear from you
If you are interested
Do send your resume and portfollo to
padmamediapublications@gmail.com
Call: 9337501889
பாஸ்கர்
பேப்பர்பாய்
தெய்வம்
தமிழ்நாடு இ-பேப்பர்.காம்


WANTED
EXPERIENCED
SOCIAL MEDIA
CONTENT CREATORS
94386 10756




# WANTED

M/F லோடுமேன்,பிக்கர், ஹெல்ப்ர், வர/மாத சம்பளம்: 450-700. உணவு இடம் free day/N8 shift

**7540003588**

























# ST COURIER

The People's Choice

ISO 9001:2008 Certifed

**DOMESTIC- INTERNATIONAL**

Old No. 1/2, New No.3, Kesavan St., Tondiarpet, Chennai-600081.

**Cell: 9176130601**

## Get Free Jobs Alert on Your WhatsApp


Register Yourself on our

**8122664699**

WhatsApp Your Name, Age & Address on Above Number

Josh Jobs Team Give u Daily Update of Govt. as Well as Private Jobs












முனீஸ்வரர் துணை
RG
கங்கோதரி எண்டர்பிரைசஸ்-ன்
BI NEW TEACHERS COLONY
பொன்னேரி அருகில் பழவேற்காட்டில்
RERA APPROVED
மனைகள் வழங்கப்படுகிறது.

GANGOTHARI ENTERPRISES
RG Rajendra Prasath
Proprietor
கங்கோதரி எண்டர்பிரைசஸ்
Buying & Selling
வீடு, மனை, வாங்க, விற்க இங்கு அணுகவும்.
97103 48377, 89254 08203
gangotharienterprises2018@gmail.com
No. 18, Dr. Radhakrishna Salai, Vivekananda Nagar, Kodungaiyur, Chennai-600 118.

Sri Manjal Mart
தரமான ஆன்மீக பூஜை பொருட்களை குறைந்த விலையில் நிறைவாக வாங்க
20% OFF
www.manjalmart.com
7789951009
order@manjalmart.com

ADVERTISE WITH US!
CONTACT US
9337501889

THINKING to BUY / SELL / RENT a PROPERTY
New / Resale... Residential / Commercial...
*Plots *Flats *House *Villa *Bungalows
*Farm Land *Ware Houses *Factory Sites *Sheds
JOINT VENTURES INVITED
MK REAL ESTATE
Tell me your Budget We Show Your Home
Call:7871617005

Just499
Pick Any Website Just ₹499 Only!
Affordable Website Solutions for Every Business
Matrimonial Website | Real Estate Website | E. Commerce Website
Restaurant Website | Shopping Website | News Website
MLM Binary Website | MLM Level Website | MLM Gaming Website
Call: 7789951009 | WhatsApp: 7789951009

WE'RE HIRING
TELECALLERS
SALARY STARTING FROM RS.20000/- ONWARDS
+91 7871617005

Vilambaram
www.vilambaram.com
WE ARE Digital Marketing Agency
We are the LEADS GENERATION FACTORY For Your REAL ESTATE BUSINESS
* Business Lead
* 100% Verified Lead
* Targeted Lead
GROW YOUR BUSINESS WITH US
for more details
+91 7789941009
+91 9337501889
vilambarampage@gmail.com
80 %OFF SPECIAL OFFER DISCOUNT
90 DAYS MONEY BACK GUARANTEE

just499
REAL ESTATE SOFTWARE
We Provide Complete Real Estate Software Solutions
ONLY Rs. 499
Website: just499.com
Phone: 7789951009
WhatsApp: 7789951009
Email: orderjust499@gmail.com

Just499
JOB WEBSITE SOFTWARE
We Provide Complete Job Portal Software Solution
ONLY Rs. 499
Website: just499.com
Phone: 7789951009
WhatsApp: 7789951009
Email: orderjust499@gmail.com

GREAT OPPORTUNITY AT ALL OVER TAMILNADU
Marketing Executive
SALARY Rs.15000/-
+ Incentive
+ Petrol Allowance
vilambarampage@gmail.com
7789941009

Telecaller Job
Apply Today
Mobile Calling !!!!
Rs 250-Rs500 per day
Work From Home Jobs
Rs 8000 - Rs 15000 per month
Ananda Bhaskar
9337501889
7789941009

WANTED
experienced candidates in
AUTO CAD
Chennai / Coimbatore
minimum 3 years experience
Cell: 9363084990


ANY MLM PLAN
INR PLAN RS.20000
CRYPTO PLAN RS.30000
NO HIDDEN OR EXTRA CHARGES
SOURCE CODE AVAILABLE
CALL 9853719337 / 7436914247

WANTED
MARKETING HEAD REAL ESTATE
Fixed Salary Rs.25000/- & Above + INCENTIVE
(Monthly up to - 1.5 Lakhs)
Age: 25 to 40 Experienced Only
Office @ Anna Nagar
9790021367

WANTED
COLLECTION EXECUTIVES
TELECALLERS
FOR MNC BANK.
Sal.23,000/-
161, Bells Road, Chennai - 05.
Ct.: 98410 38488 / 93848 17349

ஐஸ் கடை
வேலைக்கு ஆட்கள் தேவை (பெண்கள்)
10.00 - 7.00 மணி வரை
சௌகார்பேட்டை
9829571998

# பல்சுவை களஞ்சியம்




# யார் பணக்காரன்? யார் ஏழை?

பணம் நிறைய வைத்திருப்பவன் பணக்காரன் . கஷ்டப்படுபவன் ஏழை. அது தானே உங்கள் பதில் ? இந்த பதில் சரியா ?

#சம்பவம் -1.

ஒரு பெரிய சீமாட்டி ஒரு புடவைக் கடைக்கு செல்கிறாள் புடவை எடுக்க . " எனக்கு கொஞ்சம் பட்டுச்சேலைகள் காட்டுங்கள் . விலை மலிவாக இருக்கட்டும் . என் மகனுக்கு திருமணம் . என் வீட்டு வேலைக்காரிக்கு கொடுக்கவேண்டும்..." என்கிறாள் . சேல்ஸ்கேர்ள் எடுத்து போட்ட புடவைகளில் மலிவானதாக ஒன்றை செலக்ட் செய்து பணத்தை கட்டிவிட்டு எடுத்துச் சென்றாள் . சற்று நேரம் கழித்து அந்த வேலைக்காரி வருகிறாள் . " என் முதலாளியம்மா பையனுக்கு கல்யாணம் . நல்ல சேலையா ஒன்னு அவங்களுக்கு எடுத்து கொடுக்கணும் . விலை கொஞ்சம் கூட இருந்தாலும் பரவாயில்லை . நல்ல டிசைன்ஸ் எடுத்துப் போடுங்க என்றாள்..



#சம்பவம் -2 .

ஒரு பெரிய இடத்துப் பெண் , ஒருமுறை பிக்னிக்கிற்கு சென்ற இடத்தில ஒரு ஸ்டார் ஹோட்டலில் தங்கியிருந்தாள் . அவளது கைக்குழந்தை திடீரென பாலுக்காக அழ , ஹோட்டல் நிர்வாகத்திடம் " குழந்தைக்கு பால் கிடைக்குமா ? " என்றாள் . " எஸ் மேடம் கிடைக்கும் . ஒரு கப் நூறு ரூபாய் ஆகும்" என்று பதில் வந்தது . " பரவாயில்லை ... உடனே ஒரு கப் வேண்டும் " என்று கூறி ஆர்டர் செய்து பாலை வரழைத்தாள் .

அவள் ஊருக்கு திரும்பிப் போகும்போது வழியில் மறுபடியும் குழந்தை பாலுக்காக அழ , சாலையோரம் இருந்த ஒரு டீக்கடையில் காரை நிறுத்தி , பால் கிடைக்குமா என்று விசாரித்தாள் .

" பசும்பாலே இருக்கும்மா " என்று கூறி அக்கடைக்கார் , பசும்பால் கொடுத்தார் .

" ரொம்ப தேங்க்ஸ்பா ... எவ்ளோ ஆச்சு ? " என்று கேட்க "பணம் வேண்டாம்மா ... குழந்தைங்க குடிக்கிற பாலுக்கு நான் காசு வாங்குறதில்லை " என்று பதில் சொன்னவர் , "இன்னும் வேணும்னாலும் வாங்கிக்கோங்க . போற வழியில குழந்தை அழுதா என்ன பண்ணுவீங்க ? " என்றார் பரிவுடன் .

#சம்பவம்- 3.

அலுவலகத்துக்கு புறப்படும்போது தான் அந்த இளைஞன் கவனித்தான் . செருப்பு பிய்ந்துபோயிருந்தது . பிரதான சாலை வந்ததும் அந்த செருப்பை தைக்க செருப்பு தைப்பவரை தேடிச் சென்றான் . ஒரு நபர் சாலையோரம் ஒரு குடைக்கு கீழே செருப்புக்களை தைத்தபடி அமர்ந்திருந்தார் . வண்டியை அவர் முன் ஸ்டாண்ட் போட்டு நிறுத்தி , செருப்பை அவர் முன் போட்டவன் , " இதை கொஞ்சம் தைச்சு கொடுங்க . புது செருப்பு . எப்படி பிஞ்சதுன்னு தெரியலே ... " ' எவ்ளோப்பா ஆகும் ? " செருப்பை வாங்கி ஆராய்ந்த அந்த தொழிலாளி , ' இருபது ரூபா ஆகும் சார் ... " " இருபது ரூபாயா ? பத்து ரூபாய் வாங்கிக்கோங்க .... அந்த இளைஞரை சற்று தலையை நிமிர்த்தி பார்த்தார் . கதிரவனின் கதிர்கள் சுட்டெரித்தது . சரியாக பார்க்க முடியவில்லை . "இருபதுக்கு கம்மி தைக்க முடியாது சார் ' " என்ன இதுக்கு போய் இருபது ரூபாயா ? பதினைஞ்சு வாங்கிக்கோங்க ' " நான் கம்மியாத் தான் சொல்லியிருக்கேன் . சொல்யூஷன் போட்டு ஒட்டி தைக்கணும் . அப்போ தான் தையல் நிக்கும் " இளைஞனின் பேரம் தொடர்ந்து கொண்டிருந்தது .

இதனிடையே ... டீ ஆர்டர் எடுக்க பக்கத்து டீக்கடை சிறுவன் வந்தான் . "ஒரு டீ கொண்டு வாப்பா.... சார் டீ சாப்பிடுறீங்களா ? அந்த இளைஞனின் பதிலுக்கு காத்திராமல் , " சாருக்கும் ஒரு டீ சேர்த்து ரெண்டு டீ கொண்டு வாப்பா ... " என்றார் .

" இல்லே ஐயா வேண்டாம் ... "

"பரவாயில்லை சார் ... சாப்பிடுங்க ... நல்லா இருக்கும் . இந்த ஏரியாவுல முப்பது வருஷமா இருக்குற கடை அது ..." சற்று நேரத்தில் சூடான டீ வந்தது . அந்தப் பெரியவரிடம் பத்து ரூபாய்க்கு பேரம் பேசிய அந்த இளைஞன் நெளிந்தபடி அந்த டீயை அருந்தினான் . செருப்பு தைத்து முடித்த பிறகு பைசா கொடுக்கும்போது சாப்பிட்ட டீக்கும் சேர்த்து தர , அந்த பெரியவர் சொன்னார் ... " செருப்பு தைச்சதுக்கு மட்டும் காசு கொடுங்க ... டீக்கு வேண்டாம் ... என்னோட கஸ்டமர் நீங்க ... உங்களை உபசரிக்கிறது என்னோட கடமை .. " என்றார் . ( தாம்பரம் சானடோரியம் பேருந்து நிறுத்தம் அருகே உண்மையில் நடந்த சம்பவம் இது நம் வாசகர் ஒருவர் கவனித்த சம்பவம்.

இவர்களில் யார் பணக்காரர் ? காரில் வந்து விலை குறைந்த புடவையை வாங்கிச் சென்ற அந்த சீமாட்டியா அல்லது நடந்து வந்து விலையுயர்ந்த புடவையை தனது எஜமானிக்கு வாங்கிச் அவள் வீட்டு வேலைக்காரியா? குழந்தையின் பாலுக்கு கூட அநியாய விலை வைத்த அந்த ஸ்டார் ஓட்டல் மேனஜரா ? அல்லது குழந்தைக்கு கொடுக்கும் பாலுக்கு பணம் வேண்டாம் என்று சொன்ன அந்த சாலையோர டீக்கடைக்காரரா? செருப்பு தைப்பவரிடம் பத்து ரூபாய்க்கு பேரம் பேசிய பைக்கில் வந்த இளைஞரா அல்லது டீயை அவருக்கு கொடுத்து உபசரித்த செருப்பு தைப்பவரா?.

பணக்காரன் , ஏழை குறித்த தவறான மதிப்பீடுகள் ( WRONG DEFINITION ) ஆண்டாண்டு காலமாக நமது சிந்தனையில் ஊறிப்போயிருக்கிறது . நம்மால் இந்த உலகை மாற்றமுடியுமா என்று தெரியாது . குறைந்த பட்சம் இதை படிப்பவர்கள் மாற்றத்தை ஏற்படுத்தலாம். அவர்கள் உலகை மாற்றுவார்கள் . பணம் வைத்திருப்பதால் மட்டுமே ஒருவர் பணக்காராகிவிட முடியாது. அதே நேரம் , பணம் இல்லாததால் ஒருவர் ஏழையும் கிடையாது . பணத்திற்கான ஓட்டத்தில் நாம் மனிதர்களை பொருட்படுத்துவதில்லை... பணத்தை பெரிதாக கருதாத இதயங்களை கவனிக்க மறந்துவிடுகிறோம்.. தேவையுள்ளவர்களுக்கு பிரதிபலன் எதிர்பார்க்காமல் உதவுவோம். அது தரும் மனநிறைவை பணம் நிச்சயம் தரமுடியாது . தன்னைப்போல பிறரை எண்ணும் தன்மை வேண்டுமே அந்த தன்மை வர உள்ளத்திலே கருணை வேண்டுமே... பொன்னைப்போல மனம் படைத்தால் செல்வம் வேறில்லை. இதை புரிந்து கொண்ட ஒருவனை போல் மனிதன் வேறில்லை..

# மீம்ஸ்







# ஆலமரம்



ஊர்க்கோடியின் ஆலமரத்தைப்பற்றி நிறைய கதைகள் உண்டு. தாத்தா காலத்திற்கு முன்னரெல்லாம் அங்குதான் நாட்டாமை தீர்ப்புகள் நடந்ததாக சொல்லிக்கொள்வார்கள். எனக்குத்தெரிந்து பெரிசுகளின் சாயங்கால ஓய்விடமாக அது இருந்திருக்கிறது. சுற்றிலுமான மேடையில் அமர்ந்தபடி ஊர்க்கதை பேசும் அவர்களின் குறைந்தபட்ச நிம்மதிகூட அதுவாகவே இருந்தது.

புருசனோடு சண்டையிட்டு தூக்குப்போட்டு இறந்துபோன இருளாயியின் ஆவி சுற்றித்திரிவதாகவும் ஒரு புரளியுண்டு. மேலத்தெரு சண்முகக்கவுண்டரைத்தவிர யாருமே நடுசாமம் தாண்டி எந்த சோலிக்கும் போனதேயில்லை வெகுநாள். நாள்பட நாள்பட கொஞ்சம் மறந்துபோனாள் இருளாயி. நாக்கைத்துருத்திக்கொண்டு இருளாயி துரத்தியதாக இப்போதும் சொல்லுவான் சந்தானம். அவனுக்கானால் அத்தனை பயம் அந்த ஆலமரத்தின்மீது.

பகலெல்லாம் எத்தனை கொடும் வெய்யிலயும் சாதாரணமாய் விழுங்கிவிடும் ஆலமரம் அமர்ந்தால் ஏசி போட்டதுபோல ஜில்லென்று தூங்கவைத்துவிடும்.

காதல் புறாக்கள் எப்போதேனும் எவருமறியாது பேசிக்கொள்ளும் சம்பாசஷணைக்கு விழுதுகள் வெட்கப்பட்டுக்கொள்ளும். விடியற்காலையிலும் மாலையிலும் அத்தனை குருவிகள் ஆரவாரமாய் சப்தமிடும். அந்த சப்தம் காதுகளில் நுழைந்து சங்கீதமாய் மூளைக்குள் சம்மணமிட்டுக்கொள்ளும்.

ஊர் பெருசாகிடுச்சு. ஓட்டு வீடு கூரை வீடெல்லாம் கான்கிரீட் வீடுகளா மாறிடுச்சு ஏறக்குறைய. அதான் இத்தன வருசம் கழிச்சு ஊர் ரோடு வசதிக்காக வேற வழியில்லாம அந்த முடிவ எடுத்திருக்காங்கலாம். ஊரெல்லாம் போராடி மனுகொடுத்து ஒரு பிரயோசனமுமில்ல. கலெக்டர் ஆர்டர் சாலை விரிவாக்கத்திற்கு இடையூரா இருக்கற ஆலமரத்த வெட்டித்தான் ஆகணுமாம். சந்தானம்கூட அழுதுகிட்டேதான் சொன்னான் ஒண்ணும் பணண முடியலனு.

இருளாயி இனி யாரா தொரத்துவானு தெரியல. ஏனோ இன்னிக்கு குருவிகள் ரொம்ப நேரம் ஆரவாரம் செஞ்ச மாதிரி தெரிஞ்சது.

ம.முத்துக்குமார்
வே.காளியாபுரம்

# விடுகதை



| | |
|---|---|
| நாலு மூளைக்கிணறு, நாகரத்தினக்கிணறு, எட்டிப் பார்த்தால் சொட்டுத தண்ணீர் இல்லை அது என்ன? | அச்சு வெல்லம் |
| அடிமேல் அடி வாங்கி அனைவரையும் சொக்க வைக்கும். அது என்ன? | மிருதங்கம் |
| கை பட்டால் சிணுங்கும் கன்னிப் பெண், கூச்சல் போட்டு கதவை திறக்க வைப்பவள் அவள் யார்? | காலிங்பெல் |
| பகலிலே வெறுங்காடு, இரவெல்லாம் பூக்காடு. அது என்ன? | வானம் |

# ஜோக்ஸ்



(1) "கொள்கைதான் எங்களுக்கு முக்கியம் என்று தலைவர் மேடையில் பேசியதை கொள்ளைதான் முக்கியம் என்று திரித்து பரப்பிவரும் எதிர்க்கட்சியினரை வன்மையாக கண்டிக்கிறோம்............"


(2) "ஊழல் வழக்கு காரணமாக எனது பாஸ்போர்ட்டையும், வங்கிக் கணக்கையும் முடக்கினீர்கள் ஓகே......., ஆனா அதுக்காக என்னோட ஃபேஸ்புக், வாட்ஸ்அப், ட்விட்டர், இன்ஸ்டாகிராம் கணக்குகளை எல்லாம் இப்படி முடக்கி வச்சா எப்படி ......."

(3) வங்கி ஊழியர்:- "ஆதார் கார்டு கேட்டால் சேதார் கார்டுதான் இருக்குன்னு சொல்றீங்களே..... அது என்ன சேதார் கார்டு........?"

கஸ்டமர்:- "வீட்டுக்குள்ள வெள்ளம் வந்ததுனால என்னோட ஆதார் கார்டு சேதாரம் ஆயிடுச்சு சார்.........!!"

(4) "வாட்ஸ்அப்பில் வந்த விடியோவை பார்த்து நம்ம தலைவர் ஏன் அப்செட் ஆயிட்டார்........?"

"டீவி செய்தியில் தலைவரின் உரையைக் காண்பித்தபோது தொண்டர் தனது செருப்பை டீவியை நோக்கி எறிந்ததை வீடியோவா அனுப்பியருக்காராம்........!!"



(5) "அந்த ஜோக் எழுத்தாளர் எதற்காக யாகம் செய்கிறார்.....?"

"ரெண்டு வருஷமா அவரோட ஒரு ஜோக்கு கூட எந்த பத்திரிகையிலயும் பிரசுரமாகலையாம்........ யாரோ சூன்யம் வெச்சிருப்பாங்களோன்னு சந்தேகப்படறாரு........!!"

(6) அரசியல்வாதி (மேடையில்): கடந்த 5 ஆண்டுகளில் நோட்டாவுக்கு மொத்தம் 1 கோடிக்கும் மேலே ஓட்டுகள் கிடைத்துள்ளதாம். எனவே தேர்தல் ஆணையம் நோட்டாவை ஒரு தேசிய கட்சியாக அறிவித்தால் எங்களுக்கு அதனோடு தேர்தல் கூட்டணி அமைக்க வசதியாக இருக்கும்......!

(7) “நம்ம தலைவர் பேசற மேடையில சென்சார் மூலமா இயங்குற ஒரு மெஷினை வெச்சிருக்காங்களாமே, எதுக்கு.....?”

“செருப்பு, தக்காளி, முட்டை எத வீசினாலும் அதை உடனே ஒரு நொடியிலே எந்த பகுதியிலிருந்து வந்ததோ அந்தப் பக்கமே வேகமா திருப்பி எறிஞ்சுடுமாம்......!”

(8) “நம்மளோட கட்சி கூட்டத்துக்கு மைதானமே நிரம்பி வழியற மாதிரி கூட்டம் வரணும்னா என்ன செய்யலாம்.........?”

“மைதானத்தை சுத்தி சியர்ஸ் கேர்ள்ஸை நிறுத்திப் பார்க்கலாம் தலைவரே.........”

(9) “சிறையிலிருக்கும் தலைவர் சிறை அதிகாரிகளுக்கு ஏதோ வேண்டுகோள் வைத்திருக்கிறாராமே ?”

“அவரால் பிழைப்பு நடத்தி வந்த மீம்ஸ் கிரியேட்டர்களுக்கு மீண்டும் வாழ்வளிக்க அவர்களை வாரத்திற்கு ஒரு முறையாவது ஜெயிலுக்குள் தன்னை சந்திக்க அனுமதிக்கனும்னு மனு கொடுத்திருக்கார்.....!”

(10) “இளவரசிக்கு குழந்தை மனசு.......”

“அதுக்காக இப்படியா இரண்டு கால்களையும் பல்லக்குக்கு வெளியே தொங்கப் போட்டுகிட்டு வர்றது......?!”

# வாங்க சம்பாதிக்கலாம்



## ரிசர்வ் வங்கியில் 650 உதவியாளர்கள் பணியிடங்கள்




நாடு தழுவிய இரண்டு கட்ட போட்டித் தேர்வு மூலம் நிரப்பப்பட உள்ள இந்த பணியிடங்களுக்கு தகுதியும் ஆர்வமும் உள்ள பட்டதாரி இளைஞர்களிடம் இருந்து வரும் மார்ச் 8 ஆம் தேதிக்குள் ஆன்லைன் மூலம் விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

பணி: உதவியாளர்
காலியிடங்கள்: 650
சம்பளம்: மாதம் ரூ.58,514
தகுதி: 1.2.2026 தேதியின்படி ஏதாவதொரு துறையில் இளங்கலைப் பட்டம் பெற்றிருக்க வேண்டும்.
வயது வரம்பு: 1.2.2026 தேதியின்படி 20 முதல் 28 வயதுக்குள் இருக்க வேண்டும். அதாவது 2.2.1998-க்கு முன்போ, 1.2.2006-க்கு பின்போ பிறந்தவர்களாக இருக்க கூடாது. அரசு விதிமுறைகளின்படி 3 முதல் 5 ஆண்டுகள் வயது தளர்வு வழங்கப்படும். மாற்றுத்திறன் பிரிவினர்களுக்கு 10 ஆண்டுகள் முதல் 15 ஆண்டுகள் வரை தளர்வு வழங்கப்படும்.

தேர்வு செய்யப்படும் முறை: முதல்நிலைத் தேர்வு, முதன்மைத் தேர்வு, அதைத் தொடர்ந்து மொழித் திறன் தேர்வு மூலம் தகுதியானவர்கள் தேர்வு செய்யப்படுவர். வினாத்தாள் ஆங்கிலம், ஹிந்தி மற்றும் தமிழில் அமைந்திருக்கும்.

தமிழ்நாட்டில் தேர்வு நடைபெறும் இடம்:
முதல்நிலைத் தேர்வு மையம்: சென்னை, கோவை, மதுரை, நாமக்கல், சேலம், திருச்சி, திருநெல்வேலி, வேலூர், ஈரோடு, விருதுநகர், நாகர்கோவில், கன்னியாகுமரி, திருவண்ணாமலை, திருப்பூர், தஞ்சாவூர், தர்மபுரி மற்றும் புதுச்சேரி

முதன்மைத் தேர்வு மையம்: சென்னை, கோவை, திருச்சி, திருநெல்வேலி, வேலூர், மதுரை, சேலம் மற்றும் புதுச்சேரி.

தேர்வு நடைபெறும் நாள்: தோராயமாக முதல்நிலைத் தேர்வு ஏப்ரல் 11, முதன்மைத் தேர்வு ஜூன் 7 ஆம் தேதி நடத்தப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

விண்ணப்பக் கட்டணம்: எஸ்சி, எஸ்டி, முன்னாள் ராணுவத்தினர், மாற்றுத்திறன் பிரிவினருக்கு ரூ.50, இதர அனைத்து பிரிவினருக்கு ரூ.450. கட்டணத்தை ஆன்லைன் மூலம் செலுத்த வேண்டும்.

ஆன்லைனில் விண்ணப்பிக்கும் முறை: www.rbi.org.in என்ற அதிகாரப்பூர்வ இணையதளத்தின் மூலம் ஆன்லைனில் விண்ணப்பிக்க வேண்டும்.

ஆன்லைனில் விண்ணப்பிப்பதற்கான கடைசி நாள்: 8.3.2026

## டில்லி அரசில் இன்ஜினியர் பணி



டில்லி அரசில் இன்ஜினியர் பணியிடங்களுக்கு அறிவிப்பு வெளியாகியுள்ளது.

அசிஸ்டென்ட் செக்சன் ஆபிசர் 587, ஜூனியர் இன்ஜினியரிங் (சிவில்) 314, சட்ட உதவியாளர் 10 உட்பட மொத்தம் 911 இடங்கள் உள்ளன.

கல்வித்தகுதி: டிப்ளமோ / பி.இ.,/ பி.டெக்., / பட்டப்படிப்பு / பி.எல்.,

வயது: 18-30 (25.3.2026ன் படி)
தேர்ச்சி முறை: ஸ்கில் தேர்வு, டிரேடு தேர்வு.

விண்ணப்பிக்கும் முறை: ஆன்லைன்
விண்ணப்பக்கட்டணம்: ரூ. 100. எஸ்.சி., / எஸ்.டி., பிரிவினருக்கு கட்டணம் இல்லை.
கடைசிநாள்: 25.3.2026
விவரங்களுக்கு: dsssb.delhi.gov.in

## சென்ட்ரல் வங்கியில் அதிகாரி வேலை.. 1.20 லட்சம் வரை சம்பளம்.. பிஇ, பிடெக் முடித்தவர்களுக்கு வாய்ப்பு




மும்பையை தலைமையிடமாக கொண்டு செயல்படும் இந்த வங்கிக்கு நாடு முழுவதும் கிளைகள் உள்ளன. நாடு முழுக்க பல்வேறு கிளைகளுடன் ஆயிரக்கணக்கான ஊழியர்கள் இந்த வங்கியில் பணி செய்து வருகிறார்கள். சென்ட்ரல் வங்கியில் ஏற்படும் காலிப்பணியிடங்கள் அவ்வப்போது உரிய அறிவிப்புகள் வெளியிடப்பட்டு நிரப்பப்படும். அந்த வகையில் தற்போது வங்கியில் காலியாக உள்ள 275 சிறப்பு அதிகாரி பணியிடங்களை நிரப்புவதற்கான அறிவிப்பை வெளியிட்டுள்ளது. இதற்கு யாரெல்லாம் விண்ணப்பிக்கலாம் என இங்கு பார்க்கலாம்.

பணியிடங்கள் விவரம்:
மொத்தம் 275 சிறப்பு அதிகாரி காலியிடங்கள் நிரப்பப்படுகிறது. மென்பொருள் உருவாக்குநர்கள் (Java,.Net), மொபைல் உருவாக்குநர் (Android/iOS), டேட்டாபேஸ் அட்மினிஸ்ட்ரேஷன், டிஜிட்டல் சேனல் மேலாளர், கிளவுட் மேலாளர், தகவல் பாதுகாப்பு, நெட்வொர்க் அட்மினிஸ்ட்ரேட்டர், IT அதிகாரி பணியிடங்கள் மற்றும் ரிஸ்க் மேலாளர், வரிவிதிப்பு / CA போன்ற சிறப்புப் பிரிவுகளில் பணியிடங்கள் நிரப்பப்படுகின்றன.

கல்வித் தகுதி:
பி.இ, பிடெக், எம்சிஏ முடித்தவர்கள் இந்த பணியிடங்களுக்கு விண்ணப்பிக்க முடியும்.

வயது வரம்பு
* வயது வரம்பை பொறுத்தவரை பதவிகளுக்கு ஏற்ப மாறுபடும். உதவி மேலாளர் (Scale I) பணிக்கு 30 ஆண்டுகள் வரை விண்ணப்பிக்கலாம். மேலாளர் (Scale II) மற்றும் மூத்த மேலாளர் (Scale III) 35 ஆண்டுகள், தலைமை மேலாளர் (Scale IV) 45 ஆண்டுகள் வரை விண்ணப்பிக்கலாம்.

## மதுரையிலேயே ஐடி வேலை ரெடி.. மார்ச் 7 ம் தேதி இண்டர்வியூ.. அழைக்கும் HCL




மதுரையில் செயல்பட்டு வரும் எச்சிஎல் நிறுவனத்தில் மார்ச் 7 ம் தேதி (சனிக்கிழமை) காலை 10 மணி முதல் மதியம் 1 மணி வரை இண்டர்வியூ நடைபெற உள்ளது.

மதுரையில் எச்சிஎல் ஐடி நிறுவனம் செயல்பட்டு வருகிறது. இந்த நிறுவனத்தில் இருந்து புதிய வேலைவாய்ப்பு குறித்த அறிவிப்பு வெளியாகி உள்ளது. அதன்படி 'செமி டெக் என்ட்ரி லெவல் டேலண்ட்' என்ற பெயரில் சர்வீஸ் டெஸ்க் எல் -1 அனலிஸ்ட் பணிக்கு ஆட்கள் தேர்வு செய்யப்பட உள்ளனர்.

டிகிரி முடித்திருக்க வேண்டும்

இந்த பணிக்கு விண்ணப்பம் செய்வோர் கட்டாயமாக ஏதேனும் ஒரு பிரிவில் டிகிரி படிப்பை முடித்திருக்க வேண்டும். ஆங்கிலத்தில் சரளமாக பேசவும் எழுதவும் தெரிந்திருக்க வேண்டும். எம்எஸ் ஆபிஸில் பணியாற்ற தெரிந்திருக்க வேண்டும். சர்வீஸ் நவ் அல்லது ஏதாவது டிக்கெட்டிங் டூலில் பணியாற்ற தெரிந்திருக்க வேண்டும்.

எந்த வகையான ஷிப்ட்டாக இருந்தாலும் பணியாற்ற தயாராக இருக்க வேண்டும். 24X7 என்ற அடிப்படையில் பணியாற்ற தயாராக இருக்க வேண்டும். விண்ணப்பம் செய்வோருக்கு குறைந்தபட்சம் 6 மாதம் முதல் 8 ஆண்டுகள் வரை பணி அனுபவம் இருக்க வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. அனுபவம் இல்லாதவர்கள் இந்த இண்டர்வியூவில் பங்கேற்க வேண்டாம் என்று கூறப்பட்டுள்ளது.

கண்டிஷன் என்ன?

அதன்படி ஐடி சர்வீஸ் டெஸ்க், டிக்கெட்டிங், நெட்வொர்க்/ஹார்ட்வேர்/சாப்ட்வேர் ட்ரபிள்சூட்டிங், வாய்ஸ்/சாட் சப்போர்ட், ஐடி பேக் ஆபிஸ் ஆபரேஷன்ஸ், டிஏடி/எஸ்எல்ஏ மற்றும் கிளைன்ட் மேனேஜ்மென்ட் (Must) உள்ளிட்டவற்றில் அனுபவம் இருக்க வேண்டும். இன்டர்ன்ஷிப் என்பது அனுபவமாக எடுத்து கொள்ளப்படாது. கடந்த ஒரு மாதத்தில் எச்சிஎல் இண்டர்வியூவில் பங்கேற்றவர்களுக்கு அனுமதி கிடையாது.

மார்ச் 7 ல் இண்டர்வியூ

தற்போதைய அறிவிப்பின்படி பணிக்கான மாதசம்பளம் பற்றி எதுவும் தெரிவிக்கப்படவில்லை. பணி அனுபவம் மற்றும் திறமையை பொறுத்து சம்பளம் நிர்ணயம் செய்யப்படும். இதுபற்றி கடைசி கட்ட இண்டர்வியூவில் தெரிவிக்கப்படும். இண்டர்வியூ என்பது மார்ச் 7 ம் தேதி மதுரையில் நடைபெற உள்ளது. அன்றைய தினம் காலை 10 மணி முதல் மதியம் 1 மணி வரை இண்டர்வியூ நடக்கும்.

இதனால் முன்கூட்டியே செல்வது நல்லது. இண்டர்வியூவுக்கு செல்வோர் கண்டிப்பாக ரெஸ்யூம், ஆதார் கார்டு ஆகியவற்றை கட்டாயம் வைத்திருக்க வேண்டும். லேப்டாப், பென்டிரைவ் உள்ளிட்டவற்றை எடுத்து செல்ல அனுமதி கிடையாது.

நியமனம் எங்கு?

இண்டர்வியூவின்போது ஏதேனும் சந்தேகங்கள் இருப்பின் அதனை அங்கேயே கேட்டு கொள்ளலாம். கீழே உள்ள அதிகாரப்பூர்வ அறிவிப்பின் வழியாக விண்ணப்பம் செய்து இண்டர்வியூவில் பங்கேற்கலாம். தேர்வாகும் நபர்கள் மதுரையில் நியமனம் செய்யப்பட வாய்ப்புள்ளது.

# அமெரிக்கா, இஸ்ரேல் – ஈரான் போர் எதிரொலி: பங்கு சந்தையில் ரூ. 16.32 லட்சம் கோடி இழப்பு!

புதுதில்லி: மத்திய கிழக்கு நாடுகளில் ஏற்பட்ட போர் சூழ்நிலை காரணமாக இந்திய பங்குச் சந்தை பெரும் சரிவை எதிர்நோக்கி வருகின்றன.

அமெரிக்கா, இஸ்ரேல் மற்றும் ஈரான் இடையேயான மோதலை தொடர்ந்து, இந்திய பங்குச் சந்தையில் ஏற்பட்ட இரண்டு நாள் சரிவில், முதலீட்டாளர்கள் ரூ.16.32 லட்சம் கோடி அளவுக்கு இழப்பை ஏற்படுத்தியுள்ளது.

பிப்ரவரி 28 முதல் ஈரான் மற்றும் அமெரிக்கா - இஸ்ரேல் இடையேயான மோதல் தொடங்கி நடைபெற்று வருவதால், கடந்த வாரம் வெள்ளிக்கிழமை முதல் இன்று வரையான சென்செக்ஸ் 2,171 புள்ளிகள் சரிந்துள்ளது.

கடந்த வாரம் வெள்ளிக்கிழமை முதல் சென்செக்ஸில் பட்டியலிடப்பட்ட நிறுவனங்களின் சந்தை மூலதனம் ரூ.16,32,428.12 கோடி சரிந்து ரூ.4,47,18,243.15 கோடியாக உள்ளது.

இன்றைய தொடக்க வர்த்தகத்தில், இந்திய பங்குச் சந்தை சரிந்து வர்த்தகமானது. பலவீனமான உலகளாவிய குறிப்புகள், கச்சா எண்ணெய் விலை உயர்வு மற்றும் உலகலாவிய அரசியல் பதற்றங்களுக்கு நடுவில் வர்த்த போக்கும் சரிவை நோக்கி பயணித்தன. அதே வேளையில், தொடர்ந்து வெளியேறி வரும் அந்நிய நிதி உள்ளிட்டவை, முதலீட்டாளர்களின் நம்பிக்கையை முற்றிலும் குலைத்தது.

பிஎஸ்இ-யில் செலக்ட் ஸ்மால்கேப் இன்டெக்ஸ் 2.42 சதவீதமும், மிட்கேப் செலக்ட் இன்டெக்ஸ் 2.10 சதவீதமும் சரிந்தன.

துறை வாரியான குறியீடுகளில், உலோகம் 4 சதவீதமும், பிஎஸ்இ-யில் பொதுத்துறை வங்கி 3.50 சதவீதமும், தொழில்துறை 3.29 சதவீதமும், ரியல் எஸ்டேட் 3.16 சதவீதமும், மூலதன பொருட்கள் 2.64 சதவீதமும், மின்சாரம் 2.59 சதவீதமும், சேவை துறை 2.25 சதவீதம் மற்றும் எரிசக்தி 2.23 சதவீதம் சரிந்தன.

இன்றைய மும்பை பங்குச் சந்தையில் 3,245 பங்குகள் சரிந்த நிலையில் 1,053 பங்குகள் உயர்ந்தும் 135 பங்குகள் மாற்றமின்றி முடிவடைந்தன.

## டாலருக்கு நிகரான ரூபாய் மதிப்பு 67 காசுகள் சரிந்து ரூ.92.16 ஆக நிறைவு!

மும்பை: ஈரான் நெருக்கடியைத் தொடர்ந்து கச்சா எண்ணெய் விலை அதிகரித்ததன் காரணமாக, இன்றைய அந்நிய செலாவணி சந்தையில், அமெரிக்க டாலருக்கு நிகரான இந்திய ரூபாய் மதிப்பு 67 காசுகள் சரிந்து ரூ.92.16 ஆக முடிவடைந்தன.

அமெரிக்க-ஈரான் நெருக்கடியின் மத்தியில், டாலர் குறியீடு 98 என்ற நிலையை கடந்ததால், இந்திய ரூபாயின் மதிப்பு மேல் அழுத்தம் அதிகரித்ததாக அந்நிய செலாவணி வர்த்தகர்கள் தெரிவித்தனர்.

தொடர்ந்து வெளியேறி வரும் வெளிநாட்டு நிதி, உள்நாட்டு பங்குச் சந்தையில் தொடரும் எதிர்மறையான போக்கு ஆகியவற்றால், இந்திய ரூபாயின் மதிப்பு வெகுவாக சரிந்ததாக வர்த்தகர்கள் தெரிவித்தனர். வங்கிகளுக்கு இடையேயான அந்நியச் செலாவணி சந்தையில், ரூபாய் மதிப்பு ரூ.92.05 ஆக தொடங்கி, பிறகு ரூ.92.35 என்ற இன்ட்ராடே குறைந்த அளவைத் தொட்டது. முடிவில் டாலருக்கு நிகரான எப்போதும் இல்லாத குறைந்த அளவான ரூ.92.16ஆக முடிவடைந்தது. இது அதன் முந்தைய வர்த்தக நாளின் கடைசி வர்த்தகத்திலிருந்து 67 காசுகள் சரிவு.




இந்த பகுதியில் உங்கள் படைப்புக்கள் வரவேற்கிறோம்



whatsapp No



8122664699

## ஸ்ரீசந்திரசூடேஸ்வரர் தேர் திருவிழா



**கிருஷ்ணகிரி, மார்ச் 05:** கிருஷ்ணகிரி மாவட்டம் ஓசூர் அருள்மிகு மரகதாம்பாள் உடனுறை ஸ்ரீ சந்திர சூடேஸ்வரர் திருக்கோயிலில் தேரோட்டம் விநாயகர் தேர், மரகதாம்பாள் தேர், ஸ்ரீசந்திர சூடேஸ்வரர் தேர் வண்ண மலர் மாலைகளால் அலங்காரங்கள், வான வேடிக்கையுடன் திருவீதி உலா நடைபெற்றது. அவரவர்கள் வேண்டுதலை நிறைவேற்றி சாமி தரிசனம் செய்தனர். லட்சக்கணக்கான பக்தர்கள் கலந்து கொண்டு வேண்டி அருள் பெற்றனர். பக்தர்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டது.

**தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை**

## 10 நாட்கள் வங்கிகள் விடுமுறை




இந்திய ரிசர்வ் வங்கி அறிவிப்பின்படி, மார்ச் மாதத்தில் மொத்தம் 10 நாட்கள் வங்கிகள் விடுமுறை உள்ளது. எனவே அவசர வங்கி பணிகளை முன்கூட்டியே திட்டமிடுவது நல்லது.

## மாநிலங்களவை வேட்பாளரை அறிவித்தது அதிமுக!



**சென்னை, மார்ச் 05:** தமிழ்நாடு, பீகார் உள்ளிட்ட 10 மாநிலங்களில் காலியாகும் 37 மாநிலங்களவை இடங்களுக்கான தேர்தல் மார்ச் 16-ஆம் தேதி நடைபெற உள்ளது. தமிழ்நாட்டில் இத்தேர்தலுக்கான வேட்புமனு தாக்கல் நாளையுடன் முடிவடைகிறது. இந்நிலையில் அதிமுக தனது வேட்பாளர்களை அறிவித்துள்ளது. இதுதொடர்பாக அக்கட்சியின் பொதுச்செயலாளர் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில்,

"அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி மன்றக் குழு பரிசீலித்து எடுத்த முடிவின்படி, 16.3.2026 அன்று நடைபெற உள்ள நாடாளுமன்ற மாநிலங்களவை உறுப்பினர்கள் பதவிக்கான தேர்தலில், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைமையிலான கூட்டணியில் இடம்பெற்றுள்ள பாட்டாளி மக்கள் கட்சிக்கு ஒரு மாநிலங்களவை உறுப்பினர் இடம் ஒதுக்கப்படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும் அதிமுகவின் அதிகாரப்பூர்வ வேட்பாளராக தம்பிதுரை தேர்ந்தெடுத்து நிறுத்தப்படுகிறார் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்" எனக் குறிப்பிட்டுள்ளார்.

திமுக தரப்பில் திருச்சி சிவா, பேராசிரியர் கான்ஸ்டன்டைன் ரவீந்திரன் ஆகியோர் வேட்பாளர்களாக அறிவிக்கப்பட்டுள்ளனர். மற்ற இரண்டு சீட்டுகளை கூட்டணியில் இடம்பெற்றுள்ள தேமுதிகவிற்கும், காங்கிஸுற்கும் ஒதுக்கியுள்ளது திமுக.

## அய்யா வைகுண்டரின் அவதாரத் திருநாள்




அய்யா வைகுண்டரின் அவதாரத் திருநாள் மாசி மாதம் 20 ஆம் நாள் நடைபெறுவது வழக்கம். திருச்செந்தூர் கடலிலிருந்து அய்யா வைகுண்டராகத் திரும்பிய தினமான மாசி 20 ஆம் நாள், அவரது அவதார தினமாகக் கொண்டாடப்படுகிறது.

## மடப்புரம் அஜித்குமார் கொலை வழக்கு - நகை திருட்டு புகார் கொடுத்த நிகிதா மதுரை கோர்ட்டில் ஆஜர்



**மதுரை, மார்ச் 05:** சிவகங்கை மாவட்டம் திருப்புவனம் அருகே பிரசித்தி பெற்ற மடப்புரம் பத்ரகாளியம்மன் கோவில் உள்ளது. இந்த கோவில் காவலாளி அஜித் குமார் மீது நிகிதா என்பவர் கடந்த ஆண்டு ஜூன் மாதம் நகை திருடியதாக புகார் அளித்தார்.

இதன் அடிப்படையில் திருப்புவனம் தனிப்படை போலீசார் அஜித்குமாரிடம் விசாரணை நடத்தினர். அப்போது போலீசார் தாக்கியதில் அஜித்குமார் படுகாயம் அடைந்து இறந்தார்.

தமிழக முழுவதும் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்திய இந்த சம்பவம் தொடர்பாக மானாமதுரை தனிப்படை போலீஸ்காரர்கள் 5 பேர் கைது செய்யப்பட்டு மதுரை மத்திய சிறையில் அடைக்கப்பட்டனர். மேலும் இந்த வழக்கை மதுரை ஐகோர்ட்டு உத்தரவுப்படி சி.பி.ஐ. விசாரணை நடத்தி வருகிறது.

அண்மையில் சி.பி.ஐ. மதுரை மாவட்ட கோர்ட்டில் இந்த வழக்கு தொடர்பாக அறிக்கை தாக்கல் செய்தது. அதில் நிகிதா பொய் புகார் அளித்ததாகவும், போலீஸ் விசாரணையில் அஜித் குமார் தாக்கப்பட்டு இறந்ததாகவும் குறிப்பிடப்பட்டிருந்தது. அப்போது நகை திருட்டு என பொய் புகார் அளித்த நிகிதா மீது நடவடிக்கை எடுக்க நீதிபதி அறிவுறுத்தினார்.

அதன்படி அஜித்குமார் கொலை வழக்கில் நிகிதாவை நேரில் அழைத்து விசாரிக்க அனுமதிக்க வேண்டி மதுரை மாவட்ட நீதிமன்றத்தில் சி.பி.ஐ. தரப்பில் ஏற்கனவே மனுத்தாக்கல் செய்யப்பட்டது. இந்த மனுவை ஏற்றுக்கொண்ட நீதிமன்றம் நிகிதாவை நேரில் ஆஜராக நோட்டீஸ் அனுப்பியிருந்தது.

அதன்படி நேற்று காலை மதுரை மாவட்ட நீதிமன்றத்தில் நிகிதா ஆஜரானார். மாவட்ட கோர்ட்டு உத்தரவுப்படி நிகிதாவிடம் சி.பி.ஐ. புகார் தொடர்பாக விசாணை நடத்துவார்கள் என தெரிகிறது.

## உறுதியான திமுக - காங்கிரஸ் கூட்டணி தனித்து விடப்பட்ட தவெக என்ன செய்யப்போகிறார் விஜய்?



**சென்னை, மார்ச் 05:** காங்கிரஸ் கட்சி திமுக கூட்டணியில் அதிக இடங்களை கோரியது.

திமுக - காங்கிரஸ் கூட்டணியில் இழுபறி ஏற்பட்டது,

2026 தமிழ்நாடு சட்டப் பேரவைத் தேர்தலுக்கான திமுக - காங்கிரஸ் கூட்டணி உறுதியாகியுள்ளது. பல கட்டங்களாக நடைபெற்ற தொகுதிப் பங்கீடு பேச்சு வார்த்தைகளுக்குப் பிறகு, இன்று இரு கட்சிகளுக்கும் இடையே உடன்பாடு எட்டப்பட்டுள்ளது. காங்கிரஸ் கட்சிக்கு 28 சட்டப்பேரவை இடங்களும், ஒரு மாநிலங்களவை இடமும் ஒதுக்கப்பட்டுள்ளது.

தவெகவை காரணம் காட்டி காங்கிரஸ் கட்சி திமுக கூட்டணியில் அதிக இடங்களை கோரியது. இதனால் திமுக - காங்கிரஸ் கூட்டணியில் இழுபறி ஏற்பட்டது,

தொகுதிப் பங்கீட்டில் நிலவி வந்த இழுபறியைத் தீர்க்க, காங்கிரஸ் மேலிடம் சார்பில் மூத்த தலைவர் ப. சிதம்பரம் முதல்வர் மு.க. ஸ்டாலினைச் சந்தித்துப் பேசினார். இந்த சந்திப்பை தொடர்ந்து கூட்டணியில் இணக்கம் ஏற்பட்டது. இந்நிலையில் சற்றுநேரத்திற்கு முன்பு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின், டி.ஆர். பாலு, கனிமொழி, செல்வப்பெருந்தகை மற்றும் காங்கிரஸ் குழுவினர் அண்ணா அறிவாலயத்தில் கூடினர். இந்நிலையில் திமுக - காங்கிரஸ் இடையே தொகுதிப் பங்கீடு ஒப்பந்தம் கையெழுத்தானது.

ஆட்சியில் பங்கு என்று கூறி திமுக கூட்டணி கட்சிகளுக்கு தவெக தூது விட்டது. விசிக இந்த வலையில் முதலில் விழும் என்று எதிர்பார்த்த தவெகவிற்கு ஏமாற்றமே மிஞ்சியது. இதையடுத்து திமுக கூட்டணி நாளுக்கு நாள் வலுவானது. தேமுதிகவும் திமுக கூட்டணியில் இணைந்தது.

இதனிடையே காங்கிரஸ் கட்சியுடன் தவெக மறைமுகமாக கூட்டணி பேச்சுவார்த்தையில் ஈடுபடுவதாக தகவல் வெளியாகி தமிழக அரசியலில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது.

தற்போது காங்கிரஸ் கட்சியுடன் திமுக கூட்டணி பங்கீடு இறுதி செய்ததால் தவெகவிற்கு ஏமாற்றமே மிஞ்சியுள்ளது. திமுக கூட்டணியும் அதிமுக கூட்டணியும் உறுதியாகியுள்ளதால் நாம் தமிழர் கட்சி போல தனித்து போட்டியிட வேண்டிய நிலைமைக்கு தவெக தள்ளப்பட்டுள்ளது.

## இஸ்ரேல் மற்றும் மத்திய கிழக்கு நாடுகள் மீது ஈரான் தாக்குதல்



ஈரான் மீதான போர் இன்னும் 10 நாட்கள் தொடர்ந்தால் ஆயுத பற்றாக்குறை ஏற்படும் என அமெரிக்காவின் ராணுவத் தலைமையகமான பென்டகன் அதிபர் டிரம்ப்புக்கு எச்சரிக்கை விடுத்துள்ளது. ஈரான் உடனான அணுசக்தி பேச்சுவார்த்தை தோல்வியடைந்ததை அடுத்து அந்நாடு மீது அமெரிக்கா - இஸ்ரேல் நாடுகளின் கூட்டுப்படை தாக்குதல் நடத்தியது. இதில் ஈரானின் உச்சபட்ச தலைவர் அயத்தோல்லா அலி கமேனி கொல்லப்பட்டார். இதற்கு பதிலடி தரும்விதமாக இஸ்ரேல் மற்றும் மத்திய கிழக்கு நாடுகள் மீது ஈரான் தாக்குதல் நடத்தி வருகிறது.

## மாநிலங்களவை தேர்தல்: வேட்பாளர்களை அறிவித்தது திமுக!



**சென்னை, மார்ச் 05:** தமிழ்நாடு, பீகார் உள்ளிட்ட 10 மாநிலங்களில் காலியாகும் 37 மாநிலங்களவை இடங்களுக்கான தேர்தல் மார்ச் 16-ஆம் தேதி நடைபெற உள்ளது. தமிழ்நாட்டில் இத்தேர்தலுக்கான வேட்புமனு தாக்கல் நாளையுடன் முடிவடைகிறது.

இந்நிலையில் திமுக தனது வேட்பாளர்களை அறிவித்துள்ளது. அதன்படி திமுக தரப்பில் இருந்து திருச்சி சிவா, பேராசிரியர் கான்ஸ்டன்டைன் ரவீந்திரன் வேட்பாளர்களாக அறிவிக்கப்பட்டுள்ளனர். இது தொடர்பாக திமுக வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில்,

"2026 மார்ச் 16 அன்று நடைபெறவிருக்கும் மாநிலங்களவை உறுப்பினர்களுக்கான தேர்தலில், திராவிட முன்னேற்றக் கழகத்திற்கான 4 இடங்களில், இந்திய தேசிய காங்கிரஸ் கட்சிக்கு ஒரு இடமும், தேசிய முற்போக்கு திராவிட கழகத்திற்கு ஒரு இடம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மீதமுள்ள 2 இடங்களில் திராவிட முன்னேற்றக் கழக வேட்பாளர்களாக திருச்சி சிவா, எம்.ஏ., பி.எல்., பேராசிரியர். ஜே.கான்ஸ்டன்டைன்ரவீந்திரன், எம்.இ.எம்.பி, எம்.சி.ஏ,எம்.எல், பி.எச்டி, ஆகியோர் போட்டியிடுவார்கள் என அறிவிக்கப்படுகிறது." என தெரிவிக்கப்பட்டுள்ளது.

தேமுதிக தரப்பில் சுதீஷ் போட்டியிடுவார் என எதிர்பார்க்கப்படுகிறது. காங்கிரஸ் தரப்பில் யார் போட்டியிடுவார் என்பது இன்றிரவு அல்லது நாளை காலைக்குள் தெரியவரும்.

## அரசியலில் ஆதவ் மற்றும் அருண் இயக்கத்தில் விஜய் நடிக்கிறார்

### ஜெயக்குமார் விமர்சனம்

**சென்னை, மார்ச் 05:** விஜய் முதலில் செய்தியாளர்களை சந்திக்க தயாராக வேண்டும். விஜய் அழைத்தும் தவெக பக்கம் எந்த கட்சியும் கூட்டணிக்கு செல்லவில்லை.




தஞ்சாவூர் செங்கிப்பட்டியில் தவெக நிர்வாகிகள் சந்திப்பு கூட்டத்துக்கு கழுத்தில் பச்சை துண்டு எண்ட்ரி கொடுத்த தவெக தலைவர் விஜய் மக்களிடையே உரையாற்றினார்.

இதையடுத்து அதிமுக முன்னாள் அமைச்சர் ஜெயக்குமார், விஜயை கடுமையாக விமர்சித்து பேசினார்.

செய்தியாளர்களிடம் பேசிய ஜெயக்குமார், "விஜய் முதலில் செய்தியாளர்களை சந்திக்க தயாராக வேண்டும். எழுதி வைத்ததை வாசிக்கக் கூடாது. ஆட்சியில் பங்கு என்று விஜய் அழைத்தும் தவெக பக்கம் எந்த கட்சியும் கூட்டணிக்கு செல்லவில்லை

ஸ்கிரிப்ட்டை மனப்பாடம் செய்து படிப்பது ஈஸி. அதை யார் வேண்டுமானாலும் பேசலாம்; அதுவும் விஜய் கைதேர்ந்த நடிகர் என்பதை சொல்ல வேண்டியதில்லை அரசியலில் ஆதவ் மற்றும் அருண் இயக்கத்தில் ஸ்கிரிப்ட் படி விஜய் நடிக்கிறார்" என்று தெரிவித்தார்.




## 'கல்லூரிக்குப் போவதாகத்தான் சொன்னான்' - விஜய்யை காணசென்று விபத்து... மாணவரின் தந்தை கண்ணீர் மல்க பேட்டி

**தஞ்சாவூர், மார்ச் 05:** கல்லூரி சென்று, பின்னர் விஜய்யை பார்ப்பதற்காக வந்துள்ளார்.

இன்று விக்னேஷ் மட்டுமின்ற வெவ்வேறு இடங்களில் மொத்தமாக ஐந்துபேர் காயமடைந்துள்ளனர்.

தஞ்சாவூரில் இன்று தமிழக வெற்றிக் கழகத் தலைவர் விஜய்யின் வாகனத்தைப் பின்தொடர்ந்து சென்று, விபத்தில் சிக்கி திருச்சியைச் சேர்ந்த கல்லூரி மாணவர் படுகாயமடைந்து மருத்துவமனையில் சிகிச்சைப்பெற்று வருகிறார்.

இந்நிலையில் இந்த சம்பவம் குறித்து தனக்கு எதுவும் தெரியாது என்றும், கல்லூரிக்கு செல்வதாகவே கூறிவிட்டு விக்னேஷ் சென்றதாகவும், கல்லூரி தரப்பிலிருந்து தனக்கு எதுவும் தெரிவிக்கப்படவில்லைஎனவும்



விபத்துக்குள்ளான மாணவனின் தந்தை கண்ணீர்மல்க பேட்டியளித்துள்ளார்.

இதுதொடர்பாக பேசிய அவர், "எனக்கு இரட்டை பிள்ளைகள். குமரேஷ், விக்னேஷ். இதில் விக்னேஷிற்குத்தான் அடிப்பட்டுள்ளது. காலையில் பேட்டரி வாகனத்தைதான் கொடுத்து அனுப்பினேன். கல்லூரி செல்வதாக கூறிவிட்டு நண்பனோடு வேறு வண்டியில் இங்கு வந்துள்ளார். எனக்கு 11.30 மணிக்குதான் தெரியும் அடிப்பட்டது.

தலையில் ரத்தக்கசிவு ஏற்பட்டுள்ளது. காலில் எலும்பு முறிந்துள்ளது எனக் கூறுகிறார்கள். 48 மணிநேரம் ஆகும் எனக் கூறுகிறார்கள். மற்றொரு பையனுக்கு (அருண்) முதுகில் அடிப்பட்டுள்ளது. நான் பால்வியாபாரம் செய்கிறேன். கல்லூரியிலிருந்து வந்துள்ளனர்." என தெரிவித்தார்.

தஞ்சாவூரின் செங்கிப் பட்டி அருகேயுள்ள அய்யாசாமப்பட்டியில் இன்று தவெக தேர்தல் பரப்புரை மற்றும் கட்சி நிர்வாகிகள் சந்திப்புக் கூட்டம் நடைபெற்றது. இதில் கலந்துகொள்வதற்காக அக்கட்சியின் தலைவர் விஜய், இன்று திருச்சி விமான நிலையத்தில் இருந்து தஞ்சாவூர் சென்றார். அப்போது விஜய்யின் வாகனத்தை ரசிகர்கள் பலர் இருசக்கர வாகனங்களில் பின்தொடர்ந்தனர்.

திருச்சி - தஞ்சாவூர் தேசிய நெடுஞ்சாலையில் புதுக்குடி அருகே சென்றபோது, விக்னேஷ் ஓட்டிச் சென்ற பைக், பின்னால் வந்தவர்கள் மோதியதில் முன்னால் சென்ற கார் மீது மோதியது. இதில் விக்னேஷுும், பைக்கில் அவருடன் வந்த அவரது நண்பர் அருணும் காயமடைந்தனர்.

தலையில் பலத்த காயமடைந்த விக்னேஷ் உயிருக்கு ஆபத்தான நிலையில் தற்போது தஞ்சாவூரில் உள்ள தனியார் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். அருணுக்கு முதுகில் அடிப்பட்டுள்ளதால் இன்றே அறுவை சிகிச்சை செய்யவேண்டும் என மருத்துவர்கள் தெரிவத்துள்ளனர். இவர்கள் மட்டுமின்றி விஜய்யின் வாகனத்தைத் துரத்திச் சென்ற வெவ்வேறு இடங்களில் நிகழ்ந்த விபத்துகளில் மொத்தம் 5 பேர் காயமடைந்துள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

## மாணவிக்கு பாலியல் தொந்தரவு பள்ளி தலைமை ஆசிரியர் கைது

**தேன்கனிக்கோட்டை, மார்ச் 05:** தேனி மாவட்டம் உத்தமபாளையம் அடுத்த ஆனைமலையான்பட்டி கிராமத்தை சேர்ந்தவர் சுதாகரன் (வயது 51). கிருஷ்ணகிரி மாவட்டம், ஓசூர் அன்னை நகரில் தங்கியிருந்து அஞ்செட்டி தாலுகாவில் உள்ள உரிகம் ஊராட்சி ஒன்றிய துவக்கப்பள்ளியில் தலைமை ஆசிரியராக வேலை செய்து வருகிறார். இவர் 10 வயதுடைய 5-ம் வகுப்பு மாணவிக்கு பாலியல் தொந்தரவு கொடுத்ததாக தெரிகிறது. இதுகுறித்து மாணவி தனது பெற்றோரிடம் கூறினார்.



இது தொடர்பாக மாணவியின் தாய் குழந்தைகள் அவசர கால உதவி எண்ணிற்கும், தேன்கனிக்கோட்டை அனைத்து மகளிர் காவல் நிலையத்திலும் புகார் செய்துள்ளார்.

இதையடுத்து தேன்கனிக்கோட்டை அனைத்து மகளிர் போலீசார் போக்சோ சட்டத்தில் வழக்குப் பதிவு செய்து தலைமையாசிரியர் சுதாகரனை கைது செய்தனர்.

இவர் மீது ஏற்கனவே பல்வேறு புகார்கள் வந்ததால் கடந்த டிசம்பர் மாதம் தான் இந்த பள்ளிக்கு இடமாற்றம் செய்யப்பட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# சுற்றுலா: கோத்தகிரி போறீங்களா? அங்கு பார்க்க வேண்டிய அருமையான இடங்கள் இதோ!

கோத்தகிரி நீலகிரி மலைப் பகுதிகளுக்கு மத்தியில் இருக்கும் ஓர் இடம். பச்சைப் பசேல் என்று பசுமையான சூழல். கோவையில் இருந்து நீலகிரி மாவட்டம் போகும் வழியில் உள்ளது.

1. கேத்தரின் நீர்வீழ்ச்சி -

கோத்தகிரியில் இருக்கும் கேத்தரின் நீர்வீழ்ச்சி அழகான இடம். நீலகிரி மலையின் இரண்டாவது மிக உயர்ந்த நீர் வீழ்ச்சி ஆகும். இது இரண்டு அடுக்குகள் கொண்ட நீர் வீழ்ச்சி ஆகும். சிறந்த இடம்...

கோத்தகிரி சுற்றுலாத் தலங்களில் ஒன்றான கேத்தரின் நீர்வீழ்ச்சி, மைசூர் மாவட்ட ஆட்சியர் ஜி.டி. காக்பர்னின் துணைவியார் பெயரிடப்பட்டது. இது கோத்தகிரிக்கு அருகில் அமைந்துள்ள ஒரு கண்கவர் நீர்வீழ்ச்சியாகும். 250 அடிக்கு மேல் உயரத்தில் இருந்து விழும் இந்த அழகான நீர்வீழ்ச்சி, நீலகிரி மலைகளின் பசுமையான பசுமைக்கு மத்தியில் ஒரு மயக்கும் காட்சியை வழங்குகிறது.

2. லாங் வுட் லோலா

மலையேற்றம் பயணிகளை ஈர்க்கும் இடம் இது. இங்கே பல்வேறு தாவரங்கள் மற்றும் வனவிலங்குகளை பார்க்கலாம். வனக்காப்பகம் இருப்பதால் பயமில்லை.

3. ரங்கசாமி சிகரம்

தினம் தினம் நகர வாழ்க்கையில் அலுத்து சலித்து போனவர்கள் இயற்கை அன்னையின் அற்புதமான படைப்புகளைக் காணலாம். அதுவும் புகைப்படக் கலைஞர்களுக்கு சிறந்த இடம் இது. அவர்களுக்கு அந்த காட்சிகள் படம் எடுக்க ஆர்வமாக இருக்கும்.

4. கோடநாடு வியூ பாயின்ட்

கோத்தகிரியின் மிகவும் பிரபலமான ஒன்று கோடநாடு காட்சி முனை ஆகும். அங்கிருந்து நீலகிரி மலைகளின் அழகை ரசிக்கலாம்.



முக்கிய கோத்தகிரி நகரத்தில் இருந்து சுமார் 16 கிமீ தொலைவில் உள்ளது.

கோடநாடு வியூ பாயிண்ட் அழகிய நீலகிரி மலைகளின் மூச்சடைக்கக்கூடிய பரந்த காட்சிகளை வழங்குகிறது, இது மிகவும் அழகிய பாதைகளில் ஒன்றாக புகழ்பெற்றது, இது இயற்கை ஆர்வலர்கள் கட்டாயம் பார்க்க வேண்டிய விடுமுறை இடமாக அமைகிறது.

5. ஜான் சல்லிவன் நினைவுச் சின்னம்

ஜான் சல்லிவன் நினைவுச் சின்னம் 1855 இல் காலமான ஜான் சல்லிவன் நினைவாகக் கட்டப்பட்டது. அவர் நீலகிரி மலைகளின் வளர்ச்சி மற்றும் தேயிலைத் தோட்டங்களுக்கு காரணமாக இருந்தார். அவர் மேற்கொண்ட கடின உழைப்பை இந்த நினைவிடத்தை பார்வையிடுவதின் மூலம் அறிந்து கொள்ளலாம்.

6. எல்க் நீர் வீழ்ச்சி

கோத்தகிரியில் இருந்து ஏழு கிலோமீட்டர் தொலைவில் உயிலத்தி கிராமத்திற்கு அருகில் அமைந்துள்ளது. நீர் வீழ்ச்சியை சுற்றியுள்ள பகுதிகளின் பசுமை வசீகரிக்கும் அழகு என்பதில் சந்தேகமில்லை.

கோத்தகிரி அதன் அற்புதமான மலையேற்றம் பாதைகளால் சாகசப் பயணிகளின் அருமையான தேர்வாக இருக்கும். ஓடிவரும் ஆறுகள் தேயிலைத் தோட்டங்கள் பசுமையான சூழல் நம் மனதுக்கு இதமாக இருக்கும்.

கோத்தகிரி செல்ல சிறந்த மாதங்கள் டிசம்பர் முதல் மே மாதம் வரை. குளிர் காலத்தில் வானிலை இன்னும் பிரமாதமாக இருக்கும்.

நீலகிரியின் முடுபனிசிகரங்களுக்கு மத்தியில் அமைந்திருக்கும் கோத்தகிரி, இயற்கை ஆர்வலர்களுக்கு ஒரு அமைதியான புகலிடமாக வெளிப்படுகிறது, அதன் அற்புதமான நிலப்பரப்புகள் மற்றும் முக்கிய வனப்பகுதிகள் பயணிகளை கவர்ந்திழுக்கின்றன.

உயிலட்டி நீர்வீழ்ச்சி: பசுமையான தாவரங்களுக்கு மத்தியில் அமைந்திருக்கும் உயிலடி நீர்வீழ்ச்சி ஒரு சுவாரஸ்யமான ஆச்சரியமாகும். படிகளால் ஆன கற்பாறைகள் வழியாக நீர் கீழே விழுகிறது, இது அமைதியான மற்றும் அழகிய காட்சியை உருவாக்குகிறது, நிதானமான சுற்றுச்சூழல் அமைப்பை உருவாக்குகிறது மற்றும் சுத்தமான ஓய்வு அளிக்கிறது.

குயின் நீர்வீழ்ச்சி: தமிழ்நாட்டின் நீலகிரி மாவட்டம் கோத்தகிரி தாலுகாவில் மறைந்திருக்கும் ஒரு மறைக்கப்பட்ட ரத்தினம் குயின் நீர்வீழ்ச்சி. இந்த மயக்கும் நீர்வீழ்ச்சி, பாறைகளின் பிளவுகள் வழியாக நீர் கீழே விழுவதை அழகாகக் காட்டுகிறது. பகல்நேர சுற்றுலாவிற்கு பிரபலமான இடமான இது, கோத்தகிரியிலிருந்து சுமார் 7 கி.மீ தொலைவில் அமைந்துள்ளது.

பிளாக் தண்டர் தீம் பார்க் : பிளாக் தண்டர் தீம் பார்க் என்பது அட்ரினலின் பிரியர்களுக்கும், குடும்பத்திற்கும் ஒரு சிலிர்ப்பூட்டும் சுற்றுலாத் தலமாகும். கோத்தகிரிக்கு அருகில் அமைந்துள்ள இந்த பிரம்மாண்டமான பூங்கா, நீர் சவாரிகளை விரும்பாதவர்களுக்கு பல்வேறு வகையான அட்ரினலின்-பம்பிங் சவாரிகள், நீர் சறுக்குகளை வழங்குகிறது.

லாங்வுட் ஷோலா : லாங்வுட் ஷோலா என்பது ஒரு அழகிய பசுமையான காடு, இது தீண்டப்படாத அழகின் மத்தியில் அமைதியான பின்வாங்கலை வழங்குகிறது. இந்த வனப்பகுதி பல்வேறு வகையான தாவரங்கள் மற்றும் விலங்கினங்களுக்கும், உள்ளூர் தாவர இனங்களுக்கும், பறக்கும் நரி மற்றும் காட்டெருமை போன்ற விலங்குகளுக்கும் தாயகமாகும்.

கில்-கோட்டகிரி : கோத்தகிரியிலிருந்து ஆறு மைல் வடகிழக்கில் அமைந்துள்ள கில்-கோட்டகிரி ஒரு வினோதமான கிராமம், தினசரி கூட்ட நெரிசலில் இருந்து அமைதியான ஓய்வு அளிக்கிறது. கோத்தகிரியில் பார்வையிட இது ஒரு சிறந்த இடம். தேயிலைத் தோட்டங்கள் தேயிலை இலைகளை வாடுதல், உருட்டுதல், நொதித்தல் மற்றும் உலர்த்துதல் போன்ற தொலைந்து போன நடைமுறைகளை வெளிச்சம் போட்டுக் காட்டுகின்றன.

# வேலைவாய்ப்பு கார்னர்

## நாமக்கல் மாவட்ட வங்கி ஒருங்கிணைப்பாளர் காலிப் பணியிடங்கள்

தமிழ்நாடு மாநில ஊரக மற்றும் நகர்ப்புற வாழ்வாதார இயக்கம் சார்பில், நாமக்கல் மாவட்ட இயக்க மேலாண்மை அலகின் கீழ் மாவட்ட வங்கி ஒருங்கிணைப்பாளர் பணியிடத்தை நிரப்ப விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

நாமக்கல் மாவட்டத்தில் தமிழ்நாடு ஊரக வாழ்வாதார இயக்கம் (மகளிர் திட்டம்) கீழ் செயல்படும் மகளிர் சுய உதவிக்குழுக்கள் மற்றும் வங்கிப் பணிகள் தொடர்பான அனைத்து நடவடிக்கைகளையும் ஒருங்கிணைப்பதற்காக இந்த புதிய பணியிடம் உருவாக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம், சென்னை வழங்கிய அறிவுரையின் பேரில், மாவட்ட அளவில் அரசு திட்டங்களை திறம்பட செயல்படுத்தவும், பிற துறைகளுடன் ஒருங்கிணைந்து மாவட்ட வாழ்வாதார மற்றும் கடன் மேலாண்மை நிறுவனத்தை அமைக்கவும், மனிதவள வெளிமுகமை நிறுவனம் (அவுட்சோர்சிங் எச்.ஆர். ஏஜென்சி) மூலம் ஓய்வு பெற்ற வங்கி அதிகாரியை தேர்வு செய்ய அறிவிக்கப்பட்டுள்ளது. காலிப்பணியிடம் ஒன்று. மாத ஊதியம் ரூ.50,000.

இந்தப் பணிக்கு விண்ணப்பிக்க விரும்பும் தகுதியுடையவர்கள், மார்ச் 6 அன்று மாலை 5.45 மணிக்குள் விண்ணப்பங்களை நேரிலோ அல்லது அஞ்சல் மூலமாகவோ அனுப்ப வேண்டும் என கலெக்டர் துர்காமூர்த்தி கேட்டுக்கொண்டுள்ளார்.

காலதாமதமாக பெறப்படும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி மேலாளர், மாவட்ட மகமை, பொன்விழா நகர், வகுரம்பட்டி, நாமக்கல் மாவட்டம் 637001. மின்னஞ்சல்: nklmagamai@yahoo.in. தொலைபேசி: 9789572877.

## நீலகிரியில் கோடைக்கால காட்டுத்தீ தடுப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கை: கலெக்டர் லட்சுமி பவ்யா ஆலோசனை

**நீலகிரி, மார்ச் 5:**

நீலகிரி மாவட்டத்தில் கோடைக்காலத்தில் ஏற்படும் காட்டுத்தீ மற்றும் குடிநீர் பற்றாக்குறை தொடர்பான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து மாவட்ட அளவிலான ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.

நீலகிரி கலெக்டர் அலுவலக கூடுதல் வளாகத்தில் நடைபெற்ற கூட்டத்திற்கு கலெக்டர் லட்சுமி பவ்யா தண்ணீரு தலைமையேற்றார். கூட்டத்தில் கலெக்டர் தெரிவித்ததாவது: மார்ச், ஏப்ரல், மே மாதங்களில் குடிநீர் இருப்பு, தேவைகள் மற்றும் விநியோகம் குறித்து துல்லியமான கணக்கீடு செய்ய வேண்டும். நகராட்சி, பேரூராட்சி, ஊராட்சி பகுதிகளில் மக்கள் தொகைக்கு ஏற்ப குடிநீர் வழங்கல் சீராக இருக்க வேண்டும். தேவையெனில் மாற்று குடிநீர் ஆதாரங்களை கண்டறிந்து, லாரிகள் மூலம் குடிநீர் விநியோகிக்கும் ஏற்பாடுகளையும் முன்னெடுக்க வேண்டும்.

நகர்ப்புற, கிராமப்புறங்களில் தண்ணீர் பற்றாக்குறை ஏற்படும் வாய்ப்புள்ள பகுதிகளை முன்கூட்டியே ஆய்வு செய்து, மாற்று ஏற்பாடுகளை தயார் நிலையில் வைத்திருக்க வேண்டும். கோடைக்காலத்தில் சுற்றுலாப் பயணிகள் அதிகம் வருகை தருவதால், குடிநீர் வழங்கும் இயந்திரங்கள் அனைத்தும் பராமரிக்கப்பட்டு பயன்பாட்டில் இருக்க வேண்டும் என்றும் அவர் அறிவுறுத்தினார்.

கடந்த ஐந்து ஆண்டுகளில் கோடைக்காலங்களில் காட்டுத்தீ ஏற்பட்ட பகுதிகளை தொடர்ந்து கண்காணிக்க வேண்டும். தீ தடுப்பு கோடுகள் அமைத்தல், வனப்பகுதிகளில் செல்லும் உயர் மின்னழுத்த கம்பிகளை ஒட்டியுள்ள மரக்கிளைகள், புதர்களை அகற்றுதல் போன்ற பணிகளை மேற்கொள்ள வேண்டும். காட்டுத்தீ ஏற்பட்டால், வனப்பகுதிகளில் வசிக்கும் மக்களை பாதுகாப்பாக வெளியேற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும்.

வன விலங்குகளின் குடிநீர் தேவையை பூர்த்தி செய்ய காடுகளில் உள்ள தடுப்பணைகள் மற்றும் குட்டைகளில் தண்ணீர் நிரப்ப ஏற்பாடு செய்ய வேண்டும் என்றும் அறிவுறுத்தினார்.

## 11 இடங்களில் ரூ.30 கோடியில் முதல்வர் படைப்பகம் நவீன நூலகங்கள்: ஸ்டாலின் திறந்தார்

**சென்னை, மார்ச் 5:**

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் மற்றும் சென்னை மாநகராட்சி சார்பில் ரூ.33.85 கோடி செலவில் 11 முதல்வர் படைப்பகங்கள் மற்றும் நவீன நூலகங்களை மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைத்தார்.

சென்னை மாநகராட்சி சார்பில் ரூ.10.96 கோடி செலவில் கட்டப்பட்டுள்ள முதல்வர் விளையாட்டரங்கம், சென்னை நடுநிலைப் பள்ளிக் கட்டடம் மற்றும் அம்பேத்கர் கூட்டுறவு பண்டகச்சாலை நியாய விலைக் கடைகள் ஆகியவற்றையும் திறந்து வைத்தார்.

12.74 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள முதல்வர் படைப்பகம் மற்றும் நவீன நூலகம், அசோக் நகர் முதல்வர் படைப்பகத்திலிருந்து காணொலிக் காட்சி வாயிலாக 16.87 கோடி ரூபாய் செலவில் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் சார்பில் 9 முதல்வர் படைப்பகங்கள் கொண்ட நவீன நூலகங்களை (திரு.வி.க. நகர் சட்டமன்றத் தொகுதியில் உள்ள ஓட்டேரி, சுப்புராயன் தெரு 3.05 கோடி ரூபாய், ஜமாலியா மங்களபுரம், புளியந்தோப்பு வெங்கடேசபுரம், பட்டாளம் பக்தவச்சலம் பூங்கா, ஆர். கே.நகர் சட்டமன்றத் தொகுதி மேயர் பாசுதேவ் தெரு, எழும்பூர் சட்டமன்ற தொகுதி, சூளை, இராட்லர் தெரு, பெரம்பூர் சட்டமன்ற தொகுதி, எருக்கஞ்சேரி, ராயபுரம் சட்டமன்றத் தொகுதி, சிந்தனைச் சிற்பி சிங்காரவேலர் நினைவிடம், மயிலாப்பூர் சட்டமன்ற தொகுதி, ராஜா அண்ணாமலைபுரம், துறைமுகம், கொண்டித்தோப்பு அம்மன் கோவில் தெரு) சென்னை நடுநிலைப் பள்ளியில் புதியதாக கட்டப்பட்டுள்ள முதல்வர் படைப்பகம் மற்றும் நவீன நூலகம், சென்னை மாநகராட்சி சார்பில் 4.24 கோடி செலவில் முதல்வர் படைப்பகம் கொண்ட நவீன நூலகம் ஆகியவற்றை திறந்து வைத்த முதல்வர், அவற்றை மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் பயன்பாட்டிற்கு அர்ப்பணித்தார்.

மேலும், சென்னை மாநகராட்சி சார்பில் 10 கோடியே 95 லட்சத்து 70 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள முதல்வர் விளையாட்டரங்கம், சென்னை நடுநிலைப் பள்ளிக் கட்டடம் மற்றும் அம்பேத்கர் கூட்டுறவு பண்டகச்சாலை நியாய விலைக் கடைகள் ஆகியவற்றையும் திறந்து வைத்தார்.

சென்னை, அசோக் நகரில் 7,874 சதுர அடி கட்டடப் பரப்பளவில் தரைத்தளம், முதல் தளம் மற்றும் மாடிப்படி கூரைத்தளங்களுடன் குளிரூட்டப்பட்ட வசதியுடன் கட்டப்பட்டுள்ளது முதல்வர் படைப்பகம் மற்றும் நவீன நூலகம், மாற்றுத்திறனாளிகளுக்கான நவீனக் கழிப்பறை வசதிகள், திறந்தவெளித் தளத்தில், மேல்மட்ட உயரப்பகுதி, மின்தூக்கி அறை கூரை, 2000 லிட்டர் கொள்ளவு கொண்ட மேல்நிலை குடிநீர் தொட்டி உள்ளிட்ட பல்வேறு வசதிகளுடன் இது கட்டப்பட்டுள்ளது.

## கடலூரில் மக்கள் தொகை கணக்கெடுப்பு உதவியாளர்களுக்கு பணி நியமன ஆணை: கலெக்டர் சிபி ஆதித்யா வழங்கினார்

**கடலூர், மார்ச் 5:**

கடலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் 16வது தேசிய மக்கள்தொகை கணக்கெடுப்பு பணி மேற்கொள்ள முற்றிலும் தற்காலிகமான ஒப்பந்த முறையில் தேர்வு செய்யப்பட்ட தொழில்நுட்ப உதவியாளர்கள் மற்றும் பல்நோக்கு பணியாளர்களுக்கு கலெக்டர் சிபி ஆதித்யா செந்தில்குமார் பணி நியமன ஆணை வழங்கினார்.

அப்போது அவர் கூறியதாவது:

16வது தேசிய கணக்கெடுப்பானது 2027ஆம் ஆண்டுக்கான மக்கள்தொகை கணக்கெடுப்பு பணியாகும். இந்த கணக்கெடுப்பின் மூலம் மக்களின் எண்ணிக்கை, வீடமைப்பு, கல்வித்தரம், தொழில், இடம்பெயர்வு மற்றும் சமூக-பொருளாதார நிலை பற்றிய தகவல்கள் சேகரிக்கப்படுகின்றன. கணக்கெடுப்பாளர்கள் ஒவ்வொரு இல்லத்திற்கும் சென்று தகவல்களை டிஜிட்டல் சாதனங்கள் மூலம் பதிவு செய்வார்கள்.

சேகரிக்கப்படும் தகவல்கள் அரசு நலத்திட்டங்கள், அடிப்படை வசதிகள் மேம்பாடு மற்றும் வளங்கள் பகிர்வு ஆகியவற்றில் முக்கிய பங்கு வகிக்கும். மக்கள் அளிக்கும் தகவல்கள் ரகசியமாக பாதுகாக்கப்படும்.

இது அங்கீகாரம் பெற்ற பகுதி அமைப்பு மற்றும் மக்கள்தொகை கணக்கெடு என இரண்டு கட்டங்களாக நடத்தப்படுகிறது. 2027 கணக்கெடுப்பு முழுமையாக டிஜிட்டல் முறையில் நடத்தப்படவுள்ளது.

ஸ்மார்ட் போன் செயலி மற்றும் இணையத்தளம் வழியாக தரவுகள் சேகரிக்கப்படும்.

கடலூர் மாவட்டத்தில் மக்கள் தொகை கணக்கெடுப்பு மேற்கொள்வதற்கு 39 தொழில்நுட்ப உதவியாளர்கள் மற்றும் 2 பல்நோக்கு பணியாளர்கள் ஆகியோர் வெளிமுகமை மூலம் முற்றிலும் தற்காலிகமான ஒப்பந்த முறையில் மாவட்ட ஆட்சியர் அலுவலகம், மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சி மற்றும் வட்டாட்சியர் அலுவலகம் போன்ற அலுவலகங்களின் தலைமை இடத்தில் பணிபுரிய கல்வித் தகுதியின் அடிப்படையில் பணியாளர்களை தமிழ்நாடு தேசிய ஊரக/நகர்புற வாழ்வாதார இயக்கம், மாவட்ட மேலாண்மை அலகு, திட்ட இயக்குநர் மூலம் தேர்வு செய்யப்பட்டவர்களுக்கு இன்றைய தினம் பணிநியமன ஆணை வழங்கப்பட்டது.

இவ்வாறு அவர் கூறினார்.

தமிழ்நாடு இ பேப்பர்.காம்
www.tamilnaduepaper.com
இ பேப்பரை தினமும் இலவசமாக பெற விரும்புபவர்கள்.
"welcome Tamilnadu" என்று கீழ் உள்ள வாட்ஸ்ஆப் எண்ணிற்கு அனுப்பி வையுங்கள். தங்களின் அமைப்பு செய்திகள் தங்கள் பகுதியில் நடைபெறும் நிகழ்ச்சிகளை வெளியிட செய்தி மற்றும் புகைப்படத்தை கீழ்உள்ள வாட்ஸ்ஆப்பிற்கு அனுப்புங்கள்
94452 65389

## தமிழக அரசு தலையிட அரசு ஊழியர் சங்கம் கோரிக்கை

**சென்னை, மார்ச் 5:**

வருவாய்த்துறை சங்கங்களின் கூட்ட மைப்பு கடந்த 8 நாட்களாக பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து போராட்டத்தில் ஈடுபட்டு வரும் நிலையில், தமிழ்நாடு அரசு உடனடியாக தலையிட்டு தீர்வு காண வேண்டும் என்று தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் வலியுறுத்தியுள்ளது. இந்த சங்கத்தின் மாநிலத் தலைவர் மு.பாஸ்கரன் மற்றும் பொதுச் செயலாளர் வெ.சோமசுந்தரம் வெளியிட்டுள்ள அறிக்கையில், பணிப் பாதுகாப்புச் சட்டம் அமல்படுத்துதல், அனைத்து நிலை ஊழியர்களுக்கும் மேம்படுத்தப்பட்ட ஊதியம் வழங்குதல், கிராம உதவி யாளர்களுக்கு காலமுறை ஊதியம் வழங்குதல் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகள் முன்வைக்கப் பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், காலிப் பணியிடங்களை வெளிமுகமை மூலம் நிரப்புவதை கைவிடுதல், கருணை அடிப்படை யிலான பணியமர்த்தலின் அளவை உயர்த்துதல் உள்ளிட்ட கோரிக்கைகளும் இதில் இடம்பெற்றுள்ளன. போராட்டத்தில் ஈடுபட்டுள்ள நிர்வாகிகளை அரசு அழைத்துப் பேசி சுமூக தீர்வை எட்ட வேண்டும் என்றும், இதற்கு ஆதரவாக மார்ச் 4 ஆம் தேதி மாநிலம் முழுவதும் கண்டன ஆர்ப்பாட்டங்கள் நடத்தப்படும் என்றும் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் அறிவித்து உள்ளது.

## பாஜகவை விமர்சிக்க தைரியம் இருக்கிறதா?: விஜய்க்கு கேள்வி



**வேலூர், மார்ச் 5:**

திமுக தேர்தல் அறிக்கை தயாரிப்பு பணிகள் வேகமாக நடைபெற்று வருவதாக கட்சியின் செய்தி தொடர்பாளர் டி.கே.எஸ்.இளங்கோவன் தெரி வித்துள்ளார்.

வேலூர், ராணிப்பேட்டை, திருப்பத் தூர் மற்றும் திருவண்ணாமலை மாவட்டங்களில் பொது மக்கள், தொழிலதிபர்கள், விவசாயிகள் மற்றும் தொழிலாளர்களைச் சந்தித்து கருத்துகளை சேகரித்த பின்னர் செய்தியாளர்களிடம் அவர் பேசினார். விரை வில், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் ஒப்புதலுடன் தேர்தல் அறிக்கை வெளியிடப்படும் என்றும் கூறினார். மேலும், நடிகர் விஜய் அரசியலுக்கு வந்தது மக்கள் நலப் பணிகளுக்காக அல்ல, முதலமைச்சராகும் நோக்கத் திற்காக மட்டுமே என குற்றம்சாட்டிய அவர், பாஜக-வை திறந்தவெளியில் விமர்சிக்க விஜய்க்கு தைரியம் உள்ளதா என கேள்வி எழுப்பினார்.

# காட்பாடி சஞ்சீவராயர் மலை உச்சியில் புதிய காட்சிமுனை: வேலூர் கலெக்டர் சுப்புலெட்சுமி திறந்து வைத்தார்





**வேலூர், மார்ச் 5:**

வேலூர் மாவட்டம், காட்பாடி அருகில் உள்ள பிரம்மபுரத்தில் சஞ்சீவிராயர் மலையில் அமைந்துள்ள ஸ்ரீ பிரசன்ன வெங்கடேச பெருமாள் கோயில் மிகவும் பழமையான சுயம்புமூர்த்தி திருத்தலமாகும். இக்கோயில் சஞ்சீவிராயர் மலையின் உச்சியில் அமைந்துள்ளது. இங்கு பக்தர்கள் மலைப்பாதை வழியாகவோ அல்லது படிக்கட்டுகள் வழியாகவோ செல்வதற்கு வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளது. புரட்டாசி சனிக்கிழமைகள் மற்றும் சிறப்பு நாட்களில் திருக்கல்யாண உற்சவங்கள் மற்றும் வழிபாடுகள் இங்கு சிறப்பாக நடைபெறும்.

சுற்றுலா துறையின் சார்பில் காட்பாடி பிரம்மபுரம் ஊராட்சியில் புதிய காட்சிமுனை அமைக்க வேண்டும் என அமைச்சர் துரைமுருகன் கோரிக்கை வைத்ததை தொடர்ந்து ரூ 1.00 கோடி மதிப்பீட்டில் வேலூர் மாவட்டம், காட்பாடி வட்டம், சஞ்சீவராயர் மலையில் புதிய காட்சிமுனை அமைக்க நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. அதனடிப்படையில் காட்பாடி வட்டம், பிரம்மபுரம், ஸ்ரீ பிரசன்ன வெங்கடேச பெருமாள் கோயில் சஞ்சீவராயர் மலை உச்சியில் ரூ.93.09 இலட்சம் மதிப்பில் அமைக்கப்பட்டுள்ள புதிய காட்சிமுனையை வேலூர் கலெக்டர் வே.இரா.சுப்புலெட்சுமி திறந்து வைத்தார். இந்த காட்சி முனை வேலூர் மக்களுக்கு ஒரு சிறந்த பொழுதுபோக்கு இடமாகவும் சமூகமையமாகவும் விளங்கும், மேலும் நமது சமூக ஆரோக்கியத்தையும், இப்பகுதிகள் சுற்று சூழலை மேம்படுத்தும், மேலும் இப்பகுதியில் குடிநீர், நீர் வளமும் மேம்படுத்தப்படுகிறது. இப்பணிகள் தற்போது 100 சதவீதப் பணிகள் முடிவுற்று மக்கள் பயன்பாட்டிற்காக கொண்டுவரப்பட்டுள்ளது.

இந்நிகழ்ச்சியில் காட்பாடி ஒன்றியக்குழுத்தலைவர் வே.வேல்முருகன், ஒன்றியக்குழுத் துணைத்தலைவர் எஸ்.சரவணன், ஒன்றியக்குழு உறுப்பினர் வி.இலக்கிய சந்துரு, பிரம்மபுரம் ஊராட்சி மன்ற தலைவர் ஜிராதாகிருஷ்ணன், மாநகராட்சி மாமன்ற உறுப்பினர் விமலா சீனிவாசன், வேலூர் மாவட்ட சுற்றுலா அலுவலர் (பொ) ம.முத்துசாமி உட்பட பலர் கலந்து கொண்டனர்.

## க்ரைம் கார்னர்

### போலி ஆவணங்கள் மூலம் இந்திய பாஸ்போர்ட்: விமானத்தில் இலங்கைக்கு தப்ப முயன்ற பெண் கைது

**சென்னை, மார்ச் 5:**

இலங்கை செல்லும் விமானத்தில் பயணிக்க சென்னை விமான நிலையத்துக்கு வந்த பெண் ஒருவர் மீது போலீஸாருக்கு சந்தேகம் எழுந்தது. அவரை சென்னை மத்திய குற்றப்பிரிவில் உள்ள போலி பாஸ்போர்ட் புலனாய்வுப் பிரிவு போலீஸார் விசாரித்தனர். அப்போது, அந்த பெண்ணின் பெயர் பேபி லோனா (48). இலங்கை நாட்டுக் குடியுரிமை பெற்றவர். இந்தியரான முஸ்தாக்அகமது என்பவரை திருமணம் செய்து கொண்டுள்ளார். 2015-ம் ஆண்டு இலங்கையிலிருந்து விமானம் மூலம் இந்தியா வந்து அகதியாக தஞ்சாவூர் மாவட்டம், திருவிடைமருதூரில் வாடகை வீட்டில் கணவருடன் வசித்து வந்துள்ளார். பின்னர் அவர் இலங்கை பிரஜை என்பதை மறைத்து ஆதார் கார்டு, பான் கார்டு மற்றும் வாக்காளர் அடையாள அட்டையைப் பெற்றுள்ளார். அதை அடிப்படையாக வைத்து, இந்தியர் என இந்திய பாஸ்போர்ட் பெற்று தற்போது இலங்கைக்கு தப்ப முயன்றது தெரியவந்தது. அவரை சென்னை பன்னாட்டு விமான நிலைய வெளிநாட்டவர் பதிவு மண்டல அலுவலர் பிடித்து போலீஸாரிடம் ஒப்படைத்துள்ளார். இதையடுத்து பேபி லோனாவை போலீஸார் நேற்று முன்தினம் கைது செய்து சிறையில் அடைத்தனர்.

### சென்னையிலிருந்து டெல்லி சென்ற விமானத்தில் பணிப் பெண்ணிடம் பாலியல் அத்துமீறல்

**சென்னை, மார்ச் 5:**

திருவள்ளூர் நகராட்சியின் 6-வது வார்டு திமுக கவுன்சிலராக இருப்பவர் பிரபாகரன். இவரது நண்பர் தியாகு, திருவள்ளூர் மேற்கு மாவட்ட அதிமுக பிரமுகராக உள்ளார். இருவரும் கடந்த மாதம் 25-ம் தேதி, சென்னையிலிருந்து டெல்லிக்கு விமானத்தில் சென்றுள்ளனர். பயணத்தின்போது இருவரும் மதுபோதையில் இருந்ததாகக் கூறப்படுகிறது. அப்போது விமானத்தில் பணியில் இருந்த 25 வயதுடைய பணிப்பெண்ணின் ஊர் பெயரை கேட்டு தொடர்ந்து கேலி செய்ததாகக் கூறப்படுகிறது. ஒரு கட்டத்தில் எல்லை மீறி அந்த பெண்ணைத் தொட்டு பாலியல் அத்துமீறலில் ஈடுபட்டதாகவும் தெரிகிறது. அந்த பெண், விமானம் டெல்லி சென்றடைந்ததும் தனது உயர் அதிகாரிகளிடம் தெரிவித்துள்ளார். அவர்கள் சென்னை மீனம்பாக்கம் மகளிர் காவல் நிலையத்தில் புகார் அளித்தனர். இதையடுத்து, பிரபாகரன் மற்றும் தியாகுவிடம் போலீஸார் விசாரித்தனர். மேலும், அடுத்தகட்ட விசாரணைக்கு நேரில் ஆஜராக வேண்டும் என அறிவுறுத்தி உள்ளனர். ஆனால், இருவரும் ஆஜராகவில்லை. அதைத்தொடர்ந்து, அவர்கள் மீது பாலியல் துன்புறுத்தல் மற்றும் பெண்கள் வன்கொடுமை தடுப்புச் சட்டம் ஆகிய பிரிவுகளின் கீழ் வழக்குப்பதிவு செய்தனர். இதற்கிடையே, இருவரையும் கைது செய்து விசாரித்து வருகின்றனர்.

### வியாபாரியிடம் பட்டப்பகலில் துணிகரம்: கத்தி முனையில் 4 கிலோ தங்கம் கொள்ளை

**விழுப்புரம், மார்ச் 5:**

விழுப்புரம், விராட்டிக்குப்பம் பாதை ஜனகராஜ் கார்டன் பகுதியைச் சேர்ந்தவர் ராஜமாணிக்கம் (43). தங்க நகை பட்டறை நடத்தி வருகிறார். இவர் சென்னை சவுகார் பேட்டையில் தங்கக் கட்டிகளை வாங்கி வந்து, ஆபரண நகைகளாக தயாரித்து கொடுக்கும் பணியில் ஈடுபட்டுள்ளார். இவ்வாறு தயாரிக்கப்பட்ட தோடு, ஜிமிக்கி, சங்கிலி, வளையல் உள்ளிட்ட ஆபரண நகைகளுடன், சென்னைக்கு செல்வதற்காக விழுப்புரம் ரயில் நிலையம் நோக்கி, தனது இருசக்கர வாகனத்தில் நேற்று காலை புறப்பட்டுச் சென்றார். பெருமாள் கோயில் தெருவில் கோட்டை விநாயகர் கோயில் அருகே வந்தபோது, 2 இருசக்கர வாகனத்தில் முகமூடி அணிந்து வந்த 5 பேர் ராஜமாணிக்கத்தை வழிமறித்து கத்தியைக் காட்டி மிரட்டியுள்ளனர். வழிப்பறி செய்யும்போது மக்களிடம் கொள்ளையர்கள் சிக்கினால் அவர்களை பாதுகாக்க, கூடுதலாக 2 பைக்குகளில் ஆயுதங்களுடன் 4 பேர் வந்துள்ளதாகத் தெரிகிறது. புகாரின் பேரில் மேலும் போலீஸார் தொடர் விசாரணை நடத்தி வருகின்றனர்.

## விளையாட்டு செய்திகள்

### நெல்லை பிரண்ட்ஸ் கிளப் சார்பில் சென்னையில் மார்ச் 7-ல் மாநில வாலிபால் போட்டி

**சென்னை, மார்ச் 5:**

நெல்லை பிரண்ட்ஸ் கிளப் சார்பில் அண்ணாச்சி பி.ஜான் மற்றும் ஏ.கே.சித்திரைபாண்டியன் நினைவு மாநில அளவிலான வாலிபால் போட்டி சென்னை எழும்பூரில் உள்ள மேயர் ராதாகிருஷ்ணன் ஹாக்கி விளையாட்டரங்கில் வரும் 7-ம் தேதி முதல் 12-ம் தேதி வரை நடைபெறுகிறது. இதில் ஆடவர் பிரிவில் சென்னை எஸ்ஆர்எம், கோவை கற்பகம் பல் கலைக்கழகம், சென்னை டி.ஜி. வைஷ்ணவா கல்லூரி, திருச்சி ஜமால் முகமது கல்லூரி, சென்னை பனிமலர் பொறியியல் கல்லூரி, சென்னை லயோலா கல்லூரி, சென்னை ஜேப்பியார் கல்லூரி, சென்னை நியூ கல்லூரி ஆகிய 8 அணிகள் கலந்து கொள்கின்றன. மகளிர் பிரிவில் சென்னை ஐசிஎஃப், எஸ்ஆர்எம், டாக்டர் சிவந்தி கிளப், தமிழ்நாடு காவல்துறை அணி, எஸ்டிஏடி அணி ஆகிய 5 அணிகள் பங்கேற்கின்றன. போட்டிகள் லீக் மற்றும் நாக் அவுட் முறையில் நடைபெறுகின்றன. அனைத்து போட்டிகளும் மாலை 5 மணிக்கு தொடங்கும். இந்தத் தொடரின் மொத்த பரிசுத் தொகை ரூ.4 லட்சம் ஆகும். ஆடவர் பிரிவில் சாம்பியன் பட்டம் வெல்லும் அணிக்கு ஏ.கே.சித்திரைபாண்டியன் நினைவு கோப்பையும் பரிசுத் தொகையும் வழங்கப்படும். மகளிர் பிரிவில் பட்டம் வெல்லும் அணிக்கு பி.ஜான் நினைவு கோப்பையும், பரிசுத் தொகையும் வழங்கப்படும்.

### இந்திய மகளிர் கிரிக்கெட் அணி லாரஸ் விருதுக்கு பரிந்துரை

**மாட்ரிட், மார்ச் 5:**

விளையாட்டு உலகின் மிக உயர்ந்த விருதான லாரஸ் விருதுக்கு இந்திய மகளிர் கிரிக்கெட் அணியின் பெயர் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. கடந்த ஆண்டு நடைபெற்ற ஐசிசி 50 ஓவர் உலகக் கோப்பை கிரிக்கெட் தொடரில் ஹர்மன்பிரீத் கவுர் தலைமையிலான இந்திய அணி முதன் முறையாக சாம்பியன் பட்டம் சாதனை படைத்திருந்தது.

இதைத் தொடர்ந்து 2026-ம் ஆண்டுக்கான லாரஸ் விருதுக்கு ஆண்டின் சிறந்த அணிகள் பிரிவுக்கு இந்திய மகளிர் கிரிக்கெட் அணியின் பெயர் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. இதற்கான அதிகாரப்பூர்வ அறிவிப்பு ஸ்பெயினின் மாட்ரிட் நகரில் நேற்று நடைபெற்றது. இதன் மூலம் சிறந்த அணிக்கான பிரிவுக்கு பரிந்துரை செய்யப்பட்ட முதல் மகளிர் கிரிக்கெட் அணி என்ற பெருமையை இந்திய அணி பெற்றுள்ளது. இது இந்திய மகளிர் அணியின் செயல் திறனுக்கு கிடைத்த அங்கீகாரமாக பார்க்கப்படுகிறது.

### ஐசிசி தரவரிசையில் மந்தனா முதலிடம்

**துபாய், மார்ச் 5:**

மகளிர் ஒருநாள் கிரிக்கெட் பேட்டர்களுக்கான தரவரிசை பட்டியலை ஐசிசி வெளியிட்டுள்ளது. இதில் இந்திய அணியின் தொடக்க வீராங்கனையான ஸ்மிருதி மந்தனா 790 புள்ளிகளுடன் முதலிடத்தை பிடித்துள்ளார்.

சமீபத்தில் முடிவடைந்த ஆஸ்திரேலியாவுக்கு எதிரான தொடரில் மந்தனா 58 மற்றும் 31 ரன்கள் எடுத்திருந்தார். தென் ஆப்பிரிக்காவின் லாரா வால்வார்ட் 782 புள்ளிகளுடன் 2-வது இடத்துக்கு தள்ளப்பட்டார். ஆஸ்திரேலியாவின் பெத் மூனி 2 இடங்கள் முன்னேறி 749 புள்ளிகளுடன் 3-வது இடத்தை பிடித்துள்ளார். இந்திய அணியின் கேப்டனான ஹர்மன்பிரீத் கவுர் 4 இடங்கள் முன்னேறி 652 புள்ளிகளுடன் 9-வது இடத்தை எட்டியுள்ளார்

# அபுதாபி, ஷார்ஜா விமானங்கள் ரத்து: கோவையில் தங்க நகை, காய்கறி ஏற்றுமதி பாதிப்பு

**கோவை, மார்ச் 5:**

ஈரான், இஸ்ரேல், அமெரிக்கா இடையே போர் நீடித்து வருவதால், வளைகுடா நாடுகளில் போர் பதற்றம் ஏற்பட்டுள்ளது. பல நாடுகளில் விமான நிலையங்கள் மூடப்பட்டுள்ளன. இதனால் வெளிநாடுகளில் இருந்து இந்தியாவுக்கும், இந்தியாவில் இருந்து வெளிநாடுகளுக்கும் செல்ல முடியாமல் பயணிகள் அவதிப்பட்டு வருகிறார்கள்.

கோவை விமான நிலையம் வழியாக இயக்கப்படும் விமானங்களும் ரத்து செய்யப்பட்டுள்ளன. கோவையில் இருந்து அபுதாபி மற்றும் ஷார்ஜாவுக்கு விமானங்கள் இயக்கப்பட்டு வந்தது. தற்போது போரின் காரணமாக இந்த விமானங்கள் ரத்து செய்யப்பட்டுள்ளன. இதனால் கோவையில் இருந்து வளைகுடா நாடுகளுக்கு பயணிகள் செல்ல முடியவில்லை. வேறு நகரங்களின் விமானநிலையம் வழியாக செல்ல வேண்டிய நிலை உள்ளது. அதுவும் விமானங்கள் புறப்படுமா, நிறுத்தப்படுமா என்ற சந்தேகத்தில் பயணிகள் கடும் அவதிக்குள்ளாகி உள்ளனர். கோவையில் இருந்து விமானம் மூலம் காய்கறிகள், பூக்கள் ஏற்றுமதி செய்யப்பட்டு வந்தன. இவை பாதிக்கப்பட்டுள்ளது. தங்க நகை ஏற்றுமதியும் முடங்கி கிடக்கிறது.

வரும் நாட்களில் நிலைமை சீரடையும்போது கோவையில் இருந்து வெளிநாடுகளுக்கான விமான போக்குவரத்து நடைபெறும் என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

வழக்கமான நாட்களைவிட விமானத்தில் செல்லும் பயணிகளின் எண்ணிக்கையும் குறைந்துள்ளது. இதனால் விமான நிலையத்தில் குறைந்த எண்ணிக்கையிலான கூட்டமே காணப்படுகிறது.

# மத்திய கிழக்கு நாடுகளில் போர் பதற்றம்: ஏற்றுமதி தடைபட்டதால் ஏலக்காய் விலை குறைந்தது

**சென்னை, மார்ச் 5:**

மத்திய ஆசிய நாடுகளில் ஒன்றான கவுதமாலாவில் ஏலக்காய் உற்பத்தி அதிகம் நடைபெறுகிறது. ஆனால், கடந்த ஆண்டு உற்பத்தி குறைந்ததால், இந்தியாவில் உற்பத்தி செய்யப்படும் ஏலக்காய்களுக்கு அதிக விலை கிடைத்து வந்தது.

அதாவது, ஏற்றுமதி விலையாக ஒரு கிலோவுக்கு தரத்தை பொறுத்து ரூ.2,600 முதல் ரூ.2,950 வரையும், உள்நாட்டு விலையாக கிலோவுக்கு ரூ.2,400 முதல் ரூ.2,600 வரையும் விற்பனை ஆனது.

தற்போது, ரம்ஜான் நோன்பு தொடங்கியிருப்பதால், அரபு நாடுகளுக்கு முன்னெப்போதும் இல்லாத அளவுக்கு அதிகமாக ஏலக்காய் ஏற்றுமதி செய்யப்படும் என்று எதிர்பார்க்கப்பட்டது. இந்த நிலையில், மத்திய கிழக்கு நாடுகளில் தற்போது ஏற்பட்டுள்ள போர் பதற்றத்தால் ஏலக்காய் ஏற்றுமதி தடைபட்டுள்ளது.

ஏற்கனவே, கிடைத்த ஆர்டர்களுக்கும் ஏலக்காய் அனுப்ப முடியாத நிலை உள்ளது. மேலும், ஏலக்காய் சீசனும் முடிவடைய இருப்பதால், ஒரு கிலோ ஏலக்காய் தற்போது ரூ.2,400-ல் இருந்து ரூ.2,250 ஆக விலை குறைந்துள்ளது. இடுக்கி ஏலக்காய் சந்தைக்கு ஒரு நாளில் 1லட்சம் கிலோ வரத்து இருக்கும் நிலையில், கிலோவுக்கு ரூ.150 வரை விலை குறைந்துள்ளதால், வர்த்தகமும் ரூ.1.50 கோடி வரை குறைந்துள்ளது.

# தமிழ் மொழி மீது பிரதமர் மோடி கொண்டுள்ள பற்றை தமிழக மக்கள் அறிவார்கள்! - இபிஎஸ்

**சென்னை, மார்ச் 5:**

புதிதாக கட்டி முடிக்கப்பட்ட திருச்சி மண்டல ரயில்வே அலுவலக நுழைவு வாயிலில் ‘கர்தவ்ய த்வார்’ என ஹிந்தியில் பெயர் வைக்கப்பட்டுள்ளதற்கு தமிழகத்தில் கடும் கண்டனம் எழுந்து வருகிறது.

திமுக மற்றும் கூட்டணி தலைவர்கள் மட்டுமன்றி பாஜகவின் தமிழிசை சௌந்தரராஜன், பாஜக கூட்டணியில் உள்ள அமமுக பொதுச் செயலாளர் டிடிவி தினகரன் உள்ளிட்டோரும் எதிர்ப்பு தெரிவித்து வருகின்றனர். முதல்வர் மு.க. ஸ்டாலினும் இதற்கு எதிர்ப்பு தெரிவித்து எக்ஸ் பக்கத்தில் பதிவிட்டிருந்தார்.

பல்வேறு எதிர்ப்புகளைத் தொடர்ந்து ஹிந்தியில் உள்ள பெயரை அகற்ற தெற்கு ரயில்வே ஒப்புதல் தெரிவித்துள்ளது.

இந்நிலையில் அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி தனது எக்ஸ் பக்கத்தில்,

“புதியதாக கட்டி முடிக்கப்பட்ட திருச்சி மண்டல ரயில்வே அலுவலகத்தின் நுழைவு வாயிலுக்கு “கர்த்தவ்ய துவார்” என இந்தியில் பெயரிடப்பட்டுள்ளதாக செய்திகள் வருகின்றன.

தமிழகத்தில் உள்ள மத்திய அரசின் நிறுவனங்களில் தமிழ், ஆங்கிலம், இந்தி ஆகிய மொழிகளில் பெயர்கள் குறிப்பிடப்படும் நிலையில், இந்த வாயிலின் பெயரில் உள்ள தமிழ்க் குறிப்பு உரிய மொழிபெயர்ப்பு இல்லாமல், இந்திக்கான சொல்லாகவே பொறிக்கப்பட்டுள்ளது. இதற்கான எதிர்க்குரல்களுக்கு மதிப்பு அளித்து, தற்போது இந்திப் பெயரை அகற்றிட ரயில்வே அதிகாரிகள் ஒப்புதல் அளித்துள்ளதாக செய்திகள் வருகின்றன. பிரதமர் மோடி தலைமையிலான மத்திய அரசு தமிழ் மொழியின் மீது கொண்டுள்ள பற்றை தமிழக மக்கள் நன்கறிவார்கள். உலக நாடுகளுக்கு செல்லும்போதுகூட உலகின் தொன்மைமிகு மொழியாம் நம் தமிழின் சிறப்புகளை பெருமிதத்தோடு குறிப்பிடும் நமது பிரதமர், சமீபத்தில் மலேசியப் பல்கலைக்கழகத்தில் “திருவள்ளுவர் இருக்கை” அமைக்க மலேசிய அரசோடு ஒப்பந்தம் கையெழுதிட்டதும் நினைவுகூரத்தக்கது. இப்படி தமிழ் மொழிக்கான அங்கீகாரத்தை தொடர்ந்து மத்திய அரசு அளித்துவரும் நிலையில், இதுபோன்ற நிகழ்வுகளை தவிர்த்திட வேண்டும். எனவே, மத்திய அரசு உடனடியாக இதில் தலையிட்டு, மேற்கூறிய நுழைவு வாயிலுக்கு தமிழில் பெயர் சூட்டிட வேண்டும் என வலியுறுத்துகிறேன்.

## வணிகச் செய்திகள்

### பார்லேவின் புதிய “ஸ்மூத் கேசர் பாதாம்” சுவைமிக்க பால் பானம் தேசிய அளவில் அறிமுகம்

**கோவை, மார்ச் 5:**

பார்லே ஆக்ரோ நிறுவனம் தனது டெய்ரி குளிர்பானப் பிராண்டான ஸ்மூத் கீழ் புதிய “ஸ்மூத் கேசர் பாதாம்” சுவைமிக்க பால் பானத்தை தேசிய அளவில் அறிமுகப்படுத்தியுள்ளது. இந்தியர்கள் விரும்பும் பாரம்பரிய கேசர்பாதாம் சுவையை நவீன மற்றும் எளிதில் எடுத்துச் செல்லக் கூடிய வடிவில் வழங்குவதே இதன் நோக்கமாகும். இந்த புதிய பானம் ரூ.10 (80 மில்லி) மற்றும் ரூ.20 (150 மில்லி) அளவுகளில் நகர்ப்புறம் மற்றும் கிராமப்புற சந்தைகளில் கிடைக்கிறது. பாதாமின் ஊட்டச்சத்து நன்மைகள், குங்குமப்பூவின் இயற்கைச் சிறப்புகள் மற்றும் க்ரீமியான பால் சேர்க்கையுடன் தினசரி பயன்பாட்டிற்கு ஏற்ற வகையில் வடிவமைக்கப் பட்டுள்ளது.

தயாரிப்பை பிரபலப் படுத்த வெளிப்புற விளம் பரம், டிஜிட்டல் தளங்கள், சமூக ஊடகங்கள், இன்ஃப்ளுயன்சர் கூட்டாண்மைகள் மற்றும் கடை உள் காட்சிப்படுத்தல்கள் ஆகியவற்றை உள்ளடக்கிய ஒருங்கிணைந்த சந்தைப் படுத்தல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படுகின்றன. இதன் மூலம், உயர்தரத் தன்மையுடனும் பொதுமக்களுக்கு ஏற்ற விலையுடனும் கூடிய குளிர்பானமாக இதை நிலைநிறுத்த நிறுவனம் திட்டமிட்டுள்ளது. ஸ்மூத் சுவைமிக்க பால் வரிசையில் தற்போது சாக்லேட், சாக்லேட் ஹேசல்நட், டாபி கராமல் மற்றும் புதிய கேசர் பாதாம் உள்ளிட்ட வகைகள் இடம்பெற்றுள்ளன. மேலும், ஸ்மூத் லஸ்ஸி வரிசையும் அறிமுகப்படுத்தப்பட்டு டெய்ரி பானத் துறையில் நிறுவனத்தின் இருப்பை விரிவுபடுத்துகிறது.

# தோனிக்கு ரூ. 1,000 அபராதம் விதித்த காவல்துறை

**புதுடெல்லி, மார்ச் 5:**

இந்தியகிரிக்கெட்அணியின் முன்னாள் கேப்டன் மகேந்திர சிங் தோனி, போக்குவரத்து விதிமுறைகளை மீறியதற்காக ராஞ்சி காவல்துறையினர் அபராதம் விதித்துள்ளனர்.

ஜார்க்கண்ட் மாநிலம், ராஞ்சியின் சிமாலியா பகுதியில் தோனியின் வீடு அமைந்துள்ளது. ராஞ்சியில் இருக்கும் நாள்களில் தோனி வெளியே செல்லும்போது அவரே கார் மற்றும் இருசக்கர வாகனத்தை ஓட்டிச் செல்வது வழக்கம். பலமுறை கார் மற்றும் இரு சக்கர வாகனங்களை தோனி ஓட்டிச் செல்லும் காட்சிகள் இணையத்தில் வைரலாகப் பரவும். இந்த நிலையில், சமீபத்தில் தனது வீட்டின் அருகே அனுமதிக்கப்பட்ட வேகத்தைவிட கூடுதல் வேகத்தில் தோனி காரை இயக்கிச் சென்றது காவல்துறையின் தானியங்கி கேமிராவில் பதிவாகியுள்ளது.

இதனைத் தொடர்ந்து, மோட்டார் வாகனச்




சட்டத்தின் பிரிவு 183 இன் கீழ், தோனிக்கு ரூ. 1,000 அபராதம் விதிக்கப்பட்டிருப்பதாக ராஞ்சி போக்குவரத்து காவல்துறையினர் தெரிவித்து ள்ளனர். சில நாள்களுக்கு முன்னதாக, குடியிருப்பு நோக்கத்துக்காக ஒதுக்கப்பட்ட நிலத்தை வணிக ரீதியிலாக பயன்படுத்தியதாக ஜார்க்கண்ட் மாநில வீட்டுவசதி வாரியம் தோனிக்கு நோட்டீஸ் அனுப்பியிருந்தது.

ஐபிஎல் தொடர் தொடங்கவுள்ள நிலையில், சென்னைக்கு வருகை தந்துள்ள தோனி, சென்னை சூப்பர் கிங்ஸ் அணி வீரர்களுடன் இணைந்துபயிற்சி மேற்கொண்டு வருகிறார். 5 முறை சாம்பியன் பட்டத்தை வென்றசென்னைசூப்பர்கிங்ஸ் அணி, கடந்தாண்டு பிளே ஆஃப்சுற்றுக்கு முன்னேறாமல் புள்ளிப் பட்டியலில் கடைசி இடத்தை பிடித்தது.

இந்த சீசனில் பல்வேறு மாற்றங்களுடன் சென்னை சூப்பர் கிங்ஸ் அணியினர் தீவிரப் பயிற்சியில் ஈடுபட்டு வருகின்றனர்.

# “காமேனி படுகொலையில் மோடி அரசின் மவுனம் நடுநிலையல்ல; பொறுப்பை துறப்பது” - சோனியா காந்தி



புதுடெல்லி, மார்ச் 5:

ஈரான் உச்ச தலைவர் அயத்துல்லா அலி காமேனி படுகொலை செய்யப்பட்ட விவகாரத்தில், மத்திய அரசு மவுனம் காப்பது நடுநிலை அல்ல என்று காங்கிரஸ் மூத்த தலைவர் சோனியா காந்தி தெரிவித்துள்ளார். மேலும், சர்வதேச ஒழுங்கு சீர்குலைந்துள்ள இந்த நிலையில் மவுனம் என்பது பொறுப்பைத் துறப்பதற்குச் சமம் என்று விமர்சித்துள்ளார்.

இது தொடர்பாக ஆங்கில நாளிதழ் ஒன்றில் அவரது கட்டுரை வெளியாகியுள்ளது. அதில் சோனியா காந்தி, “பிப். 28-ம் தேதி அமெரிக்காவும் - இஸ்ரேலும் இணைந்து நடத்திய தாக்குதல்களில் ஈரான் உச்சத் தலைவர் அயத்துல்லா அலி காமேனி கொல்லப்பட்டதை மார்ச் 1 அன்று ஈரான் உறுதிப்படுத்தியது. அமெரிக்காவுக்கும் ஈரானுக்கும் இடையே பேச்சுவார்த்தை நடந்து வந்த நிலையில், அதற்கு நடுவில் பதவியில் இருக்கும் ஒரு நாட்டின் தலைவரை கொல்வது சர்வதேச உறவுகளில் தீவிர சிக்கலை ஏற்படுத்தும்.

அதிர்ச்சிகரமான இந்த விவகாரத்தில் இந்தியா காக்கும் மவுனம் குறிப்பிடத்தக்கதாக உள்ளது. அந்த படுகொலையையும் ஈரானின் இறையாண்மை மீறலையும் இந்திய அரசு கண்டிக்காமல் தவிர்த்துள்ளது. அமெரிக்காவும் இஸ்ரேலும் இணைந்து தொடங்கிவைத்த தாக்குதல்களைப் பற்றி குறிப்பிடாமல், ஈரான் மேற்கொண்ட பதிலடி தாக்குதலை மட்டுமே பிரதமர் நரேந்திர மோடி கண்டித்துள்ளார். அதோடு, இந்த விவகாரம் “ஆழ்ந்த கவலையை” ஏற்படுத்துவதாகவும், “பேச்சுவார்த்தை மற்றும் தூதரக ரீதியில் பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டும்” என்றும் பொதுவான கருத்துகளை மட்டுமே பிரதமர் மோடி வெளியிட்டார்.

ஒரு வெளிநாட்டு தலைவர் கொல்லப்பட்டது குறித்து, இறையாண்மை அடிப்படையிலும், சர்வதேச சட்டத்தின் அடிப்படையிலும் இந்தியா தனது நிலைப்பாட்டை தெளிவாக வெளிப்படுத்தி இருக்க வேண்டும். ஆனால், அப்படி ஒரு தெளிவான நிலைப்பாடு இந்திய அரசிடம் இருந்து வெளிப்படவில்லை. இது நமது வெளிநாட்டுக் கொள்கையின் நம்பகத்தன்மையை கேள்விக்குறியாக்குகிறது.

இந்தச் சூழலில் மவுனம் நடுநிலையல்ல. உலகின் மிகப்பெரிய ஜனநாயக நாடான இந்தியா, கொள்கை அளவிலான எதிர்ப்பை வெளிப்படுத்தாவிட்டால், சர்வதேச நெறிமுறைகள் சீரழிவதை அது எளிதாக்கும். சர்வதேச ஒழுங்கு சீர்குலைந்துள்ள இந்த நிலையில், மவுனம் என்பது பொறுப்பைத் துறப்பதாகும். இந்தியா தனது நிலைப்பாட்டைத் தெளிவாக வெளிப்படுத்த வேண்டும்.

கொலை நடந்ததற்கு 48 மணி நேரத்திற்கு முன்பு பிரதமர் நரேந்திர மோடி, இஸ்ரேலுக்குப் பயணம் மேற்கொண்டு, அந்நாட்டு பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு அரசுக்கு முழு ஆதரவை மீண்டும் உறுதிப்படுத்தியிருந்தார்.

புவி அரசியலைத் தாண்டி இந்தச் சம்பவத்தின் தாக்கங்கள் உலகம் முழுவதும் பரவி வருகின்றன. இந்தியாவின் நிலைப்பாடு இந்த துயரத்திற்கு மறைமுக ஒப்புதலாகத் தோன்றுகிறது. ஈரான் மீதான குண்டுவீச்சுகளையும் திட்டமிட்ட படுகொலைகளையும் காங்கிரஸ் கட்சி கண்டித்துள்ளது என்றார்.

## இந்தியாவில் எக்ஸ் தளத்தில் ஆபாச பதிவுகள் மற்றும் வீடியோக்களுக்கு தடை

புதுடெல்லி, மார்ச் 5:

சமூக வலைத்தளங்களில் பயனர்கள் அதிகம் பயன்படுத்தும் செயலியாக X தளம் உள்ளது. ‘ட்விட்டர்’ என்ற பெயரில் செயல்பட்டு வந்த இந்த தளத்தை எலான் மஸ்க் கடந்த 2022 ஆம் ஆண்டு வாங்கினார்.

எலான் மஸ்க் வாங்கிய பிறகு பெயர் மாற்றம் செய்யப்பட்டதுடன், பல்வேறு புதுப்புது அப்டேட்களும் கொண்டு வரப்பட்டுள்ளன. உலகளவில் 586 மில்லியன் பேரும், இந்தியாவில் மட்டும் சுமார் 30 மில்லியன் பேரும் இந்த தளத்தை பயன்படுத்துகிறார்கள். எக்ஸ் தளத்தைப் பொறுத்தவரை ஆபாச வீடியோக்கள் தாராளமாக வலம் வருவதாகவும், அவற்றிற்கு கடிவாளம் போட வேண்டும் என்றும் பயனாளர்கள் நீண்ட காலமாக கோரிக்கை விடுத்து வந்தனர். இந்த நிலையில், பயனர்கள் கோரிக்கையை ஏற்று எக்ஸ் நிறுவனம் அதிரடி முடிவெடுத்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. அதாவது, எக்ஸ் தளத்தில் ஆபாச பதிவுகள் மற்றும் வீடியோக்களுக்கு தடை விதிக்கப்பட உள்ளதாக கூறப்படுகிறது. இந்த தடை இந்தியாவிற்கு மட்டுமே அமல்படுத்தப்படும் என்றும் தகவல்கள் வெளியாகியுள்ளன. இந்த கட்டுப்பாடு தொடர்பாக பயனாளர்கள் ‘க்ரோக்’ ஏ.ஐ.யிடம் கேட்டபோது, இனி ஆபாச வீடியோ மற்றும் புகைப்படங்கள் பயனர்களுக்கு காட்டப்படாது என்றும், இந்திய அரசின் விதிகளை பின்பற்றி இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக கூறியதாக பலரும் தெரிவித்துள்ளனர்.

## அரசு மருத்துவமனை பிணவறையில் இருந்து சடலத்தின் உடல் பாகங்களை கவ்விச் சென்ற நாய்



ஐதராபாத், மார்ச் 5:

தெலுங்கானா மாநிலம் மஹாபூப்நகர் மாவட்டம் ஜட்சர்லா நகரில் அரசு மருத்துவமனை உள்ளது. இதனிடையே, குளத்தில் மூழ்கி உயிரிழந்த நபரின் சடலம் மருத்துவமனையில் உள்ள பிணவறையில் வைக்கப்பட்டிருந்தது. இந்நிலையில், மருத்துவமனையின் பிணவறைக்குள் இன்று நுழைந்த நாய் அங்கிருந்த சடலத்தின் உடல்பாகங்களை கடித்து குதறியது. பின்னர், சடலத்தின் உடல்பாகங்களை கவ்விக்கொண்டு பிணவறையில் இருந்து வெளியே ஓடியுள்ளது. பிணவறையில் இருந்து உடல்பாகங்களை கவ்விக்கொண்டு மருத்துவமனை வளாகத்தில் நாய் ஓடியதை சிலர் வீடியோவாக எடுத்து சமூகவலைதளத்தில் பதிவிட்டுள்ளனர். இந்த வீடியோ வைரலான நிலையில் இதுகுறித்து விசாரணை நடத்திய மாநில சுகாதாரத்துறை, மருத்துவமனையில் அலட்சியமாக செயல்பட்ட 4 ஊழியர்களை சஸ்பெண்ட் செய்து உத்தரவிட்டுள்ளது.

## ரூ.5,083 கோடிக்கு ஹெலிகாப்டர்கள், ஏவுகணைகள் கொள்முதல் - பாதுகாப்பு அமைச்சகம் ஒப்பந்தம்

புதுடெல்லி, மார்ச் 5:

இந்தியக் கடலோர காவல்படை மற்றும் கடற்படைக்கு ரூ.5,083 கோடி மதிப்பில் ஹெலிகாப்டர்கள், ஏவுகணைகள் கொள்முதல் செய்ய பாதுகாப்பு அமைச்சகம் ஒப்பந்தம் மேற்கொண்டுள்ளது.

இது குறித்து பாதுகாப்பு அமைச்சகம் வெளியிட்ட செய்திக் குறிப்பு: இந்தியக் கடலோர காவல்படைக்கு 6 எம்கே-II மேம்பட்ட இலகுரக ஹெலிகாப்டர்கள் மற்றும் இந்தியக் கடற்படைக்கு தரையிலிருந்து வானில் உள்ள இலக்கை அழிக்கவல்ல ஷெட்டில் ஏவுகணைகள் ஆகியவற்றை ரூ.5,083 கோடி மதிப்பில் கொள்முதல் செய்வதற்கான ஒப்பந்தத்தில் பாதுகாப்பு அமைச்சகம் கையெழுத்திட்டுள்ளது.



டெல்லியில் நடைபெற்ற இந்த ஒப்பந்தம், பாதுகாப்புத் துறை செயலாளர் ராஜேஷ் குமார் சிங் முன்னிலையில் கையெழுத்தானது. இவற்றில் உள்நாட்டிலேயே வடிவமைக்கப்பட்டு உற்பத்தி செய்யப்படும் திட்டத்தின் கீழ், பெங்களூருவில் உள்ள இந்துஸ்தான் ஏரோநாட்டிக்ஸ் நிறுவனத்துடன் ரூ.2,901 கோடி மதிப்பில் 6 எம்கே-II மேம்பட்ட இலகுரக ஹெலிகாப்டர்களை கொள்முதல் செய்ய ஒப்பந்தம் கையெழுத்தானது.

ரஷ்யாவின் ஜெஎஸ்சி ரோசாபோரான் எக்ஸ்போர்ட் நிறுவனத்துடன் ரூ.2,182 கோடி மதிப்பில் ஷெட்டில் ஏவுகணைகளை ஒப்பந்தம் செய்ய கையெழுத்தானது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஈரான் மோதல்; இந்தியாவின் கச்சா எண்ணெய் கையிருப்பு எத்தனை நாட்களுக்கு வரும்? வெளியான தகவல்

புதுடெல்லி, மார்ச் 5:




இந்தியாவிடம் தற்போது 25 நாட்களுக்கான கச்சா எண்ணெய் மற்றும் 25 நாட்களுக்கான சுத்திகரிக்கப்பட்ட எண்ணெய் கையிருப்பு உள்ளது. இதனால் மொத்தம் 8 வாரங்களுக்கு தேவையான கச்சா மற்றும் பெட்ரோலிய பொருட்களின் இருப்பு நம்மிடம் உள்ளது.

இதனால், கச்சா எண்ணெய், சமையல் கியாஸ் மற்றும் இயற்கை எரிவாயு ஆகியவற்றை இறக்குமதி செய்வதற்கான வேறு வழிகளை ஆராய்ந்து வருகிறோம் என அரசு கூறியுள்ளது.

மேற்காசிய நாடுகளிடம் இருந்து பெரிய அளவில் கச்சா எண்ணெய் மற்றும் இயற்கை எரிவாயுவை இறக்குமதி செய்ய கூடிய நாடாக இந்தியா உள்ளது.

இந்த சூழலில், மத்திய பெட்ரோலியம் மற்றும் இயற்கைஎரிவாயு துறைக்கான மந்திரி ஹர்தீப் சிங் பூரி இன்று, கச்சா எண்ணெய், சமையல் கியாஸ் மற்றும் பிற பெட்ரோலிய பொருட்கள் ஆகியவற்றை விநியோகம் செய்வதற்கு எவ்வளவு கையிருப்பு உள்ளது? என்பது பற்றி அமைச்சகத்தின் மூத்த அதிகாரிகளுடன் அவர் மறுஆய்வு மேற்கொண்டார்.

இதன்பின்பு பெட்ரோலிய அமைச்சகம் வெளியிட்ட செய்தியில், எதிர்வரும் சூழலை தொடர்ந்து கண்காணித்து வருகிறோம். கையிருப்பை உறுதி செய்யும் வகையில் தேவையான அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்படும் என தெரிவிக்கப்பட்டு உள்ளது.

# ஈரான் உச்ச தலைவர் கமேனி படுகொலையை ஆதரிக்கிறாரா மோடி? ராகுல் கேள்வி



புதுடெல்லி, மார்ச் 5:

அமெரிக்கா- இஸ்ரேல் கூட்டாக இணைந்து ஈரான் மீதான அரதிரடித் தாக்குதலில் ஈரான் உச்ச தலைவர் கமேனி படுகொலையை பிரதமர் மோடி ஆதரிக்கிறாரா? என காங்கிரஸ் தலைவர் ராகுல் காந்தி கேள்வி எழுப்பியுள்ளார்.

ஈரான் மீதான ஒருதலைபட்ச தாக்குதல்களும், மத்திய கிழக்கு நாடுகள் மீதான ஈரானின் தாக்குதல்களும் கண்டிக்கப்பட வேண்டும் என்று அவர் கூறினார்.

அமெரிக்கா - இஸ்ரேல் நடத்திய தாக்குதல்களில் ஈரானின் உச்ச தலைவர் அயதுல்லா அலி கமேனி படுகொலை செய்யப்பட்டதையடுத்து அவரின் கருத்துகள் வெளியாகியுள்ளன.

இதுதொடர்பாக ராகுல் வெளியிட்ட எக்ஸ் பதிவில்,

உலகில் இந்தியாவின் அந்தஸ்தை மௌனம் குறைக்கிறது என்பதை பிரதமர் மோடி புரிந்துகொள்ள வேண்டும்.

அமெரிக்கா, இஸ்ரேல் மற்றும் ஈரான் இடையே அதிகரித்து வரும் விரோதங்கள் பலவீனமான பிராந்தியத்தைப் பரந்த மோதலுக்குத் தள்ளுவதாக அவர் கூறினார்.

கிட்டத்தட்ட ஒரு கோடி இந்தியர்கள் உள்பட கோடிக்கணக்கான மக்கள் நிச்சயமற்ற தன்மையை எதிர்கொள்கின்றனர்.

பாதுகாப்பு கவலைகள் உண்மையானவை என்றாலும், இறையாண்மையை மீறும் தாக்குதல்கள் நெருக்கடியை மேலும் மோசமாக்கும்.

ஈரான் மீதான ஒருதலைபட்ச தாக்குதல்களும், மற்ற மத்திய கிழக்கு நாடுகள் மீதான ஈரானின் தாக்குதல்களும் கண்டிக்கப்பட வேண்டும்.

வன்முறையைத் தீர்க்க பேச்சுவார்த்தை மற்றும் கட்டுப்பாடும் மட்டுமே அமைதிக்கான ஒரே வழியாகும். இந்தியா தார்மீக ரீதியாகத் தெளிவாக இருக்க வேண்டும்.

சர்வதேச சட்டம் மற்றும் மனித உயிர்களைப் பாதுகாப்பதில் வெளிப்படையாகப் பேச நமக்குத் தைரியம் இருக்க வேண்டும்.

நமது வெளியுறவுக் கொள்கை இறையாண்மை மற்றும் சர்ச்சைகளை அமைதியான முறையில் தீர்ப்பதில் வேரூன்றியுள்ளது. அது நிலையானதாக இருக்க வேண்டும்.

இந்த வன்முறையை தீர்க்க பிரதமர் மோடி பேச வேண்டியது அவசியம். மௌனம் காப்பது ஏன்? உலக ஒழுங்கை வரையறுக்க நாட்டின் தலைவரைப் படுகொலை செய்வதை அவர் ஆதரிக்கிறாரா? இவ்வாறு ராகுல் காந்தி கேள்வி எழுப்பியுள்ளார்.

## கேரளா: யானைகளை பாதுகாக்கும் அதிநவீன ட்ரோனை அறிமுகம் செய்து வைத்தார் துணை ஜனாதிபதி

திருவனந்தபுரம், மார்ச் 5:

துணை ஜனாதிபதி சி.பி. ராதாகிருஷ்ணன் 2 நாட்கள் பயணமாக கேரளாவிற்கு வருகை தந்துள்ளார். இந்தநிலையில், வனப்பகுதியில் மனித தொடர்பு இல்லாமல் சுற்றி திரியும் காட்டுயானைகளை கண்காணிக்கவும் யானைகளுக்கு இடையே நடக்கும் மோதலை கண்டறியும் வகையில் வடிவமைக்கப்பட்ட அதிநவீன ட்ரோனை துணை ஜனாதிபதி சி.பி. ராதாகிருஷ்ணன் அறிமுகம் செய்து வைத்தார்.

இந்த விழாவில் கேரள ஆளுநர் ராஜேந்திர விஸ்வநாத் அர்லேகர் மற்றும் மத்திய பெட்ரோலியம், இயற்கை எரிவாயு மற்றும் சுற்றுலாத் துறை இணை மந்திரி சுரேஷ் கோபி ஆகியோர் முன்னிலையில் தொடங்கி வைக்கப்பட்டது. இந்த ட்ரோன் யானைகளை அமைதிப்படுத்தி மிக துல்லியமாக காட்டிற்குள் பாதுக்காப்பாக விரட்டும் வேலையை செய்ய உதவும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. வன ஊழியர்களுக்கு காட்டுப்பகுதியில் ஏற்படும் ஆபத்தை உணர்த்தும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. மேலும் யானைகள் எதிர்கொள்ளும் துன்பங்கள் மற்றும் யானைகளுக்குள் நடக்கும் மோதல்களையும் கண்காணித்து அதற்குரிய தீர்வுகாண இந்த ட்ரோன் உதவும். சுமார் பத்து வருடங்களுக்கு முன்பே, கருடா ஏரோஸ்பேஸ் (GARUDA AEROSPACE) நிறுவனம் தமிழ்நாடு வனத்துறையினருக்காக முதல் ட்ரோனை உருவாக்கியுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது

கடந்த காலங்களில், கருடா ஏரோஸ்பேஸ் நிறுவனம் இயற்கைக்கான உலகளாவிய நிதியம் (WWF) உள்ளிட்ட முன்னணி பாதுகாப்பு அமைப்புகளுக்கும், இந்தியா முழுவதும் உள்ள பல்வேறு வனத்துறைகளுக்கும் அதிகமான ட்ரோன்களை வழங்கியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மாநிலங்களவை எம்.பி. ஆகிறார்; நிதின் நபின்

புதுடெல்லி, மார்ச் 5:

பாஜக தேசிய தலைவர் நிதின் நபின், ராஜ்ய சபா எம்.பி.யாக தேர்வு செய்யப்பட இருக்கிறார்.

நாடாளுமன்ற ராஜ்ய சபா காலி பதவிகளுக்கான தேர்தல் நடைபெற உள்ள நிலையில், பாஜக வேட்பாளர் பட்டியல் வெளியாகியுள்ளது. அதில், பீகாரில் இருந்து பாஜக தேசிய தலைவர் நிதின் நபினும், சிவேஷ் குமாரும் போட்டியிட இருக்கின்றனர். அசாமில் இருந்து திராஷ் கவ்வாலா, ஜோகன் மோகன் ஆகியோரும், சத்தீஷ்கரில் இருந்து லட்சுமி வர்மாவும், அரியானாவில் இருந்து சஞ்சய் பாட்டியாவும், ஒடிசாவில் இருந்து மன்மோகன் சமல், சுஜித் குமார் ஆகியோரும், மேற்கு வங்காளத்தில் இருந்து ராகுல் சின்காவும் போட்டியிடுகின்றனர்.

## மாநிலங்களுக்கு உரிய அதிகாரம் வேண்டும்! மு.க.ஸ்டாலின் முயற்சிக்கு சித்தராமையா முழு ஆதரவு

புதுடெல்லி, மார்ச் 5:

மத்தியமாநில உறவுகள் குறித்த தேசிய அளவிலான உரையாடலை மீண்டும் தொடங்க வேண்டும் என்ற தமிழ்நாடு முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின் முயற்சிக்கு கர்நாடகாவின் முழு ஆதரவைத் தெரிவித்து அவருக்கு கர்நாடக முதல்-மந்திரி சித்தராமையா எழுதியுள்ள கடிதத்தில் கூறப்பட்டுள்ளதாவது:

கூட்டாட்சி என்பது வெறும் அரசியல் கோரிக்கை அல்ல - அது நமது அரசியலமைப்பின் அடிப்படை கட்டமைப்பாகும். பல ஆண்டுகளாக, நிதி மற்றும் சட்ட விவகாரங்களில் அதிகாரம் மத்திய அரசிடம் குவிக்கப்படுவது, நமது அரசியலமைப்பை உருவாக்கியவர்கள் வகுத்த சமநிலையைச் சீர்குலைத்துள்ளது.

மாநிலங்களுக்குத் தரப்பட்டுள்ள பொறுப்புகளை நிறைவேற்ற, அவற்றுக்கு உரிய அதிகாரமும், நிதி சுதந்திரமும் இருக்க வேண்டும். இந்தியாவின் வலிமையே அதன் கூட்டுறவு கூட்டாட்சி, அரசியலமைப்பு மீதான நம்பிக்கை மற்றும் பன்முகத்தன்மையை மதிப்பதில் தான் உள்ளது.

அனைத்து மாநிலங்களும் ஒன்றிணைந்து விவாதிக்கவும், கூட்டாட்சி தத்துவத்தில் சமநிலையை மீட்டெடுக்கவும் ‘மாநிலங்களுக்கு இடையேயான கவுன்சில்’ (INTER-STATE COUNCIL) போன்ற ஒரு வலுவான தளத்தை மத்திய அரசு அமைத்துத் தர வேண்டும் என்று வலியுறுத்துவேன். இந்தியாவின் ஜனநாயக மற்றும் கூட்டாட்சி கட்டமைப்பை வலுப்படுத்தும் முயற்சிகளில் ஆக்கபூர்வமாகப் பங்களிக்க கர்நாடகா தயாராக உள்ளது.

இவ்வாறு அந்த கடிதத்தில் கூறப்பட்டுள்ளது.

## மத்திய தகவல் ஒலிபரப்பு அமைச்சகத்தின் 16 நூல்கள்: துணை ஜனாதிபதி சி.பி.ராதாகிருஷ்ணன் வெளியிட்டார்

புதுடெல்லி, மார்ச் 5:

மத்திய தகவல் மற்றும் ஒலிபரப்பு அமைச்சகத்தின் வெளியீட்டுப் பிரிவால் பதிக்கப்பட்ட புகழ்பெற்ற தமிழ் அறிஞர்கள், பாரம்பரியம், கட்டிடக்கலை, இலக்கியம், கலாச்சாரம் மற்றும் நாகரிக சிந்தனைகள் குறித்த 16 புத்தகங்களை துணை ஜனாதிபதி சி.பி.ராதாகிருஷ்னான் டெல்லி துணை ஜனாதிபதி மாளிகையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் வெளியிட்டார்.

வடக்கிலிருந்து தென்னிந்தியா வரையிலான ஆன்மிக ஒற்றுமையைக் குறிக்கும் புனித மையமான ராமேசுவரம், ராமானுஜரின் வாழ்க்கை மற்றும் தத்துவம், வரலாற்று சிறப்புமிக்க நடுக்கல் பாரம்பரியம், அரிக்கமேட்டின் பண்டைய வர்த்தக மையம், நாயன்மார்கள் மற்றும் ஆழ்வார்களின் பக்தி இலக்கியம், இயற்கை விவசாய மரபுகள், பண்டைய தமிழ் இசைக் கருவிகள், தமிழ்நாட்டின் நாட்டுப்புற தெய்வங்கள் வளர்ந்து வரும் அறிவியல் தொழில்நுட்பங்கள், மீனாட்சி அம்மன் கோவில் மற்றும் பிரகதீஸ்வரர் கோவிலின் கட்டிடிக்கலை அற்புதங்கள் உள்ளிட்ட பல்வேறு கருப்பொருட்களை இந்த வெளியீடுகள் உள்ளடக்கியுள்ளன.

மணிமேகலை மற்றும் மீனாட்சிசுந்தரம் பிள்ளை பற்றிய படைப்புகளும் இதில் அடங்கியுள்ளன. இந்த நிகழ்ச்சியில் தகவல் ஒலிபரப்புத்துறை அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ், இணை அமைச்சர் எல்.முருகன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

## எந்த கப்பலுக்கும் அனுமதியில்லை: ஈரான் திட்டவட்ட அறிவிப்பு

**தெஹ்ரான், மார்ச் 5:**

ஹார்முஸ் நீரிணை வழியாக எண்ணெய் வர்த்தகத்தை அனுமதிக்க மாட்டோம் என்று ஈரானின் மூத்த ராணுவ ஆலோசகர் இப்ராஹிம் ஜப்பாரி திட்டவட்டமாக அறிவித்துள்ளார். ஹார்முஸ் நீரிணை வழியாகச் செல்லும் எந்தவொரு எண்ணெய்க் கப்பலும் ஈரான் ராணுவத்தின் தாக்குதலுக்கு உள்ளாகும். அப்பகுதியில் உள்ள எண்ணெய்க் குழாய்களும் ஈரானின் தாக்குதலுக்கு உள்ளாகும். அமெரிக்கா மேற்கு ஆசிய நாடுகளின் எண்ணெய்யைச் சார்ந்தே உள்ளது. அவர்களுக்கு ஒரு சொட்டு எண்ணெய் கூட வழங்கப்படாது என்பதை அவர்கள் தெரிந்து கொள்ள வேண்டும் எனவும் அவர் அறிவித்துள்ளார்.

## இரண்டாம் உலகப்போருக்கு பிறகு அதிகப் போர்களை சந்திக்கின்றோம்

இரண்டாம் உலகப் போருக்குப் பிறகு தற்போதுதான் உலகம் மிக அதிக போர்களை சந்திக்கிறது என ஐ.நா பாதுகாப்பு அவையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் பல ஆண்டுகள் இல்லாத அளவு பொதுமக்கள் படுகொலைகளையும் சந்தித்து வருகிறது. உலகில் ஐந்தில் ஒரு குழந்தை (சுமார் 47.3 கோடி பேர்) போர்நடை பெறும் பகுதிகளில் வசிக்கின்றனர். குழந்தைகளுக்கு எதிரான கடுமையான வன்முறைச் சம்பவங்கள் 2023-24-க்கு இடையில் 25 சதவீதம் அதிகரித்துள்ளன. பாலியல் வன்முறை வழக்குகள் 35 சதவீதம் அதிகரித்துள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தெற்கு சூடானில் 169 பேர் படுகொலை



தெற்கு சூடானில் உள்நாட்டுப் போரும் வன்முறையும் மீண்டும் உச்சகட்டத்தை எட்டியுள்ளது. அந் நாட்டின் வடக்குப்பகுதியில் பெண்கள், குழந்தைகள் முதியவர்கள் என 169 பேர் படுகொலை செய்யப்பட்டு ஒரே குழியில் புதைக்கப்பட்டு விட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. தாக்குதலைத் தொடர்ந்து ஆயிரக்கணக்கான மக்கள் மீண்டும் தங்களது இடத்தை விட்டு கட்டாயமாக இடம்பெயர வேண்டிய சூழலுக்குதள்ளப்பட்டுள்ளனர். சுமார் 1,000 பொதுமக்கள் அந்தப் பகுதியில் உள்ள ஐ.நா வளாகத்தில் தஞ்சமடைந்துள்ளதாக ஐ.நா அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

## சிறை நெரிசலைக் குறைக்க கைதிகளுக்கு பொது மன்னிப்பு

ஜிம்பாப்வே சிறைச்சாலைகளில் நிலவும் இட நெருக்கடியைச் சமாளிக்க, அந்நாட்டு ஜனாதிபதி எம்மர்சன் நங்காக்வா பொது மன்னிப்பு வழங்கியுள்ளார். இதன்படி 223 பெண்கள் உட்பட மொத்தம் 4,305 கைதிகள் விடுவிக்கப்படுவார்கள் என கூறப்பட்டுள்ளது. 2025 இரண்டாம் காலாண்டு தரவுகளின்படி, ஜிம்பாப்வே சிறைகளில் 24,000-க்கும் அதிகமான கைதிகள் அடைக்கப்பட்டுள்ளனர். இது சிறைகளில் உள்ள இடத்தின் அளவை விட மிக அதிகம் என கூறப்படுகிறது. நன்னடத்தையின் அடிப்படையில் விடுதலை யில் முன்னுரிமை அளிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## வளைகுடா நாடுகளிலிருந்து அமெரிக்கர்கள் வெளியேற உத்தரவு

15 வளைகுடா நாடுகளில் இருந்து அமெரிக்கர்கள் உடனடியாக வெளியேற வேண்டும் என அந்நாட்டு அரசு உத்தரவிட்டுள்ளது. அமெரிக்க தூதரக விவகாரங்களுக்கான உதவிச் செயலாளர் மோரா நம்தார் தனது சமூக ஊடகப் பதிவில், நாடுகளின் பட்டியலை குறிப்பிட்டு அங்குள்ள அமெரிக்கர்கள் வெளியேற வேண்டும் என கூறியுள்ளார். அமெரிக்கா-இஸ்ரேல் தூண்டிய போரின் காரணமாக இதுவரை மேற்கு ஆசியாவில் உள்ள 7 முக்கிய விமான நிலையங்களில் 3,400-க்கும் மேற்பட்ட விமானங்கள் ரத்து செய்யப்பட்டுள்ளன. இதனால் லட்சக்கணக்கான பயணிகள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

# அமெரிக்க நிலைகளை குறிவைத்து துபாய், கத்தாரில் ஈரான் தாக்குதல்!

**தெஹ்ரான், மார்ச் 5:**

ஈரான் - இஸ்ரேல் மோதல் இன்று 5-வது நாளை எட்டியுள்ள நிலையில், துபாய் மற்றும் கத்தாரில் உள்ள அமெரிக்க நிலைகளைக் குறிவைத்து ஈரான் தாக்குதல் நடத்தியுள்ளது.



இது குறித்து கத்தார் பாதுகாப்பு அமைச்சகம் வெளியிட்ட தகவலில், 'ஈரானின் இரண்டு ஏவுகணைகள் கத்தாரை நோக்கி ஏவப்பட்டன. அதில் ஒன்றை கத்தார் வான் பாதுகாப்பு அமைப்பு வீழ்த்தியது. மற்றொன்று, அல் உதைத்தில் உள்ள அமெரிக்காவின் மிகப் பெரிய விமானப் படை தளத்தைக் குறிவைத்தது. இருப்பினும் இதில் உயிர்ச் சேதம் ஏதும் இல்லை' என்று தெரிவித்துள்ளது.

கடந்த சனிக்கிழமை இஸ்ரேல் - அமெரிக்கா தாக்குதல் தொடங்கியதில் இருந்தே, வளைகுடா பகுதியில் உள்ள பல்வேறு அமெரிக்க தளங்களையும் குறிவைத்து ஈரான் தாக்குதல் நடத்தி வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

ஏற்கெனவே குவைத், கத்தார், துபாய், சவூதி அரேபியா, ஏன் ஓமனை கூட விட்டுவைக்காமல் ஈரான் தாக்கியுள்ள நிலையில், கத்தாரில் அமெரிக்க நிலைகளைக் குறிவைத்து புதிய தாக்குதலை மேற்கொண்டது கவனம் பெறுகிறது. அதேபோல், செவ்வாய்க்கிழமை மாலை, துபாயில் உள்ள அமெரிக்க தூதரக அலுவலகம் தாக்குதலுக்கு உள்ளானது.

இது குறித்து அமெரிக்க வெளியுறவு அமைச்சர் மார்கோ ரூபியோ கூறுகையில், "துபாயில் உள்ள அமெரிக்க தூதரகத்தின் பார்க்கிங் பகுதியில் ஈரான் ட்ரோன் தாக்குதல் நடத்தியுள்ளது. ஊழியர்களுக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படவில்லை. இருப்பினும், ஈரானின் பயங்கரவாத அரசால் அமெரிக்க தூதரங்கள் மற்றும் ராஜாங்க ரீதியிலான மற்ற அலுவலகங்கள் பாதிப்புக்கு உள்ளாகியிருக்கிறது" என்றார்.

இதனிடையே, லெபனான் நாட்டின் மீது இஸ்ரேல் ராணுவம் மீண்டும் புதிய தாக்குதல்களை நடத்தியுள்ளது. ஈரான் ஆதரவுப் படைகளான ஹிஸ்புல்லா படைகளுக்கு எதிராக தாக்குதல் நடத்துவதாக இஸ்ரேல் விவரித்துள்ளது.

இன்று காலையில் லெபனானின் பல பகுதிகளை இஸ்ரேல் ராணுவம் குறிவைத்தது. தலைநகர் பெய்ரூட்டின் தெற்குப் பகுதியில் உள்ள பொதுமக்கள் உடனடியாக பாதுகாப்பான இடங்களுக்குச் சென்றுவிடும்படி இஸ்ரேல் எச்சரித்துள்ளது.

## ஹார்முஸ் ஜலசந்தியில் முடங்கிய 700 கப்பல்கள்: உலக நாடுகளுக்கான கச்சா எண்ணெய் விநியோகம் பாதிப்பு

**தெஹ்ரான், மார்ச் 5:**

இஸ்ரேல் - ஈரான் போர் காரணமாக சுமார் 700 டேங்க்கர் கப்பல்கள் ஹார்முஸ் ஜலசந்தியில் முடங்கி உள்ளன. இதனால் உலக நாடுகளுக்கான கச்சா எண்ணெய் விநியோகம் பாதிக்கப்பட்டுள்ளது.



அமெரிக்காவும் இஸ்ரேலும் இணைந்து கடந்த சனிக்கிழமை முதல் ஈரான் மீது தாக்குதல் நடத்தி வருகின்றன. இதற்கு ஈரான் ராணுவமும் தக்க பதிலடி கொடுத்து வருகிறது.

இந்தப் போர் காரணமாக ஹார்முஸ் ஜலசந்தி வழியாகச் செல்லும் உலக நாடுகளுக்கு செல்லும் கச்சா எண்ணெய் கப்பல் போக்குவரத்து முற்றிலும் முடங்கியுள்ளது. இதனால் கிழக்கு-மேற்கு இடையிலான 86% எண்ணெய் விநியோகம் பாதிக்கப்பட்டு, எரிசக்தி சந்தை பெரும் நெருக்கடியைச் சந்தித்துள்ளது. கடற்படை பகுப்பாய்வு நிறுவனங்களான விண்ட்வர்ட் மற்றும் கெப்லர் தரவுகளின்படி, இந்த நீர்வழிப்பாதை அதிகாரப்பூர்வமாக மூடப்படவில்லை என்றாலும், நடைமுறையில் அது முடங்கியே உள்ளது.

மார்ச் 1-ம் தேதி 28 லட்சம் பேரல் எண்ணெயைச் சுமந்து சென்ற மூன்று கப்பல்கள் மட்டுமே ஹார்முஸ் ஜலசந்தியைக் கடந்தன. இது 2026-ன் தினசரி சராசரியான 1.98 கோடி பேரல்களில் இருந்து 86% சரிவாகும். மார்ச் 2-ம் தேதி அதிகாலை நிலவரப்படி, ஒரு சிறிய டேங்கர் மற்றும் ஒரு சரக்குக் கப்பல் மட்டுமே பிரதான பாதையில் நகர்ந்தன. ஈரான் நாட்டைச் சேராத சுமார் 706 டேங்கர் கப்பல்கள் தற்போது ஜலசந்தியின் இருபுறமும் வரிசையாக நிற்கின்றன. இதில் 334 கச்சா எண்ணெய் தாங்கிகள், 109 கச்சா எண்ணெய் சுத்திகரிப்புப் பொருட்கள் கொண்ட கப்பல்கள் மற்றும் 263 சுத்திகரிக்கப்பட்ட எரிபொருள் கப்பல்கள் அடங்கும். மேலும் 26 கப்பல்கள் சரியான இலக்கின்றி வளைகுடா பகுதிக்குள் மிதக்கின்றன.

ஓமன் வளைகுடாவிலும் நூற்றுக்கணக்கான கப்பல்கள் முடங்கி உள்ளன.

## அமெரிக்க - இஸ்ரேல் தாக்குதலில் ஈரானில் கொல்லப்பட்ட பள்ளி மாணவிகள் உட்பட 165 பேருக்கு ஒரே இடத்தில் கல்லறை

**தெஹ்ரான், மார்ச் 5:**

அமெரிக்கா மற்றும் இஸ்ரேலிய படைகள் நடத்திய தாக்குதலில் கொல்லப்பட்ட பள்ளி மாணவிகள் உட்பட 165 பேருக்காக வரிசையாகத் தோண்டப்பட்டுள்ள கல்லறைகளின் புகைப்படத்தை ஈரான் அரசு வெளியிட்டுள்ளது.



ஈரானின் மினாப் நகரில் உள்ள மிகப்பெரிய ராணுவ தளத்தை குறிவைத்து, கடந்த 28-ம் தேதி இஸ்ரேல் போர் விமானங்கள் தாக்குதல் நடத்தின. இதில் ராணுவ தளம் அருகே உள்ள பள்ளியைச் சேர்ந்த மாணவிகள் உட்பட 165 பேர் உயிரிழந்தனர்.

ஈரான் வெளியுறவுத்துறை அமைச்சர் அப்பாஸ் அரக்சி தனது 'எக்ஸ்' சமூக வலைதளத்தில் மக்களின் மனசாட்சியை உலுக்கும் ஒரு புகைப்படத்தைப் பகிர்ந்துள்ளார்.

அதில், திறந்தவெளி மைதானம் ஒன்றில் வரிசை வரிசையாக நூற்றுக்கணக்கான கல்லறைகள் தோண்டப்பட்டு, சுண்ணாம்புப் பொடியால் அடையாளமிடப்பட்டுள்ளன

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள பதிவில், "அமெரிக்க - இஸ்ரேல் குண்டுவீச்சில் கொல்லப்பட்ட மாணவிகள் உள்ளிட்டோருக்காக இந்தக் கல்லறைகள் தோண்டப்படுகின்றன.

அவர்களின் உடல்கள் சிதறிப் போயுள்ளன. காசா முதல் மினாப் வரை அப்பாவி மக்கள் ஈவு இரக்கமின்றி படுகொலை செய்யப்படுகின்றனர்" என குறிப்பிட்டுள்ளார்.

இந்தத் தாக்குதலுக்கு உள்ளான பள்ளியில் மீட்புப் பணியாளர்கள் சிதைந்த கான்கிரீட் இடிபாடுகளுக்கு இடையே தேடுதல் நடத்துவதும், அங்கிருந்து பள்ளிப் பைகள் மீட்கப்படுவதும் வீடியோக்களில் பதிவாகியுள்ளன.

ஐக்கிய நாடுகள் சபையில் இதுகுறித்து முறையிட்டுள்ள ஈரான், பொதுமக்கள் மீதான திட்டமிட்ட தாக்குதல் இது என்றும், இதனை 'போர்க் குற்றம்' மற்றும் 'மனிதகுலத்துக்கு எதிரான குற்றம்' என்றும் சாடியுள்ளது.

## ஈரான் உச்ச தலைவர் பதவிக்கு யார் வந்தாலும் படுகொலை உறுதி: இஸ்ரேல் எச்சரிக்கை

**டெல்அவிவ், மார்ச் 5:**

ஈரான் மீது இஸ்ரேல் - அமெரிக்கா இணைந்து நடத்திய தாக்குதலில், ஈரான் உச்ச தலைவர் அயத்துல்லா அலி காமேனி கொல்லப்பட்ட நிலையில், அந்நாடு புதிய உச்ச தலைவரை தேர்வு செய்யவுள்ள சூழலில், இத்தகைய எச்சரிக்கையை இஸ்ரேல் வெளியிட்டுள்ளது.

இது தொடர்பாக இஸ்ரேல் பாதுகாப்பு அமைச்சர் காட்ஸ் தனது எக்ஸ் பக்கத்தில் ஹீப்ரூ மொழியில் பகிர்ந்த பதிவில், "ஈரான் உச்ச தலைவர் பதவிக்கு யார் தேர்வு செய்யப்பட்டாலும் அவரை படுகொலை செய்வது உறுதி. அவரது பெயர் என்னவாக இருந்தாலும், அவர் எங்கு பதுங்கியிருந்தாலும் அவரைத் தேடி அழிப்போம். இதற்காக, நாங்கள் அமெரிக்காவுடன் இணைந்து முழு பலத்துடன் செயல்படுவோம். தற்போதைய ஈரான் ஆட்சி தன்னை மீள்கட்டமைப்பதற்கான வாய்ப்புகளை நசுக்குவோம். ஈரானிய மக்கள் இந்த ஆட்சியை தூக்கி எரிந்துவிட்டு புதிய ஆட்சியை அமைக்கும் சூழலை உருவாக்குவோம்" என்று தெரிவித்துள்ளார். மேலும், "இஸ்ரேலிய பிரதமருக்கும், இஸ்ரேலியப் படைகளுக்கும், எப்போதும் தயார் நிலையில் இருக்கும்படியும், போரில் அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்ளும்படியும் அறிவுறுத்தியுள்ளேன்" என்று காட்ஸ் தெரிவித்துள்ளார். ஈரான் ஊடகத் தகவலின்படி செவ்வாய்க் கிழமை இரவு ஈரானின் அடுத்த உச்ச தலைவராக காமேனியின் மகன் மோஜ்டபா (MOJTABA) தேர்வு செய்யப்பட்டதாகத் தெரிகிறது. புரட்சிகர இஸ்லாமியப் படைகளில் அழுத்தத்தின் பேரில் இத்தேர்வு நடந்துள்ளதாகவும் கூறப்படுகிறது.

இஸ்ரேல் - அமெரிக்கா இணைந்து நடத்திய தாக்குதலில் கடந்த பிப்.28 அன்று காமேனி கொல்லப்பட்டார். அவருடன், அவரது மகள், மருமகன், பேத்தி உள்ளிட்டோர் கொல்லப்பட்டனர். காயங்களுடன் சிகிச்சை பெற்றுவந்த காமேனியின் மனைவி கோஜஸ்தேஹ் பாகெர்ஸதேவும் உயிரிழந்தார். காமேனியின் இறுதி அஞ்சலி நிகழ்வு (மார்ச் 4) மாலை நடைபெறுகிறது. இதனையடுத்து இன்று மாலை முதல் 3 நாட்கள் அரசு துக்கம் அனுசரிக்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## அமெரிக்காவின் மிகப் பெரிய ரேடாரை அழித்துவிட்டோம்: ஈரான் ராணுவம் தகவல்

கத்தார் தலைநகர் தோஹாவில் அமெரிக்காவின் மிகப் பெரிய விமானப் படைத் தளம் உள்ளது. அங்கு 10,000-க்கும் மேற்பட்ட அமெரிக்க வீரர்கள் முகாமிட்டு உள்ளனர். நூற்றுக்கும் மேற்பட்ட போர் விமானங்கள் நிலைநிறுத்தப்பட்டு உள்ளன. தோஹா விமானப் படைத்தளத்தில் இருந்து புறப்படும் அமெரிக்க போர் விமானங்கள், ஈரான் மீது குண்டுமழை பொழிந்து வருகின்றன.

இந்த சூழலில் தோஹா விமானப் படைத் தளத்தில் நிறுவப்பட்டிருந்த அமெரிக்காவின் ஏஎன்/எப்பிஎஸ்-132 என்ற அதிநவீன ரேடாரை ஏவுகணை தாக்குதல் மூலம் அழித்து விட்டதாக ஈரான் கூறியுள்ளது.

இதுதொடர்பாக அந்த நாட்டு ராணுவம் வெளியிட்ட அறிக்கையில், "அமெரிக்காவின் ஏஎன்/எப்பிஎஸ்-132 ரேடார் சுமார் 5,000 கி.மீ. தொலைவு வரை கண்காணிக்கும் திறன் கொண்டது. கத்தாரில் நிறுவப்பட்டிருந்த இந்த ரேடாரை ஏவுகணை மூலம் அழித்துவிட்டோம்" என கூறப்பட்டுள்ளது.

## ஹோர்முஸ் நீரிணையில் சீனாவின் எண்ணெய் கப்பல்களுக்கு மட்டும் அனுமதி: ஈரான் அறிவிப்பு




ஈரான் மீது அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் நடத்தி வரும் தாக்குதல்களுக்கு மத்தியில், ஹோர்மஸ் நீரிணையை மூடிய ஈரான் சீனாவின் எண்ணெய் கப்பல்களுக்கு மட்டும் அனுமதி அளிப்பதாக அறிவித்துள்ளது.

போரின் போது ஈரானுக்கு ஆதரவாக இருந்ததற்காகவும், பொருளாதாரத் தடைகளை ஏற்க மறுத்ததற்காகவும் ஒரு நன்றிதெரிவிக்கும் அடையாளமாக சீனா கப்பல்களை மட்டும் ஈரான் அனுமதிப்பதாக ஈரானுக்கு ஆதரவு தெரிவித்தற்கு நன்றியாக ஹோர்மஸ் நீரிணையில் சீன எண்ணெய் கப்பல்களுக்கு ஈரான் அனுமதித்துள்ளது .

உலகின் சுமார் 20 சதவீத கச்சா எண்ணெய் இந்த நீரிணை வழியாகவே கடத்தப்படுகிறது. எனவே, இந்த மார்க்கத்தின் முடக்கம் சர்வதேச சந்தையில் கச்சா எண்ணெய் விலை உயர்வுக்கு வழிவகுக்கும் அபாயம் இருப்பதாக பொருளாதார நிபுணர்கள் எச்சரிக்கின்றனர்.

# மீண்டும் உங்கள் நாட்டில் குண்டு வீசுவோம் என டிரம்ப் மிரட்டல்

**கராகஸ், மார்ச் 5:**

வெனிசுலா ஜனாதிபதி மற்றும் அவரது மனைவியை அமெ ரிக்கா கடத்தியுள்ளது. இந்நிலையில் அந்நாட்டை தனக்குச் சாதகமாகப் பயன்படுத்த தாங்கள் சொல்வதை கேட்க வேண்டும். எங்களுக்கு ஏற்ற சட்டங்களை கொண்டு வர வேண்டும். இல்லை என்றால் மீண்டும் உங்கள் நாட்டில் குண்டு வீசுவோம் என டிரம்ப் மிரட்டல் விடுத்துள்ளார்.

பிப்ரவரி 19 அன்று வெனிசுலா நாடாளுமன்றம் சிறையில் உள்ள அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான பொது மன்னிப்புச் சட்டத்திற்கு ஒப்புதல் அளித்தது. அமெரிக்காவின் மிரட்டல் வெனிசுலா மீது குண்டு வீசி அந்நாட்டின் முன்னாள் ஜனாதிபதி நிக்கோலஸ் மதுரோ, அவரது மனைவி சிலியா புளோரஸ் ஆகிய இருவரையும் 2026 ஜனவரி மாதம் அமெரிக்க ராணுவம் கடத்திச் சென்று சிறை வைத்துள்ளது. அவர்களை விடுவிக்க வேண்டும் என வெனிசுலா இடைக்கால ஜனாதிபதி டெல்சி ரோட்ரிக்ஸ் தலைமையிலான அரசு தொடர்ந்து கோரிக்கை விடுத்து வருகிறது. இந்த சூழலை பயன்படுத்தி டிரம்ப் நிர்வாகம் வெனிசுலா அரசை மிரட்டி அவர்களுடன் சில ஒப்பந்தங்களைச் செய்து வருகிறது. குறிப்பாக எண்ணெய் உற்பத்தி துறையில் அமெரிக்க நிறுவனங்களின் பங்குகளை அதிகரிக்க அனுமதிப்பது, கியூபா உள்ளிட்ட ஏகாதிபத்திய எதிர்ப்பு நாடுகளுக்கு எண்ணெய் ஏற்றுமதிக்கு தடை விதிப்பது என எரிசக்தி துறையில் மாற்றம் கொண்டுவருவதற்காக ஹைட்ரோகார்பன் சட்டத் திருத்தத்தை கொண்டு வந்தது. அதன் பின் சிறையில் உள்ள, அரசுக்கு எதிராக போராடியவர்கள் மற்றும் அரசியல் கைதிகளை விடுவிக்க பொது மன்னிப்புச் சட்டத்தையும் கொண்டு வந்துள்ளது வெனிசுலா. தாங்கள் சொல்லும் விஷயங்களில் உடன்படாவிட்டால் மீண்டும் வெனிசுலா மீது குண்டு வீசுவோம் என டிரம்ப் நிர்வாகம் வெளிப்படையாக மிரட்டல் விடுத்ததன் பின்னணியில் தான் இத்தகைய சட்டங்கள் நிறைவேற்றப்படுவதாகவும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

முக்கிய அம்சங்கள் அந்நாட்டு நாடாளுமன்ற சிறப்புக் குழுவின்படி, இந்த பொது மன்னிப்புச் சட்டம் அங்கீகரிக்கப்பட்டதிலிருந்து சிறையில் இருந்த நூற்றுக்கணக்கானோர் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

மேலும் 4,293 பொது மன்னிப்புக் கோரிக்கைகள் வந்துள் ளன. ஏற்கெனவே பரோலில் இருந்த சுமார் 3,000 பேருக்கு இந்த சட்டத்தின் படி விடுதலை வழங்கப்பட்டுள்ளதாகக் கூறப்பட்டுள்ளது. கடந்த காலத்தில் அரசுக்கு எதிராகச் செயல்பட்டு கைதுக்கு பயந்து வெளிநாட்டுக்கு தப்பியோடியவர்களும் வக்கீல்கள் மூலம் இச்சட்டத்தின் கீழ் பொது மன்னிப்புக் கோரி விண்ணப்பிக் கலாம். எனினும் சம்பந்தப்பட்ட நபர் நேரில் ஆஜராக வேண்டும் என நிபந்தனை விதிக்கப்பட்டுள்ளது. 2002 ஏப்ரல் மாதம் வெனிசுலாவில் நடந்த ஆட்சிக் கவிழ்ப்பு முயற்சியின் போது சட்டம் ஒழுங்கை சீர்குலைத்த வர்கள், அரசியல் போராட்டங்களின் போது பொது மற்றும் தனியார் சொத்துக்களுக்குச் சேதம் ஏற்படுத்தியவர்கள், அரசுக்கு எதிராக செயல்பட்டதால் சட்ட நடவடிக்கைகளுக்கு உள்ளாகி வேலையிழந்த அரசு அதிகாரிகள் மீண்டும் பணியில் சேரவும் இந்தச் சட்டம் வழிவகை செய்கிறது. வெனிசுலாவின் இறையாண்மை க்கு எதிராக ஆயுதக் குழுக்களை தாக்குதல் நடத்த தூண்டி விட்டவர்கள் அல்லது நிதி உதவி செய்தவர்கள், வெளிநாட்டு ஆக்கிரமிப்புகளைத் தூண்டியவர்கள், நாட்டின் மீது விதிக்கப்பட்ட பொருளாதாரத் தடைகளை ஆதரித்து வரவேற்றவர்கள் என வெனிசுலாவிற்கு துரோகம் செய்தவர்களுக்கு இச்சட்டத்தின் அடிப்படையில் பொது மன்னிப்பு இல்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது.



# காங்கிரசுக்கு 28 இடங்கள் ஒதுக்கீடு: திமுக கூட்டணியில் ஒப்பந்தம் கையெழுத்து!

# திருச்சி வரும் பிரதமர் மோடி! 11 ஆம் தேதி பொதுக்கூட்டம்!



# “திமுக ஆட்சியில் தண்ணீர் இல்லாமல் தமிழ்நாடே திவால் ஆகப்போகிறது”

# ஈரான் உச்ச தலைவர் பதவிக்கு யார் வந்தாலும் படுகொலை உறுதி: இஸ்ரேல்

# திருப்பதியில் விபத்து; ஒரே குடும்பத்திலுள்ள 5 பேர் பலி


தமிழ்நாடு இ பேப்பர்.காம்

www. tamilnaduepaper.com

Tamilnaduepaper

சென்னை 05.03.2026 வியாழக்கிழமை இலவச இ–பேப்பர்